# நாயகன் வந்தானடி



ரமணிசந்திரன்

# நாயகன் வந்தானடி

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

சரித்திரப் புகழ் பெற்ற திருச்சி மலைக்கோட்டை! ஜீவநதியான காவேரியும் கொள்ளிடமுமாக வளத்துக்கும் குறைவில்லை. கூடவே ஆன்மீக முக்கியத்துவமும் இருந்ததாலோ என்னவோ நெளுநெளுவென்று மக்கள் கூட்டம் இங்குமங்குமாய் விரைந்து சென்று கொண்டிருந்தது.

கூட்ட நெரிசல் சுமனசிக்குக் கொஞ்சமும் பிடிக்காது என்றாலும், பல வண்ண ஆடை அணிகளோடு செல்லும் பல வகையான மனிதர்களைப் பார்க்க, அன்று  அவளுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

காரணம் . . .இனி எல்லாமே இனி நன்றாகிவிடும் என்ற நம்பிக்கை அவளுள் ஏற்பட்டிருப்பதாலா?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஏனெனில் சில மாதங்களாக . .ஏன், பல ஆண்டுகளாகவே இனிமையற்ற சூழ்நிலையில் வாழ்ந்ததும்,  எந்த விதமான நம்பிக்கையும் இல்லாமல் கடைசி சில மாதங்களில் அனுபவித்த தவிப்பும் வேதனையும் கொஞ்ச நஞ்சமில்லையே!

அது தாங்காமல் எங்கே போவது, என்ன செய்வது என்று புரியாமல், எதிர்காலத்துக்கான எந்த விதத் தெளிவான திட்டமும் இல்லாமல் வெளிச்சமற்றபகல் நிலவு போல மெலிதான ஒரு நூலை மட்டுமே பற்றி இந்த ஊருக்கு வந்தபோது, அவளது நெஞ்சு முழுதும் நிரம்பியிருந்தது, நிராசையும் அவநம்பிக்கையும் மட்டுமேதானே?

எப்படியோ இந்த ஊருக்கு வந்தாயிற்று. தங்கும் இடமாய்த் தலைக்குமேல் ஒரு கூரைக்கும் ஏற்பாடு செய்தாயிற்று.

மெலிதான நூல் என்று அவள் எண்ணி வந்தவள் செய்த மாபெரும் உதவி, அது.

இதற்கு மேல் பிழைப்புக்கு வழி தேடிக் கொள்வது, அவளது திறமை! முடியும் என்ற நம்பிக்கை, இப்போது அவளுக்கு நிறையவே இருந்தது.

ஒரு சாதகமான நிகழ்வு எவ்வளவு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்து விடுகிறது!

வேலை விஷயம் நாளை தொடங்க வேண்டிய பணி!

அதற்கு முன், தங்குவதற்கு ஒரு நல்ல பாதுகாப்பான இடத்தை ஏற்படுத்திக் கொடுத்த தோழிக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடன் ஒன்று இருந்தது.

பெரிய காரியம் ஒன்றுமில்லை. அவளுக்குப் பிடித்தமான கதாநாயக நடிகர் ஒருவரிடம் அவளது “ஸ்லாம்” புக்கில் கையெழுத்து வாங்கி வைக்க வேண்டும்.

அவளே செய்திருப்பாள். ஆனால் சுமனசியுடன் பேசிக் கொண்டிருந்ததில் நேரத்தைக் கவனிக்காமல் விட்டுவிட்டாள்.

இப்போது வேறு சில பணிகளை முடித்துக்கொண்டு, அவள் சொந்த ஊருக்குப் பயணத்தைத் தொடங்க வேண்டும்!

எனவே, இந்த வேலையை சுமனசியிடம் ஒப்படைத்தாள்.

அரிய பெரிய காரியமும் இல்லை! அவளுக்குப் பிடித்த அந்தக் கதாநாயக நடிகர் விழாவை முடித்துக்கொண்டு தியேட்டரில் இருந்து வெளியே வரும்போது, பத்தோடு பதினொன்றாக அவளும் ஸ்லாம் புக்கை நீட்டிக் கையெழுத்தை வாங்க வேண்டும். கையெழுத்துடன் கூடிய அந்தச் சிறு புத்தகத்தைப் பத்திரமாக வைத்திருந்து, ஒரு மாதம் கழித்துத் திரும்பி வரும் தோழி மந்தாகினியிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்! அவ்வளவே!

அதுவும் மந்தாவே சுமனசியைத் தேடி வந்து வாங்கிக் கொள்வாள்.

முன் பின் அறியாத ஊரில், தங்க நிழல் இன்றி நடுத் தெருவில் நில்லாமல் காத்து ஒரு கௌரவமான வசிப்பிடத்தை ஏற்பாடு செய்து கொடுத்தவள், அதன் பதிலாகக் கேட்ட சின்னஞ்சிறு சகாயம்!

இதைக் கூடச் செய்து தராவிட்டால், சுமனசி என்ன மாதிரிப் பெண்?

நடிகரின் பாராட்டு விழா நடந்துகொண்டிருந்த தியேட்டரும் அதிக தூரத்தில் இல்லை. அதை மந்தாகினி அடையாளம் சொல்லியிருந்தாள்.

அது மட்டுமல்ல. அங்கங்கே வைக்கப்பட்டிருந்த விளம்பர “பானர்”களும் வழியைத் துல்லியமாகக் காட்டின.

இவ்வளவு தூரம் வந்துவிட்டதால் அச்சம் அகன்று சுமனசியின் மனதில் தென்பும் தலை தூக்கியிருந்தது. அங்குமிங்கும் வேடிக்கை பார்த்தபடியே நடந்து சென்றவளுக்கு, விழா நடக்குமிடம் நெருங்க நெருங்க உள்ளூர சிறு பதைப்பு உண்டாயிற்று.

பத்தோடு பதினொன்றாகக் கையெழுத்தை வாங்கிவிடலாம் என்று எண்ணினாளே! இங்கே நூற்றோடு நூற்றி ஒன்றாக அல்லவா, காத்திருக்க நேரும்போல இருக்கிறது!

அப்படிக் காத்திருந்து ஹீரோவின் கையெழுத்தை வாங்கிக்கொண்டு செல்ல அவளுக்கு அவகாசம் இருக்கிறதா?

ஊகூம். அவ்வளவு நேரம் காத்திருக்க அவளால் முடியாது! . இயலாது!

சிக்கலில் மாட்டிக் கொண்டோமே! இப்போது என்ன செய்வது என்று சுமனசி யோசிக்கும்போதே, ஓர் இளைஞன் தியேட்டருக்குள் இருந்து வெளியே வந்தான்.

வெளியே நின்ற கூட்டத்தைப் பார்வையிட்டவன், செக்யூரிடியிடம் ஏதோ சொல்லிவிட்டு சுற்றுமதில் கேட்டுக்கு வந்தான்.

சுற்றிலும் சளசளத்த கூட்டம், அவன் வேண்டுகிற பாவனையில் கையை உயர்த்தவும் சற்று அமைதியாயிற்று.

அவன் உரத்த குரலில் பேசினான். "நான் யார் என்று அனேகமாக எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். தெரியாதவர்களுக்கு, நான் இந்தத் தியேட்டரின் பிஆர்ஓ. லாரென்ஸ். உள்ளே விழா முடிந்து தேனீர் விருந்து நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் எல்லோரும் உங்கள் ஸ்லாம் புக்கைத் தந்தீர்களானால், உள்ளே வரிசையாக அவர் முன் வைத்து ஆட்டோகிராஃப் வாங்கி, மறுபடியும் உங்களிடம் கொணர்ந்து கொடுத்து விடுவேன். " என்றான்.

நெளுநெளுவென்று ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக் கொண்டு எல்லோரும் அந்த லாரென்சிடம் ஓடினார்கள்.

ஊகூம். இப்படி இடித்துச் செல்ல அவளால் முடியாது. ஆனால் இதில் இன்னொன்றையும் அவள் கண்டாள். நின்ற கூட்டத்தில் பாதியை விடச் சற்று அதிகம் பேர்தான் நடிகரின் கையெழுத்துக்கு ஆசைப்பட்டவர்கள். அவர்கள் பிரிந்து சென்றுவிட, மற்றவர்கள் அங்கேயே நின்றார்கள்.

இவர்கள் அந்த நடிகர் உதயராஜனை நேரில் பார்க்கக் காத்திருப்போர் போலும்.

இவர்களுடனும் சுமனசியால் சேர முடியவில்லை. சேர்ந்து பயனில்லை.

காருக்குள்ளிருந்து தலையை நீட்டி மொத்தமாய் ஒரு கும்பிடோடு நடிகன் விரைந்து போய் விடலாம்.

ஆனால் வேறு என்னதான் செய்வது?

சின்னஞ்சிறு சகாயம் என்று சுமனசி எண்ணியது, மாபெரும் மலையைப் புரட்டும் செயலாக இப்போது அவளுக்குத் தோன்றியது!

ஆனால் அதற்காகச் சும்மா இருப்பது ரொம்பத் தப்பு. நன்றி கொன்றதாகிவிடும்!

ஒன்று மாற்றி ஒன்றாக என்ன செய்வது என்று சுமனசி யோசிக்கும்போதே, அந்த லாரன்ஸ் ஒரு ட்ரேயுடன் அங்கே வந்தான். ட்ரே நிறைய ஆட்டோகிராஃப் புத்தகங்கள்!

சொன்ன சொல் தவறாமல் கையெழுத்து வாங்கிய புத்தகங்களைக் கொண்டு வந்தவன், கொஞ்சம் தள்ளி இருந்த சின்ன கேட் பக்கம் கூட்டத்தை வரச் சொல்லி, ஒவ்வொருவராகப் பேர் சொல்லி அழைத்துக் கொடுக்கலானான்.

பெரிய கூட்டம் அங்கே சென்றுவிட, மீதமிருந்தவர்கள் சற்றுத் தள்ளியிருந்த பெரிய கேட்டைப் பரபரப்புடன் பார்த்துவிட்டு அந்தப் பக்கம் நகர்ந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே வரிசையாகக் கரம் கோத்துக் காத்து நின்ற செக்யூரிடி ஆட்களை ஒட்டியவாறு ஒரு பெரிய கார் நிதானமான வேகத்துடன் தியேட்டரை விட்டு வெளியே வந்தது.

மந்தா சொன்ன அந்த நடிகன்! இப்படி நிற்பார்கள் என்று எதிர்பார்த்து, கார்க் கதவை இறக்கி, ரசிகர்களை நோக்கிப் புன்னகையோடு கையாட்டியபடி இங்கிருந்து வெளியேறுகிறான்!

ரசிகர்களை உதயராஜ் அலட்சியப்படுத்துவது இல்லை என்று தோழி சொன்னது சுமனசிக்கு நினைவு வந்தது.

அப்படியானால் இது ஒன்றுதான் வாய்ப்பு!

கையில் இருந்த ஸ்லாம் புக்கை உயர்த்திப் பிடித்துக் காட்டியபடி, காரை நெருங்க சுமனசி முயற்சி செய்தாள்.

இரண்டாவது கூட்டத்தையும் தாண்டி வந்துவிட்ட கார் சட்டென நின்றது.

காரை விட்டு இறங்கி "என்ன மேடம்? கூட்டத்தில் இடிபடப் பிடிக்காதாக்கும்?" என்று இலகுவாகக் கேட்டபடி அவள் கையிலிருந்த புக்கை வாங்கிக் கையெழுத்திட்ட நடிகன், எதிர்பாராது பளிச்சிட்ட ஒரு வெளிச்சத்தில் அனிச்சை செயல் போல விலுக்கென நிமிர்ந்தான்.

மின்னல் வேகத்தில் திரும்பி, பின் கதவைத் திறந்து, அவளைக் காருக்குள் தள்ளிக் கார்க் கதவை அழுந்த மூடினான்.

உதயராஜ் தள்ளிய வேகத்தில் சீட்டில் விழுந்தவள் எழுமுன், கார் பேரோசையுடன் விரைந்து கிளம்பியது. "ஏ . . .மிஸ்டர் . . இந்தக் காரை . . . என்னை என்ன . ." என்றபடி அவள் எழ முயன்றால் கார் சந்துகளுக்குள் புகுந்து இங்குமங்கும் திரும்பிய வேகத்தில் மறுபடியும் சீட்டிலிருந்து விழுந்தாள். விழுந்த அதிர்ச்சியில் சீட்டுக்கு அடியில் போய்விட்ட கைகால்களை உருவி ஒருவாறு எழுந்து பார்த்தால் கார்

எங்கே போய்க்கொண்டு இருக்கிறது என்பதே அவளுக்குப் புரியவில்லை.

சும்மாவுமே அவள் அறியாத ஊர்!

இவன் என்ன, அவளைக் கடத்திக்கொண்டு போகிறானா?

காரைத் திறக்க முயன்று தோற்றுவிட்டு, “எங்கே போகிறீர்கள்? முதலில் காரை நிறுத்துங்கள் . .நிறுத்துங்கள்!” என்று சுமனசி கத்தினாள்.

“ப்ளீஸ், கொஞ்சம் கத்தாமல் இருக்கிறாயா? ஓட்டுவதில் என் கவனம் கலைகிறது. இதையும் கேட்டுக்கொள். இப்போது உன்னைக் காப்பாற்றத்தான், காரை இப்படி ஓட்டுகிறேன்.” என்றான் அவன். “எதற்கும் தலையைக் காட்டாமல் குனிந்து முகம் வெளியே தெரியாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்.”

“காப்பாற்ற” என்ற வார்த்தை மந்திரமாக வேலை செய்ய அவள் அமைதியானாள். கூடவே முகத்தை வேறு வெளியே காட்டாதே என்கிறானே!

கார் வேகமாகப் போயிற்று.

இவ்வளவு தூரம் வந்தாயிற்று, இனிப் பிரச்சினை இராது என்று எண்ணினாளே! ஒரு வேளை அடி தாங்காமல் அக்கா ஏதேனும் சொல்லிவிட்டாளோ?

உள்ளூர எழுந்த அச்சத்தில், சுமனசிக்கு வெளியே பார்க்கவே பயமாக இருந்தது.

ஆனாலும் அவளுக்கு அப்படி ஓர் ஆபத்து இருப்பது, இவனுக்கு எப்படித் தெரியும்?

அதைக் கேட்டு, மறுபடியும் ஓட்டுகிறவனின் கவனத்தைக் கலைக்கவும் அவளுக்குத் தயக்கமாக இருந்தது. ஆனால் அவனை நம்பிச் சும்மா உட்கார்ந்திருக்கவும் கலக்கமாகவே இருந்தது.

இன்னும் ஓர் ஐந்து நிமிஷங்கள் பார்த்துவிட்டு, அவனிடம் கேட்டுவிட வேண்டியதுதான் என்று முடிவு பண்ணிக்கொண்டு சுமனசி காத்திருந்த போது காரை அவன் தானாகவே நிறுத்தினான்.

நிறுத்தப்பட்ட இடமும் ஆள் நடமாட்டம் இல்லாத கானகப் பிரதேசம் அல்ல. அங்கங்கே ஓரிருவர் சென்றுகொண்டுதான் இருந்தார்கள். அதனால் பெரிய ஆபத்து எதுவும் நேர வழியில்லை.

சற்றே ஆறுதல் அடைந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். அடையாளம் தெரிய வாய்ப்பில்லை என்றாலும், நகரம் விரிவடைந்ததில் ஒரு சில ஆண்டுகளுக்குள் உருவான ஏதோ ஒரு காலனி என்று புரிந்தது.

இங்கே எதற்காகக் கூட்டி  வந்திருக்கிறான்? ஒன்றும் புரியாமல் கேள்வியாய் அவனைப் பார்த்தாள் அவள்.

அரைமணி நேரத்துக்கும் மேலாக ஓட்டியதாலோ என்னவோ விரல்களை மூடித் திறந்து தளர விட்டபடி, “அப்பாடா,! இந்தப் பத்திரிகையாளர் கூட்டம் யாரும் இதுவரை நம்மைப் பின்தொடர்ந்து வரவில்லை.  அப்படி வந்து உன்னைக் கண்டு விட்டிருந்தால் அவ்வளவுதான். உன்னைக் கேள்விகளாலேயே குதறியிருப்பார்கள். உன் முகத்தைப் பார்க்க விடாமல் உள்ளே தள்ளிவிட்டேன் என்றாலும் உடையைக் கண்டு தொடர்வார்களோ என்று யோசனையாக இருந்தது. இனி அந்தக் கவலை இல்லை. அதனால் தைரியமாக இனி நீ போகலாம்.” என்றான். அவன், புகழ் பெற்ற நடிகன் உதயராஜ்!

ஒரு கணம் சுமனசிக்கு ஒன்றும் புரியவில்லை! இவன்   .இவன் என்ன சொல்லுகிறான்? அவளைக் காப்பாற்ற எண்ணியது . . .பபத்திரிகைக்காரர்களிடம் இருந்தா? ஆ . .னால் அவள் அஅஞ்சியது . சே! ஆபத்து கூடவா, ஆளுக்கு ஆள் வேறு வேறாய் மாறும்?

அவனது நிலையில் அது பெரிதாக இருக்கலாம். . . ஆனால் அவள் நிலையில் . . முக்கியமாக. . .   முக்கியமில்லாததாய்  . .

துண்டு துண்டாக ஏதேதோ எண்ணங்கள் மனதில் குமிகையில், அவன் அவளைப் போகச் சொன்னது பேரோசையாகக் காதை அதிரச் செய்தது.

எங்கே போவது? அவளுக்கு இந்த ஊரே தெரியாதே.

ஐயோ! அதை விடவும், மந்தாகினி சொன்ன ஆன்ட்டி வீடு! ஏழு மணிக்குள் அவள் அங்கே இருக்க வேண்டுமே!

அவசரமாகக் கையைத் திருப்பி மணியைப் பார்த்தவளின் “ஐயோ!” கதறலாகவே ஒலித்தது!

“ஷ்! எதற்குக் கத்துகிறாய்? உன் கத்தலில் கூட்டம் கூடினால் மறுபடி ஆபத்தாகிவிடப் போகிறது! உன்னைத்தான் போகச் சொன்னேனே! கிளம்பு. அதிகத் தாமதம் ஆகுமுன்  . . “

“எங்கே போவது?” என்று சீறினாள்  அவள்.

திகைத்து நோக்கியவனின் பார்வை மெல்ல மாறலாயிற்று. “உன் வீட்டுக்குத்தான். வேறு எங்கே?” என்றான் அவன், அவளைக் கூர்ந்து பார்த்தபடி .

“வீடா? அது எங்கே இருக்கிறது? இதற்கு மேல் நான் நடுத்தெருவில்தான் நிற்கவேண்டும்.” என்றாள் அவள் மறுபடியும் சீற்றமாகவே.

உதயராஜனின் முகம் சற்றுக் கடினமுற்றது.

“இதோ பார், நீ ஏதோ கதை சொல்கிறாய் என்று நினைக்கிறேன். மணி ஏழுதான் ஆகிறது. அதற்குள் வீட்டுக்குள் விட மாட்டேன் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அதனால் நடிப்பதை நிறுத்தி, உன் வீட்டுக்குப் போய்ச் சேர். “ என்று காரின் புறம் திரும்பினான் அவன்.

அனாதையாக நடுத்தெருவில், மெய்யாகவே நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போகப் போகிறான்! தலைக்கு மேல் பாதுகாப்பாய் ஒரு கூரை என்று மகிழ்ந்தாளே! அதை நாசம் பண்ணிவிட்டு, அவன் பாட்டில் நிம்மதியாகப் போக எண்ணுகிறான்!

“நடிப்பது உங்கள் தொழில்!” என்றாள் அவள் கடுங் குரலில். “ஆனால் ஆனால் . .” எனும்போதே நெஞ்சுக் கூடு காலியாக இருப்பதைப் போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.

“ஆனால் என்னைக் காப்பாற்றுவதாகச் சொல்லி ஊர் சுற்றினீர்களே, அதன் பலனாக இப்போது நான் மெய்யாகவே நடுத்தெருவில்தான் நிற்கப் போகிறேன்.” என்றாள் சோர்ந்துவிட்ட குரலில்.

சுமனசியின் கோபக்குரலை அவனால் அலட்சியம் செய்ய முடிந்தது. ஆனால் . .

திரும்பிப் பார்த்து, “நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை. மீடியாக்காரர்கள் உன்னைக் கண்ட கேள்வி கேட்டுத் தொல்லை செய்ய வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தில் உன்னைக் காரில் ஏற்றி, என் நேரத்தையும் வீணாக்கிக்கொண்டு சுற்றினேன். அது எப்படி உன்னை நடுத்தெருவில் நிறுத்தும் என்று எனக்கு சுத்தமாகப் புரியவில்லை. “ என்றான் அவன் எரிச்சலை உள்ளடக்கிய குரலில்.

தன்மீதே கொண்ட எரிச்சல் அது. இந்தப் பெண்ணுக்கு அவன் ஓர் உதவி செய்தான். அதற்கு நன்றி கூறிப் போய்க்கொண்டே இராமல், ஏதோ ஆதாயம் தேட முற்படுகிறாளோ என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால் ஒரு வேளை . . . இந்தப் பெண் ஏதேனும் சிக்கலில் மாட்டித் தப்பாக என்னமும் நேர்ந்துவிட்டால், அவனால் தன்னைத்தானே மன்னிக்கவும் முடியாது.

பெண்களுக்குத் தப்பு நேர்வதுதான் தினம் தினம் நடக்கிறதே!

அத்தோடு அவளிடம் ஏமாந்து போக, அவன் ஒன்றும் அப்படி ஏமாளி அல்லவே!

சுய நம்பிக்கை இருந்த காரணத்தினால், எச்சரிக்கையுடனேயே

அவளை விசாரித்தான்.

ஆதி முதல் அவள் கதையை என்னவென்று சொல்வது?

அப்போதைய பிரச்சினையை மட்டும் சுருக்கமாகச் சொன்னாள்.

சுமனசி இந்தத் திருச்சி நகருக்குப் புதியவள். ஒரு தோழி மூலமாக இங்கே பாதுகாப்பான தங்குமிடம் ஒன்று அவளுக்குக் கிடைத்தது. அதில் பிரச்சினை என்னவென்றால், ஏழு மணிக்குள் வீட்டுக்கு வந்து, அவளது இடத்துச் சாவியை வாங்கிக் கொள்ள வேண்டும்.

“அப்படிக் குறிப்பிட்ட நேரத்துக்குள் வராவிட்டால் வேறு யாருக்கேனும் வீட்டைக் கொடுத்து விடுவார்களா?”

“இல்லை. அவர்கள் வெளியூர் போகிறார்கள். ஊதியத்தோடு கூடிய விடுமுறைப் பயணம். முன் பதிவுப் பயணம். அதனால் தாமதிக்க முடியாது

“அதனால் என்ன? உன் தோழி இருப்பாளே, அங்கே போக வேண்டியதுதானே?”

“கடவுளே! அவளுக்குத் திருமணம். அவளும் இப்போது கேரளாப் பக்கம் போய்க் கொண்டிருப்பாள். அவள் வசித்த இடத்தைத்தான் . . .ச்சு, இதையெல்லாம் சொல்லி என்ன பயன்? உங்களால் எனக்குத் தங்குமிடம் இல்லாது போயிற்று. இந்த நேரத்தில் எங்கே போய் . .”

மறுபடியும் உதயராஜன் குறுக்கிட்டான். “ஆளாளுக்குப் பயணம் என்கிறாயே! பொறு. ஒருவேளை நீ சொன்ன இடத்தில் . . அந்த முகவரி வைத்திருக்கிறாய்தானே?”

“அதனால் என்ன பயன்?”

“நான் சரிபார்க்க வேண்டும். அதின்றி உன்னை நம்ப முடியாது.”

“சரி பார்க்க . . . அதனால் என்ன லாபம்? நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் . . .” என்று சொல்லும்போதே அவளது கண்களில் லேசான மலர்ச்சி தென்பட்டது. “ஒரு வேளை அவர்கள் யாரிடமாவது சாவியை . . . நடிகர் சார், கொஞ்சம் சீக்கிரமாகக் காரை அங்கே ஓட்டுங்களேன்., போய்ப் பார்க்கலாமே!” என்று கேட்டாள்.

“ஏறு. ஏறி வழியைச் சொல்லு.”

“வழியா? எனக்கு இந்த ஊர் தெரியாது என்றேனே. விலாசம் மட்டுமே .. “ என்று கைப்பையைத் திறந்து மந்தாகினி முகவரி எழுதிக் கொடுத்த காகிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

பார்த்துவிட்டு, “ம்ம் . .எனக்கு ஓரளவு தெரிந்த இடம்தான். ஆனால் அங்கே போய் ஏதாவது ஏமாற்று வேலை செய்யும் திட்டம்

இருந்தால், இரண்டு தரம் யோசித்துச் செய். என்னை ஏய்ப்பது அவ்வளவு எளிதல்ல. பலன் விபரீதமாக இருக்கும்!” என்று எச்சரித்தான் அவன்.

ஏய்ப்பதா? மானம் மரியாதையோடு தங்குவதற்கு ஓர் இடம் கிடைத்தால் அதை விட இப்போது வேறு என்ன வேண்டும்? இவன் நம்பினாலும், நம்பாவிட்டாலும் அவளுக்கு ஒன்றுமில்லை.

வெளிக் கதவு வரை பூட்டப்பட்டிருந்தது, சுமனசிக்கு அவ்வளவாக வருத்தத்தைத் தரவில்லை. பெரும் ஏமாற்றமாகவும் இல்லை.

ஆனால், அடுத்தடுத்த வீடுகளில் போய் விசாரித்தபோதும், ஒரு பலனும் இல்லை என்று ஆகவும் சுமனசி சோர்ந்து போனாள். அவள் தனியாகத்தான் போய் விசாரித்தாள்.

அவனைக் கண்டுவிட்டால் ஹா ஹூ என்பார்களே! கூட்டமும் சேர்ந்துவிடும்.

ஆனால் அவள் பேசுவது காதில் விழும் அளவு நெருக்கமாகவே காரை நிறுத்திக் கவனித்தான் இவன். ஆனால் அவனது சந்தேக மனப்பான்மையைப் பொருட்படுத்தும் மன நிலையில் சுமனசி இல்லை.

ஆனால் இவனால் அல்லவா எல்லாம் நாசமாகிப் போயிற்று!

“என்னிடம் ஒரு வார்த்தை கேளாமல், என்னைக் காருக்குள் தள்ளி காரை அவ்வளவு நேரம் ஓட்டி . . .எல்லாவற்றையும் நாசம் பண்ணிவிட்டீர்களே!” என்றாள் அழுகையும் ஆத்திரமுமாக.

“என்னைக் குற்றம் சொல்கிறாயா? இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமையில் இருக்கிறவள், நான் காரை அவ்வளவு தூரம் ஓட்டும்போதும் ஏன் வாயை மூடிக்கொண்டு பேசாமலே வந்தாய்? நீ அதை முதலில் சொல்லேன்!”

அவளிடமே குற்றம் காண்கிறானா? அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, “எப்படிக் கத்துவது? நீங்கள்தான் “காப்பாற்ற” என்று முதலிலேயே சொல்லிவிட்டீர்களே! என் அக்கா கணவர், மாமா யாரேனும் வந்துவிட்டார்களோ என்று பயந்து பேசாதிருந்தேன்.” என்று எரிச்சலோடு கூறினாள் அவள்.

“ஓ! அங்கே இன்னொரு கதையா? போகட்டும். இப்போது இந்தப் பிரச்சினையை முதலில் பார்ப்போம். உனக்கு இந்த ஊர் புதிது., இங்கே யாரையும் தெரியாது என்பது உன் கதை.?”

“கதையல்ல உண்மை. கிடைத்திருந்த முகவரி உங்கள் புண்ணியத்தில் இல்லாமல் போய்விட்டது.” என்றாள் அவள் கசந்த

குரலில்.

“அதுவும் உன் வார்த்தைகளே! பொறு. நான் முடித்து விடுகிறேன். நடிப்புத் துறையில் இறங்கி இந்த நாலு ஆண்டுகளில் நான் பல மோசமானவர்களைச் சந்தித்து இருக்கிறேன். அவர்கள் சொன்ன நம்ப முடியாத பல கதைகளைக் கேட்டும் இருக்கிறேன். அதனால் உன் பேச்சை எடுத்த எடுப்பில் என்னால் நம்ப இயலாது. கூறிய அளவில் அது நம்பிக்கைக்கு உரியதாகவும் இல்லை.

“முதலில் எப்படி, ஏன் அறியாத இந்த ஊருக்கு வந்து இந்த நிலையில் மாட்டிக்கொண்டாய் என்பதைச் சற்று விவரமாகச் சொல்லு. அதன் நம்பகத் தன்மையைப் பொறுத்துதான், உனக்கு ஏதாவது செய்வதா கூடாதா என்று நான் முடிவு செய்யக் கூடும்!”

என்றான் அமர்ந்த குரலில்.

உதயராஜனின் முடிவு என்னவாக இருக்கும் என்று சுமனசிக்கு அப்போதே தெரிந்து போயிற்று.

ஆயினும் பிச்சைக்காரர்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது என்பார்களே, அதுபோல அவள் இப்போது சிறகொடிந்த பறவை! ஏதேனும் உதவி இல்லாது முடியாது!

இவனுக்கு விவரம்தானே தேவை?

கேட்டுக்கொள் என்று மனதினுள் கூறிக்கொண்டு சுமனசி சொல்லலானாள்.

# அத்தியாயம் - 2

சுமனசிக்கு மட்டும் அதிருஷ்டம் என்று அணு அளவே இருந்திருந்தால் கூட, பிறந்ததுமே தந்தையை, பிறகு தாயை, அப்புறமும் அன்பாகவே வளர்த்த பெரியப்பா பெரியம்மாவை என்று பெரியவர்கள் அனைவரையுமே அவள் இழந்திருக்க மாட்டாள்!

பெரியம்மா மகளான அக்காவும் அன்பானவள்தான். ஆனால் சுமனசி அங்கிருப்பது, அக்கா சுந்தரிக்கும் அல்லவா ஆபத்தாகிவிட்டது!

அங்கேயும் இனி இருக்க முடியாத நிலை!

வேறு போக்கிடம் எதுவுமே கிடையாது.

ஆனாலும் யாரும் அறியாமல் வீட்டை விட்டுக் கிளம்பியே தீரவேண்டும் என்ற தீர்மானித்தது, அக்கா தங்கை இருவரும் சேர்ந்துதான்.

ஆனால் எங்கே போவது?

கடைசியாக நூலைக் கட்டி மலையை இழுப்பது என்பார்களே, அது போல ஆறேழு மாதங்களுக்கு முன் தற்செயலாகச் சந்தித்த தோழி . . தோழி என்று கூடச் சொல்ல முடியாதபடி நாலு ஆண்டுகள் ஒரே வகுப்பில் சேர்ந்து படித்த ஒருத்தி, துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுத்த அவளது அலுவலக எண்ணை எடுத்துக்கொண்டு சுமனசி வீட்டை விட்டுப் போய்விட இருவரும் முடிவெடுத்தார்கள்.

அன்று அதிகாலை நேரம். இன்னமும் கிழக்கு வெளுக்கத் தொடங்கவில்லை. வீட்டில் வேறு எந்த விதமான அசைவும் இல்லை.

அதாவது, அக்கா பால் வாங்கச் செல்லும் நேரம் இன்னமும் வரவில்லை.

முதல் முறையாக மனதுக்கு நிம்மதியைத் தந்த விஷயம் . . .அக்கா பால் வாங்கி வந்து காஃபி போட்டு வைக்காமல் மற்ற யாரும் படுக்கையை விட்டு அசையப் போவது இல்லை.

மெல்லத் தோளில் படிந்த அக்காவின் கரம், கிளம்பும் தருணம் நெருங்கிவிட்டதை சுமனசிக்கு உணர்த்தியது.

ஒரு கணம் அவள் மனம் மருண்டது. இங்கிருந்து கிளம்பிவிட்டால், அவள் தன்னந்தனி! இங்கே தலைக்கு மேல் இருக்கும் கூரையும், அறிந்த சுற்றுச் சூழலும் இல்லாது போகும்.

கூடவே இந்த வீட்டுக்குள் இருக்கும் பேராபத்தும் இல்லாது போகும். அதற்காகவே தன்னால் இயன்றவரை அன்பு

காட்டும் இந்த அக்காவும் கூட இல்லாமல் தனியாக உலகில் வாழ வேண்டும்.

எப்போதோ கூடப் படித்த மந்தாகினி ஆறு மாதத்துக்கு முன் தற்செயலாகச் சந்தித்தபோது தந்த விசிட்டிங் கார்டை நம்பி, இந்த ஊரை விட்டுச் செல்ல வேண்டும்.

செல்லுமிடத்தில் அவள் அங்கே இருக்கிறாளோ, இந்த ஆறு மாதங்களில் வேறெங்கும் போய் . . முகவரி மாற்றிக் கூடப் போயிருக்கலாம்., அல்லது வேற்றூரில் வேலை கிடைத்து ஊரை விட்டே சென்றிருக்கலாம்!

என்றாலும், அவள் அங்கே இருக்கிறாளா இல்லையா என்பது கூடத் தெரியாமல் அந்த மந்தாவைத் தேடி சுமனசி செல்ல வேண்டியிருந்தது.

ஒரு வகையில் . .ஒரு வகையென்ன, எந்த விதமாகப் பார்த்தாலும், இது அநாகரீகமான செயலே. வசதிப்படுமா என்று ஒரு வார்த்தை கேளாமல், ஏதோ இரண்டு ஆண்டுகள் சேர்ந்து படித்த ஒருத்தியின் வீட்டில் போய் உட்காருவது எந்த விதத்திலும் நாகரீகம் இல்லை என்பதோடு, அது நியாமும் கிடையாது.

ஆனால், நாகரீகம் அநாகரீகம் பார்க்க முடியாதது போலவே, நியாய அநியாயம் பார்க்கிற பாக்கியமும் அவளுக்கு மறுக்கப்பட்டிருந்தது.

கையால் ஆகாத கோழையைப் போல ஓடுவதும் வெறுப்பாகத்தான் இருந்தது.

இந்த இடத்தை விட்டு ஒளிந்து மறைந்து இப்போது ஓடாவிட்டால், ஒரு வேளை இப்போது கிடைக்கக் கூடிய இந்தச் சிறு விடிவு கூட, அவளுக்கு இல்லாது போய்விடுமே.

அவளுக்கு மட்டுமல்ல. இதுவரை அன்போடு அவளைப் பராமரித்த அவளுடைய சகோதரிக்கும்.

அக்காவின் கதி இப்போது ரொம்பவும் ஆபத்தானதுதான். இன்னமும் மோசமாகித்தான் போகும். எத்தனை அடி உதைகள் வாங்கப் போகிறாளோ?

உனக்குத் தெரியாமல் எப்படிப் போயிருப்பாள் என்று ஆளாளுக்குக் கேட்டு அவளைத் துன்புறுத்தக் கூடும். சரியான உணவு உறக்கமின்றிச் சும்மாவே மெலிந்திருந்த சுந்தரி எப்படித் தாங்கப் போகிறாளோ?

பால் வாங்கப் போனபோது தனக்கும் தெரியாமல் தங்கை வீட்டை விட்டுப் போயிருக்க வேண்டும் என்று அக்கா சொல்லப்

போவதை, அந்த வீட்டார் எந்த அளவுக்கு நம்புவார்களோ?

ஆனால் ஒரேயடியாக அடித்து வீழ்த்தி விட மாட்டார்கள். அவர்களுக்குப் பொங்கிப் போட ஆள் வேண்டுமே!

சுந்தரி கசப்புடன் சொன்ன வார்த்தைகள்தான், அவளுடைய தங்கைக்குச் சற்று ஆறுதல் அளித்ததும்.

ஆனால், இப்போது கிளம்பும் சுமனசி ஒருவேளை எதிர்காலத்தில் நல்ல நிலைமைக்கு வருவாளேயானால், இங்கு வந்து தமக்கையை இந்த நரகத்திலிருந்து மீட்டுச் செல்லலாம்! அதற்கு அவள் உயிருடனே இருப்பாள்!

எங்கேயோ முணுக் முணுக்கென்று சின்ன அகல் விளக்காய்ப் பளிச்சிடும் அந்த ஒரு நம்பிக்கையை மட்டுமே நம்பி, சுமனசி வீட்டை விட்டுக் கிளம்ப, அவளுடைய தமக்கையும் அவளை வழியனுப்பி வைத்தாள். சொல்லப் போனால் அவள்தான் வற்புறுத்திக் கிளம்ப வைத்தாள் எனலாம்.

கையில் அக்கா திணித்த சிறு பையில், சுமனசியே சம்பாதித்து வாங்கிய மூன்று சுரிதார் செட்டுகளும், இருவராலும் புரட்ட முடிந்து சில ஆயிரம் ரூபாய்களும், பேஸ்ட் பிரஷ் போன்ற ஓரிரு பொருட்களும் மட்டுமே இருந்தன.

பெரிய படிப்பு இல்லை என்றாலும் அவளது படிப்புச் சான்றிதழ்களும் இருந்தன! எல்லாம் நல்லபடி நடந்தால், அது பெரும் புதையலே.

ஆனால், இன்றைய அவளது முழுச் சொத்து அவ்வளவேதான்!

ஆனால் இதற்காகக் குறைப்படக் கூடாது. இது கூட இல்லாமல் நாட்டில், ஊர் உலகத்தில் எத்தனை பேர் என்ன கஷ்டம் பட்டுக் கொண்டிருக்கிறார்களோ!

காலை வேளைகளில் பல பஸ்கள் இருந்தன. ஆனால் ஒரு சிறு அறைக்குள் இருப்பது போல, அதில் யாரும் அவளை எளிதாகக் கண்டுபிடித்து விடலாம். அங்கிருந்து கிளம்பும் பஸ்களில் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் அதிகம் இருக்கக் கூடும்.

அதை விட மோசம், பஸ்சை நிறுத்தி வைத்துக் கைப்பிடியாக அந்த வீட்டுக்கேக்

கூட்டிப்போய் விட்டுவிடுவது! அக்கா குடும்பத்துக்கு வேண்டிய யாரேனும் அவளைப் பார்த்துவிட்டால், அதையும் செய்யக் கூடும்.

குறைந்த பட்சமாக அத்தானுக்கு விவரம் தெரிவித்து விடுவார்கள்!

எனவே, அக்கா தங்கை இருவருக்குமே, ரயில் பயணம்

பாதுகாப்பானதாகத் தோன்றியது.  நீள ரயிலின் பல பெட்டிகளில் சுமனசியைக் கண்டுபிடிப்பது கடினம். அப்படிக் கண்டே பிடித்தாலும், ஓடும் ரயிலை நிறுத்தி அவளை இறங்கச் செய்வதும் இயலாத காரியம்.

ஊர்ப் புறத்தோர் வந்து போகக் கூடிய ஊர்கள் தாண்டும்வரை, முக்காடிட்டு முகம் மறைத்து, மடியில் இருந்த பை மீது கவிழ்ந்து, தூங்குவது போலக் கிடந்தவள், கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ரயில் சென்ற பிறகே மெல்லத் தலையை நிமிர்த்தினாள்.

அப்போதும், துப்பட்டாவுக்கு அடியில் இருந்தவாறே, பார்வையை மட்டும் சுழற்றி சுற்றுப்புறத்தை ஆராய்ந்தாள். எப்போதோ பார்த்த முகமாகக் கூட யாருமில்லை.

அப்பாடி என்று நிமிர்ந்து அமர்ந்தாள். உடல் என்ன நிமிர்ந்தாலும், மனம் நிமிர மறுத்தது.

திரும்பத் திரும்பத் திருச்சியில் மந்தாகினி இல்லாவிட்டால் . . . அவள் ஊரை விட்டுப் போயிருந்தால்  . . . ஊரிலேயே இருந்தாலும் உதவி செய்ய மறுத்துவிட்டால் . . .என்று அதே கலக்கம்தான்.

இப்படியே எதிர்மறையாக எண்ணி எண்ணி மனதில் கொஞ்ச நஞ்சம் மிச்சமிருக்கும் தென்பையும் இழந்துவிடக் கூடாது தனக்குத் தானே ஒரு நூறு முறையாவது சொல்லியிருப்பாள்.

அக்கா கணவருடைய மனிதர்கள் யார் கண்ணிலும் படாமல் ஊரை விட்டு வெளியேற உதவி செய்த கடவுள் மற்றதற்கும் உதவி செய்ய மாட்டாரா, என்ன?

கட்டாயம் செய்வார், கட்டாயம் செய்வார் என்று உள்ளூர உருப்போட்டு, முயன்று  தைரியத்தை உருவாக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள் அவள்.

அதன்படியே நல்லவேளையாகத் திருச்சிக்கு வந்து சேரும் வரை, அவளுக்கு எந்த விதமான பிரச்சினையும் நேரவில்லை. ரயிலில் இருந்து இறங்கி ரெஸ்ட் ரூமில் முகம் கைகால் கழுவிக்கொண்டு ஒரு பிசிஓவில் மந்தாகினியின் அலுவலகத்துக்கு ஃபோன் செய்தால் முதல் வெற்றியாக தோழியே பேசினாள்.

அடுத்த வெற்றியும் கிட்டியது. ஏதோ அவசரத்தில் இருந்தாலும், அதிலும் கொஞ்ச நேரம் ஒதுக்கி சுமனசியைச் சந்திக்க ஒப்புதல் தந்தாள்.

உடன் பயின்றவள் என்ன மாதிரி நிலையில் அவளைத் தேடி வந்திருக்கிறாள் என்று அறிந்தபோதும், “ஐயோ, ஆளை விடு” என்று ஒதுங்கிக் கொள்ளாமல், தோழிக்கு உதவ முன்வந்தாள்.

அப்போதைக்கு அவளால் ஆன உதவி ஒன்றுதான். என்றாலும் அதுவே சுமனசிக்கு மாபெரும் உதவியாகத் தோன்றியது.

சுமனசியின் முதல் தேவை, தங்குமிடம். பாதுகாப்பாகத் தங்குவதற்கு ஓர் இடம்.

ஓர் இளம்பெண் சும்மா தெருவோரம் தங்க முடியாது என்பதோடு, அவளுக்கு ஒரு முகவரியும் இருந்தால்தான் எங்கேயுமே மரியாதை!

அதற்கு, அன்று வரை தான் தங்கியிருந்த இடத்தையே ஏற்பாடு செய்து தர, மந்தா முன் வந்தாள்.

“அன்று வரை என்றால் . . .? “

சுமனசி திகைப்புடன் கேட்கவும், புன்னகை செய்து அவள் சொன்னாள். “ஆமாம்ப்பா. இன்று காலையில்தான் அந்த இடத்தை . . .இங்கே நான் ஒரு வீட்டின் ஒரு புறத்தில், பேயிங் கெஸ்ட் ஆக வசித்த இடத்தைக் காலி செய்தேன். ஆனால் நான் கேட்டால், அதையே அவர்கள் உனக்கும் வாடகைக்குத் தருவார்கள். அவர்களைப் பொறுத்தவரை, தொல்லையில்லாத ஒரு சிறு அதிகப்படி வருமானம். நமக்கோ குறைந்த வாடகையில் பாதுகாப்பான தங்குமிடம். இந்த இரண்டு ஆண்டுகளில் அங்கே எனக்குச் சிறு பிரச்சினை கூட ஏற்பட்டதில்லை. உனக்கும் ஏற்படாது என்பது நிச்சயம். . .”

“அப்படிப்பட்ட இடம் என்றால், இதற்குள் வேறு யாருக்கேனும் வாடகைக்கு விட்டிருக்க மாட்டார்களா?” என்று சுமனசி கவலையுடன் கேட்டதற்கு, “மாட்டவே மாட்டார்கள். எனக்கு நிச்சயமாகத் தெரியும்.” என்றாள் மற்றவள்.

எப்படி என்றும் விளக்கினாள்.

வீட்டுச் சொந்தக்காரருடைய மனைவி பாங்க்கில் பணி புரிகிறவர். குடும்பத்தோடு இரண்டு வாரம் சுற்றுலா சென்றுவர, அந்த ஆன்டிக்கு அலவன்ஸ் உண்டு. அதைப் பயன்படுத்தி, இன்று கிளம்புகிறார்கள். பயணம் முடிந்து வந்த பிறகுதான் வேறு ஆள் வைக்கப் போகிறார்களாம். சொன்னார்கள். அதனால் இடம் காலிதான் என்பது நூற்றுக்கு நூறு நிச்சயம்!

“இப்போது அவர்களுக்கு நான் உன்னைப் பற்றிச் சொல்லிவிட்டால், அந்த அறைச் சாவியை உனக்குத் தந்துவிடுவார்கள். அவர்களுக்கும் பதினைந்து நாள் வாடகை லாபம்தானே? இன்னொரு நல்ல ஆள் தேடுகிற வேலையும் மிச்சம்.”

“ஆனால் . .ஆனால் அவ்வளவு நல்ல இடத்தை நீ ஏன் காலி செய்கிறாய்? . . சாரிப்பா! ப்ளீஸ், உன் சொந்த விஷயத்தை நோண்டுவதாக நினைக்காதேப்பா. சும்மா ஒரு விவரமாகத்தான்

கேட்டேன். . . “ என்று கலக்கத்துடன் இழுத்தாள் சுமனசி.

“சாதாரண விஷயம். இதற்குப் போய் “சாரி” என்ன? உண்மையில் இங்கேயே இருந்து உனக்கு ஒரு வேலைக்கு முயற்சி செய்யாமல் விட்டுப் போகிறேனே என்று நான்தான் சாரி சொல்ல வேண்டும். நானும் இன்று ஊருக்குப் போகிறேன்ப்பா. சொந்த ஊருக்கு.  . . .” என்றவள் கன்னம் குழியத் தொடர்ந்தாள்.

“ஊரில் எனக்குத் திருமண ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பத்து நாட்களில் திருமணம். அப்புறம் இருவருமாக ஊர் சுற்றல். இப்படி அப்படி என்று திரும்பி வர ஒரு மாதமாகிவிடும். அது . . வருவது கூட வேலையை விட்டு விலகிக் கணக்கு முடிக்க மட்டுமே வருவேன். அதனால் இங்கேயே இருந்து உனக்கு வேலை தேட என்னால் இயலாது.” என்று வருத்தத்துடன் இயம்பினாள் அவள்.

“என்ன மந்தா, இதற்கென்ன வருத்தம்? தங்கும் இடத்துக்கு நீ ஏற்பாடு செய்வதே மிகப் பெரிய உபகாரம்! அதற்கு மேல் நானே முயற்சிப்பதுதான் முறையாகும். இப்போது அந்த வீட்டுக்காரர்களை எப்போது போய்ப் பார்ப்பது? நீ எப்போது கிளம்ப வேண்டும்?” என்று அடுத்துச் செய்ய வேண்டியதை வினவினாள் சுமனசி.

“ஹே என்னப்பா அவசரம்? எல்லாம் . . “ என்றவாறு அருகில்கிடந்த மொபைலை எடுத்து மணி பார்த்தவள், “ஐயோடா!” என்று துள்ளிக் குதித்தாள்.

மற்றவள் திகைப்புடன் பார்க்கும்போதே, “ரொம்ப நேரமாகிவிட்டதே! இப்போது நான் மூன்று வேலைகளை முடிக்க வேண்டுமே! முதலில் . . .” என்று மொபைலைத் தட்டிப் பேசினாள்.

“என் சினேகிதி . . “ என்று தெரிவித்துத் தேவையையும் சொன்னாள்.

மறுமுனைப் பேச்சைக் கவனித்துவிட்டு, “ஓகே ஆன்ட்டி. என் தோழியிடம் சொல்லிவிடுகிறேன். நான் ஊருக்குப் போய் வருகிறேன் பை ஆன்ட்டி.” என்று விடை பெற்று அந்தப் பேச்சை முடித்துவிட்டு, அந்த வீட்டுக்கார அம்மாவிடம் பேசியதை சுமனசியிடம் தெரிவித்தாள்.

“நான் இருந்த போர்ஷனை உனக்கு த் தருவதாகச் சொல்லிவிட்டார்கள். ஏழு மணிக்குள் வந்து சாவியை வாங்கிக்கொள்ளச் சொன்னார்கள்.” என்றபடி அவளது கைப்பைக்குள் துழாவி ஒரு விசிட்டிங் கார்டை எடுத்துப் பின் புறத்தில் கையெழுத்திட்டுத்  தோழியிடம் கொடுத்தாள்.

“உன் அடையாளத்துக்கு இந்தக் கார்டைக் காட்டு. அதிலேயே வீட்டு விலாசமும் இருக்கிறது.  . . பொறு சுமனசி. நான் முதலில்

சொல்லி முடித்துவிடுகிறேன். நாம் இங்கே காஃபியும் பேச்சுமாகக் கொஞ்சம் அதிக நேரம் போக்கிவிட்டோம் என்று தெரிகிறது. அதனால், உன்னை வீடுவரை கூட்டிப் போய் விடுவதற்கு எனக்கு அவகாசம் இல்லை.

“அத்தோடு எனக்கு அலுவலகத்துக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே என் சாமான்கள் கொஞ்சம் இருப்பதை எடுத்துப் போக வேண்டும். அத்தோடு, என் “பாஸி”டம் பொறுப்பை ஒப்படைக்கவும் வேண்டும். இதெல்லாம் முடித்தபிறகு, என் ஸ்லீப்பர் பஸ்ஸைப் பிடிக்க ஓடத்தான் எனக்கு நேரம் சரியாக இருக்கும். அதனால் . .எனக்கு இந்த ஓர் உதவி நீதான் செய்ய வேண்டும்! செய்வாய்தானே? ப்ளீஸ்யா . . .” என்று தன் பெரிய கைப்பைக்குள் மறுபடியும் துழாவி ஒரு “ஸ்லாம் புக்”கை எடுத்தாள்.

“எனக்கு ரொம்பப் பிடித்த நடிகர், சுமனசி. அவரது கையெழுத்தை எனக்காக வாங்க வேண்டும். உன் கால் வந்தபோது அவரைப் பார்க்கத்தான் கிளம்பிக் கொண்டிருந்தேன். பாராட்டு விழாவுக்கான ஹாலுக்குள் அவர் செல்லுமுன் கையெழுத்தை வாங்கி விடலாம் என்று நினைத்தேன். இப்போது, அது முடியாது. அதனால் அவர் விழா முடிந்து வெளியே வரும்போது எனக்காக இந்த புக்கில் அவரிடம் கையெழுத்து வாங்கி வைக்கிறாயா? வாங்கி ஸ்லாம் புக்கை உன்னுடனேயே வைத்துக்கொள். ஒரு மாதம் கழித்து நான் திரும்பி வரும்போது ஆன்ட்டி வீட்டுக்கு வந்து உன்னிடம் இதை வாங்கிக் கொள்ளுகிறேன். . . .”

“ஆனால், அவர்களும் எங்கோ போகப் போவதாகச் சொன்னாயே! அவர்கள் கிளம்புமுன் நான் போயாக வேண்டுமே!”

“ஓ, அதற்கு நிறைய நேரம் இருக்கிறது, சுமனசி. நான் சொல்லும் இடத்திலிருந்து ஆட்டோவில் போ. மிஞ்சி மிஞ்சி அரை மணி நேரம் ஆகக் கூடும். அதுவே போக்கு வரத்து நெரிசலுக்காகப் பத்து நிமிஷம் அதிகம் வைத்துச் சொல்வதுதான். அப்படிப் பார்த்தால், அவர்கள் சொன்ன ஏழு மணிக்குள் தாராளமாகப் போய்விடலாம். ஏய், ப்ளீஸ்யா! இங்கெல்லாம் மறுபடி அந்த நடிகர் வருவது எப்போதோ தெரியாது. அவரே வந்தாலும், நான் இங்கே இருந்து அவரது ஆட்டோகிராஃப் வாங்குவது நூ . .ஊகூம், ஆயிரத்தில் ஒரு வாய்ப்புதான். அதனால் . . “

“மந்தா, ப்ளீஸ்!” என்று மற்றவளின் வேகப் பேச்சை ஒருவாறு தடுத்து நிறுத்திவிட்டு, “அப்பப்பா, என்ன வேகம், மந்தா? எனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறாய்! தலைக்கு மேல் கௌரமான ஒரு கூரை உன்னால் கிடைத்திருக்கிறது! உனக்கு இந்தச் சின்ன வேலை கூட நான் செய்ய மாட்டேனா? அவகாசம்தான்

நிறைய இருப்பதாகச் சொன்னாயே! சொல்லு., யார் அந்த நடிகர்? அவரது தலை . .இல்லை கையெழுத்தை வாங்குவதற்கு நான் எங்கே போய், எந்த வரிசையில் எத்தனாவது ஆளாக நிற்க வேண்டும்?" என்று கேலிக் குரலில் சுமனசி கேட்டதும் மந்தாகினியின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

"எந்த நேரத்திலும் இப்படிக் கேலி பேச உன்னால் மட்டும்தான் முடியும்! படிக்கிற காலத்திலேயே, இதற்காகத்தான் உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். உன் வீட்டில் . . ஊகூம். இப்போது அதையெல்லாம் பேசினால் ரொம்ப நேரம் ஆகிவிடும். அது போகட்டும். இப்போது நடிகரைப் பார்ப்போம் . . .அவரை மெய்யாகவே பார்க்க மட்டும் முடிந்தால் . . .

"நீ வழிகிற வழிசலில் அவர் வழுக்கி விழுந்துவிடுவார்! அதனால் வெறும் விஷயத்தை மட்டும் சொல்லு. அவர் எங்கே வருவார்? நான் எங்கே நின்று அவரிடம் கையெழுத்து வாங்க வேண்டும்? முதலில் அவரது பெயர் என்ன?" என்று சுமனசி வினவினாள்.

"அவர்தான்ப்பா வேகமாக முன்னேறி வரும் . .வரும் என்ன வந்தேவிட்ட கதாநாயக நடிகர் உதயராஜன்! கடைசியாக அவர் நடித்த நாலு படங்களும் செம ஹீட்! அதிலும் அந்தக் கனவுராணி கவர்ச்சிக் கன்னி ரதிமாலாவோடு சேர்ந்து நடித்த இரண்டும் இன்னும் சூப்பராக ஓடிக் கொண்டிருக்கின்றன! அதிலும், வில்லனுடைய அடியாள் கூட்டத்தை அடிக்கத் தொடங்குவதற்கு முன் யோசனையோடு தலை முடியைச் சிலுப்பி உதய் ஒரு போஸ் கொடுப்பார், பார் அதற்காகவே அந்தப் படத்தைப் பத்து தரம் பார்க்கலாம்!" என்று பரவசத்துடன் மந்தாகினி அடுக்கலானாள்.

விழி விரித்து நோக்கிவிட்டு, "அந்த ஹீரோ யோசித்து, தலையைச் சிலுப்பிவிட்டு வரும்வரை வில்லன் கூட்டம் அவரை அடிக்காமல் காத்து நிற்பார்களாக்கும்! பிரமாதம்!" என்றாள் சுமனசி.

"ஏய், என் ஹீரோவை ஒன்றும் சொல்லாதே!" என்று பாதி சீரியசாகவே மந்தாகினி எச்சரித்தாள்.

"இல்லைப்பா, இல்லை! ஆனால் நீ இந்த உதையோ குத்தோ ராஜன் படத்தைப் பத்துத் தரம் பார்ப்பது உன் வருங்கால அவருக்குத் தெரியுமா? ஜாக்கிரதை! அவருக்குப் பொறாமை வந்துவிடப் போகிறது!"

"வராதே! உதயராஜனை என் கருணுக்கும் ரொம்பப் பிடிக்குமே! இருவருக்கும் ஒரே "டேஸ்ட்" என்று பெருமைப்படுவார்! இன்னும் . . " என்று ஏதோ சொல்லத் தொடங்கிய தோழியின் வாயைப் பொத்தி அவளது பேச்சை சுமனசி நிறுத்தினாள்.

“அவகாசமே இல்லை., அவசரமாக அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும் என்றாயே! அந்த உதயராஜீன் அருமை பெருமைகளை அளப்பதில் உன் பொன்னான நேரம் நிறைய்யக் காணாமல் போய்விடப் போகிறது!” என்று அவள் எச்சரித்தது, மந்தாகினியை நடப்புக்குக் கொண்டு வந்தது!

“ஏ, ஆமாம்ப்பா. நல்லவேளை நினைவு படுத்தினாய். நான் அலுவலகத்துக்குக் கிளம்புகிறேன். நீ போக வேண்டிய இடம் ஓரளவு பக்கம்தான். நேராகப் போய் சிக்னலில் வலது பக்கம் திரும்பி, மறுபடியும் நேராகப் போனால் உதயராஜ் சென்றிருக்கும் தியேட்டர் வரும். அழைப்பு இல்லாமல் உள்ளே விட மாட்டார்கள். அதனால் அவர் வெளியே வந்ததும் கையெழுத்து வாங்கவென்று ஒரு கூட்டம் நிற்கும். ரசிகர்களை உதயராஜ் அலட்சியப்படுத்துவது இல்லை. எல்லோருக்கும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டுத்தான் போவார். நீயும் அதில் நின்று என் ஸ்லாம் புக்கில் கையெழுத்தை வாங்கிவிடு. நான் திரும்பி வரும்போது உன்னிடம் வந்து என் புக்கை வாங்கிக் கொள்கிறேன். “ என்ற மந்தா மறுபடி மணியைப் பார்த்தாள்.

“ஏ. . .நேரமாகிவிட்டது! ஓடிப் போக வேண்டும். இல்லாவிட்டால் அலுவலகத்தைப் பூட்டிக்கொண்டு போய்விடுவார்கள். நான் கிளம்புகிறேன். பைப்பா . . .” என்றபடி, அருகில் சென்று கொண்டிருந்த ஓர் ஆட்டோவை நிறுத்தி ஏறிக் கையாட்டியபடியே சென்று மறைந்தாள் மந்தாகினி.

ஆட்டோ ரிக்ஷா சென்று மறைந்த திசையையே பார்த்துக் கொண்டு நின்ற சுமனசிக்குச் சற்றுமுன் நடந்தது கனவோ, நிஜமில்லையோ என்று ஒரு சந்தேகம் எழுந்தது.

தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டவளுக்கு உள்ளூர மகிழ்ச்சி குமிழியிட்டது!

இந்தத் திருச்சிராப்பள்ளி நகரத்தில், கௌரவமாகத் தங்குவதற்கு அவளுக்குப் பாதுகாப்பான ஓர் இடம் கிடைத்துவிட்டது. அதுவும் குறைந்த செலவில்!

ஆனால், இன்னும் நிறைய வேலை இருக்கிறது.

முதலில் ஒரு வேலை தேட வேன்டும். தங்குமிடத்து வாடகையை இருப்பிலிருந்து கொடுக்காமல் வருமானத்திலிருந்து கொடுக்கும்படி இருக்க வேண்டும்.

வேலை கிடைக்கும்வரை சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும். . .இன்னும் . . .

பக்கத்தில்தான் என்று மந்தா சொன்ன தியேட்டரைக் குறி வைத்து வேகமாக நடக்கத் தொடங்கினாள் அவள்.

நடப்பதற்கு அவள் அஞ்சுகிறவள் அல்ல. புது இடம் என்றாலும், வழி தெரியாமல் போக வாய்ப்பு இல்லாதபடி, சாலையின் இரு புறமும் நடிகர் உதயராஜன் பற்றி போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன.

நடிகனின் பல்வேறு படங்கள் . .கூடவே அவனுடைய கதாநாயகிகளோடு சில போஸ்கள். எல்லாமே செல்ல வேண்டிய இடத்தை அவளுக்குக் காட்டிக் கொடுத்தன.

விழா நடத்திய தியேட்டர் முன்னே நடந்த தள்ளுமுள்ளுவை விட்டு விலகி நின்றது, ரசிகர்களுக்கு க் கும்பிடு போட்டபடி வந்த உதயராஜன் அவளைக் காரில் இழுத்துப் போட்டுக்கொண்டு வேகமாக ஓட்டத் தொடங்கியது . .ஓட்டியது வரையும் கூட, சுமனசி எதையும் விடவில்லை.

விவ . . ரமாகக் கேட்டாயல்லவா? உன்னைப் பற்றிப் பெரிதாக அறியாது இருந்ததில் இருந்து, தோழியிடம் கிண்டலடித்தது வரை எல் . .லா விவரங்களையும்

விலாவாரியாகக் கூறியாயிற்று. இனி ஏதோ செய்வது பற்றிச் சொன்னாயே, அதைப் பற்றி நீ சொல்லு!

ஒரு வேளை சொல்ல வெட்கமாக இருந்தால், உனக்குப் பதிலாக நானே வேண்டுமானாலும் சொல்கிறேன். உன் வழியைப் பார்த்துக்கொண்டு போம்மா என்றுதானே சொல்ல வேண்டும்?

சொல்லு சொல்லு. அது ஒன்றும் என்னைப் பெரிதாகப் பாதிக்கப் போவதில்லை.

ஆனால் இப்போது என்ன செய்வது? ஏதாவது போலீஸ் நிலையத்தில் போய்ப் பாதுகாப்புக் கேட்கலாமா? . . .ஆனால் காவல் நிலையங்களைப் பற்றியும் கண்ட கதை பேசுகிறார்களே! இப்போது . . .

நடிகனை அடியோடு மனதில் இருந்து விலக்கி, அடுத்து என்ன முயற்சி பண்ண முடியும் என்று சுமனசி எண்ணி பார்த்துக் கொண்டிருந்தபோது, உதயராஜனின் குரல் அவளது காதில் விழுந்தது.

ஓ! திடுக்கிட்டுப் பக்கத்தில் திரும்பிப் பார்த்தாள் அவள்.

புருவ மத்தியில் முடிச்சுடன் அவளிடம்தான் நடிகன் பேசிக் கொண்டிருந்தான்.

“நீ தந்த விவரங்கள் கோவையாகவே இருந்தன. ஆனால், முக்கியமான விஷயம் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே! இவ்வளவு காலமும் அங்கேயே . .அக்கா என்றாயே, அவள் வீட்டிலேயே இருந்துவிட்டு, இன்று அதிகாலையில் யாருக்கும் தெரியாமல் நீ அந்த

வீட்டை விட்டு வெளியேற வேண்டிய அவசியம்? இந்த ஒரு நாளில் அப்படி என்ன உலகம் தலை கீழாகிவிட்டது? “

தேவையில்லை, சொல்ல வேண்டாம் என்று எண்ணினாளே! ஆனால் சொல்லித்தான் ஆக வேண்டுமோ?

# அத்தியாயம் - 3

திருச்சி நகரத்தில், அதுவும் அந்தச் சமயத்தில் மட்டுமே ஆதரவற்று நிற்கிறாள் என்கிற அளவு அந்த உதயராஜனுக்குத் தெரிந்தால் போதும் என்று சுமனசி நினைத்தாள்.

அதுவே அவளைக் கிள்ளுக்கீரையாகக் கருதி உதாசீனப்படுத்தும் தைரியத்தை அவனுக்குத் தரக் கூடும் என்ற எண்ணம் அவளுக்கு.

இந்த உலகத்திலேயே அவளுக்கு ஆதரவு யாருமில்லை என்பதைச் சொல்லி நிலைமையை ஏன் இன்னும் மோசமாக்கிக் கொள்வது ?

கூடவே, அப்போது அந்தக் கதை தேவையும் இல்லை என்று அவள் எண்ணினாள்.

எண்ணியதைச் சொல்லவும் செய்தாள்.

ஆனால் அவன் யோசித்த விதம் வேறாக இருந்தது.

“இதோ பார் பெண்ணே, என்னைப் பொறுத்த வரையில் நீ முழுக்க முழுக்க அன்னியள். இதற்கு முன் நீ என்னவாக இருந்தாயோ? இருள் விலகுமுன் விழுந்தடித்துக் கொண்டு ஊரிலிருந்து யாம் அறியாமல் ஒளிந்து ஓடி வந்திருக்கிறாயே, அங்கே நீ என்ன குற்றம் செய்துவிட்டு வந்தாய் என்று எனக்கு எப்படித் தெரியும்? கொள்ளையடித்தாயோ? கொலை செய்தாயோ? ஏன், கொள்ளைப் பொருள் கூட இன்னமும் இந்தப் பைக்குள்ளேயே இருக்கிறதோ, என்னவோ? பையை விடாமல் கைப்பிடியிலேயே வைத்திருக்கிறாயே! . . “

தீச் சுட்டது போலக் கையில் இருந்த பையை அவன் புறம் தள்ளி விட்டாள் சுமனசி.

“சே! திரைப்படங்களில் நீங்கள் ஆக்ஷன் ஹீரோ என்று மந்தா சொன்னாள். அப்படியானால் ஏதாவது குற்றங்கள் செய்தவர்களைப் பிடிப்பது, அடிப்பதுதானே? அந்தக் கொலை, கொள்ளைக் கதைகளைக் கேட்டுக் கேட்டு, எல்லோருமே அப்படித்தான் என்று நினைத்து விடுவீர்கள் போல! என் படிப்புக்கான சான்றிதழ்களும் மிச்சம் மீதி இருக்கும் பணமும்கூடத் தொலைந்து இன்னும் தொல்லையாகி விடக் கூடாதே என்று கவனமாக இருந்தால் அதற்கு இப்படியும் ஒரு விளக்கமா? நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பைக்குள் இருப்பது திருட்டுப் பொருளா, நான் சொன்னதா என்று!”

என்று படபடவென்று பொரிந்து கொட்டியபடி பார்த்தவளுக்கு

ஆச்சரியமாகிப் போயிற்று.

அவள் இவ்வளவு சொன்னபிறகும், அவளது பையின் ஸிப்பைத் திறந்து உள்ளே இருப்பதை ஆராய்ந்து கொண்டிருந்தான் உதயராஜன்.

யாரையுமே கடைசிவரை நம்பமாட்டான் போல!

நிதானமாகப் பார்த்துவிட்டு, “அப்படியானால் உன் பெயர் சுமனசியா? நல்ல பெயர்! சரி, சொல்லு. இந்தப் படிப்பு, அதற்கு வேலை கிடைத்த பிறகும் நீ வீட்டை விட்டு வெளியேறக் காரணம்?” என்று விசாரித்தான் அவன்.

அவனது திமிர் ஏறும் என்று அவளுக்கு உறுதிதான்.

ஆனால் சொல்ல மறுப்பது இன்னமும் நிலைமையை மோசமாக்கி விடலாம் என்று தோன்றவும் அவள் தன்னைப் பற்றிய முழு விவரத்தையும் சொல்லலானாள்.

அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரிதான் சுந்தரி அக்கா. ஆனால் உடன் பிறந்தவளுக்கும் மேலே.

அவர்களுடைய அம்மாக்கள் இருவரும் கூடப் பிறந்தவர்கள். ஒரு விபத்தில் பெற்றோர்  மறைய அதிசயமாகத் தப்பிப் பிழைத்த குழந்தையைப் பெரியம்மா அன்பாகவே வளர்த்தாள்.

ஆனால் நல்ல இடம் என்று சொந்த மகளைக் கட்டிக் கொடுத்த இடம் பெருங்காய டப்பாவாக இருந்தது தெரியாமல் சக்திக்கு மீறிக் கடன் வாங்கி மகளுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். மகளது நிலை பற்றிய வேதனை, கடன் தொல்லை இரண்டுமாகப் அந்தப் பெரியவர்கள் இருவருமே விரைவிலே மேலே போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

அப்போது சுமனசி ப்ளஸ் டூமுடித்திருந்தாள்.

மலங்க முழித்துக்கொண்டு நின்றவளைத் தனியே விட்டுவிடாமல் அக்கா கூட்டிப் போனாள். அவளுக்காக வீண் செலவு செய்ய முடியாது என்ற புகுந்த வீட்டினர் வாயை அடைக்க அப்போதே வேலைக்குப் போகச் சொன்னாள்.

ஒரு பெரிய கடையில், கம்ப்யூட்டரில் பில் போடும் வேலை கிடைத்தது.

அக்கா  பாசம் உள்ளவளே என்றாலும் அளவுடன் மட்டுமே காட்ட முடிந்த அன்பு. உணவுக்கும் உறைவிடத்துக்கும் சுமனசி பணம் கொடுத்தால்தான் அங்கே, அக்கா வீட்டில் தங்க முடியும்.

அது பற்றி சுமனசி வருத்தப்படவில்லை. அக்கா பேராசை பிடித்தவள் அல்ல என்பது அவளுக்கே தெரியும். அதற்கேற்ப

நியாயமான அளவே வாங்கிக்கொண்டு அக்கா சோறு போட்டாள்.

மீந்த பணத்தைச் சேர்த்து ஒவ்வொன்றாக மூன்று சுடி செட் கூட வாங்க முடிந்தது.

வேலை பார்த்தபடியே மேலே படித்த கல்வியால் இருமடங்கு ஊதியம் தரும் வேலை கிடைத்தது. ஆனால் அதுதான் ஆபத்தாகவும் ஆயிற்று.

பெரிய வேலைக்கு ஆர்டர் வந்ததுமே, யாரோ பெண் கேட்டு வந்தார்கள்.

வீட்டில் மகாநாடு நடந்தது.

முதல் கவலை, அதுவரை சுமனசி செலவுக்குக் கொடுத்து வந்த பணம் நின்றுவிடுமே என்பது. நாலு ஆண்டுகளாக அவள் கொடுத்த பணத்தை வாங்கிப் பழகியது, அவளது வருமானம் என்றால், அது அவர்களுக்கே உரியது என்ற கருத்தை அக்காவுடைய மாமியார், மாமனாரோடு அக்கா கணவருக்கும் உருவாக்கி விட்டிருந்தது.

“ஏதோ உனக்கும் பிள்ளையில்லை. உன் தங்கையை நானே கட்டிக் கொள்கிறேன்.” என்றான் அக்கா கணவன்.

மாமியார், மாமனார் ஒத்து ஊதினார்கள்.

ஊரில் அவர்கள் கதை பரப்பிய விதத்தில் அக்கா கணவன் தங்கைக்கும் வாழ்வு கொடுப்பவனாகச் சித்தரிக்கப்பட்டான்.

“ஆமா தாயீ, ஒனக்கு யார் செலவு பண்ணிக் கல்யாணம் காட்சியெல்லாம் செய்வாக? அக்காவுக்குத் தங்கச்சி ஒத்துப் போவீக. ஒருத்திக்கு ஒருத்தி தாங்கிப் பிடிப்பீக. பரவாயில்ல., உன் அக்கா மாமியா நல்ல வழிதான் கண்டு புடிச்சிருக்கா!” என்று நேரிலேயே ஒரு பெண்மணி கூறவும் சுமனசி பெரிதும் அரண்டு போனாள். அக்காவோ அவளுக்கும் மேலே.

இருவரின் மறுப்புக்கும் பலனே இருக்கவில்லை. திருமண வேலைகள் வேகமாக நடக்கலாயின.

இந்நிலையில் அக்காவும் தங்கையும் தவித்துக் கொண்டிருந்தபோது . . .

“எதற்காகத் தவிப்பது? போலீசில் புகார் செய்வதுதானே? உன் அக்கா புருஷனைப் பிடித்து முட்டிக்கு முட்டி தட்டியிருப்பார்களே!” என்று இடையிட்டுக் கூறினான் உதயராஜன்.

வெறுப்பும் கசப்புமாக உச்சுக் கொட்டினாள் சுமனசி. “எந்தப் போலீசில் புகார் செய்வது? என்னை வாழ்த்தி ஒரு பெண் பேசினாள் என்றேனே, அந்தம்மா உதவி ஆய்வாளருடைய மனைவி. அந்த ஆய்வாளர் என்ன மாதிரிக் கேஸ் எடுப்பார்?” என்று கேட்டாள் சுமனசி.

“ஆனால் ஏதோ கம்ப்யூட்டரில் பில் போடுகிற வேலை பார்த்தாயே? அந்த அளவு முன்னேற்றம் உள்ள ஊர்தானே?”

“ஒரு பணக்காரரின் கடை அது. அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்து வந்து அந்தக் கடையில் வாங்குவார்கள். அதனால் பெரிய அளவில் வைத்திருந்தார். அவர் அக்கா மாமனாருக்கு உறவு முறை. மாமனார் சொல்லித்தான், எனக்கு அந்த வேலை கிடைத்ததும். புது வேலை கிடைத்த இடமும் பணக்காரருக்குத் தொடர்பு உடையதே. ஊர்க்காரர்களும் அங்கே அடிக்கடிப் போவார்கள். . .” என்று அவனைப் பார்த்தாள்.

மேலே சொல்லு என்பது போல அவன் சைகை செய்யவும் தொடர்ந்தாள்.

இப்படி அக்காவும் தங்கையுமாகச் செய்வது அறியாமல் தவித்துக் கொண்டிருந்தபோதுதான், சில மாதங்களுக்கு முன் கோயிலில் சந்தித்த தோழி மந்தாகினியின் நினைவு இருவருக்குமே வந்தது.

கூடப் படித்துவிட்டுத் திருச்சில் வேலை பார்க்கிறவள். அவள் கொடுத்தது, அலுவல் இடத்து முகவரி. அதை நம்பி சுமனசியும் கிளம்பிவிட்டாள்.

எளிதாகவே தோழியைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவளுக்கு உதவுகிற மனமும் இருந்தது. ஆனால் அவள் ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். திருமணம்!

மேலே நடந்தது அவனுக்கே தெரியும்.

“ஆ . .மாம் . . தெரியும் . . .” என்றான் அவன் யோசனையோடு.

“நம்புகிறீர்கள்தானே?”

“உன் சான்றிதழ்கள், அந்தப் பெண் மந்தாகினி கொடுத்த முகவரி எல்லாம் நிஜம். அதனால் நம்பாதிருக்க வாய்ப்பில்லை. “ என்றான் உதயராஜன் அமர்ந்த குரலில்.

அப்பாடா என்பது போல பெரிய ஆறுதல் மூச்சு விடும்போதுதான் அவனது பதிலுக்காகப் பெரும் மன இறுக்கத்துடன் தான் காத்திருந்தது, அவளுக்கே புரிந்தது.

ஆனால் அதில் அதிசயம் என்ன? இந்த இக்கட்டான நிலையில் அவளுக்காக ஏதேனும் செய்யக் கூடியவன் அவன் ஒருவன்தானே? அவனது அபிப்பிராயம், அவளுக்கு மிகவும் முக்கியமானதே அல்லவா?

யோசனையோடு கூடிய மூச்சுடன் உதயராஜன் காரைக் கிளப்பினான்.

அவளை இறங்கச் சொல்லவில்லை என்பது நல்ல அறிகுறி. ஆனால் எங்கே கூட்டிப் போகிறான்?

அதைக் கேட்கவும் அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

சொன்னால்தான் வருவாயோ என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?

ஆனால் அவனை நம்பி, அவனோடு செல்வதும்  அவளுக்குக் கலக்கமாகவே இருந்தது. இவன் சினிமாவில் ஹீரோவாக இருக்கலாம். ஆனால் சொந்த வாழ்வில்? எப்படி என்று யாருக்குத் தெரியும்?

நாலு ஆண்டு கால அக்கா வீட்டு வாழ்க்கை, தன் தைரியத்தை வெகுவாகக் குலைத்து விட்டிருந்ததை சுமனசி அப்போது உணர்ந்தாள்.

தலை வாரிவிட்டபடி, “தைரியமாக இருடிச் செல்லம்., உன் அக்கா மாதிரி காக்காய் கத்துவதற்கெல்லாம் பயந்துகொண்டு இராதே.” என்று பெரியம்மா ஒரு தரம் சொன்னது சுமனசிக்கு நினைவு வந்தது. கிட்டத்தட்ட அக்கா போலத்தான் அவளும் ஆகிவிட்டாளா?

அவளைக் கூட்டிக்கொண்டு போகிறான்., எங்கே கூட்டிப் போகிறான் என்று கேட்கத் திராணி இல்லையே!

சிறிது பொழுது மௌனத்தில் கழிந்தபின், தொண்டையில் விழுங்கிக்கொண்டு “இப்போது நாம் எங்கே போகிறோம்?” என்று சுமனசி மெல்ல வினவினாள்.

அவள் கேட்ட நேரத்தில் ஒரு போக்குவரத்து சிக்னல் வந்து பல வினாடிகள் நிற்கும்படி ஆயிற்று.

பொதுவாக இது போன்ற இடங்களில், கையைத் தூக்கித் தலையைத் தாங்கிக் கொள்வது போன்ற பாவனையில் வெளியே முகம் தெரியாமல் மறைத்தபடி உதயராஜன் அமர்ந்திருப்பதை ஏற்கனவே சுமனசி கண்டிருந்தாள்.

முகம் தெரிந்தால் கூட்டம் கூடி விடக் கூடும். அதில் பெருமைப்பட்டுக்கொண்டு போக்கு வரத்தைச் சிக்கலாக்காமல், இப்படி ஒதுங்கிப் போகிறானே என்று சற்று நல்லபடியாகவும் எண்ணியிருந்தாள்.

இப்போதும் அதற்கு மதிப்பளித்துப் பேசாதிருந்துவிட்டு, சிக்னல் விழுந்து அவன் மறுபடியும் காரை ஓட்டத் தொடங்கிய பிறகு, திரும்பவும் தன் கேள்வியைக் கேட்டாள்.

“சற்று நேரம் பொறுத்திருந்தால் கார் நிற்கும்போது தானாகத்

தெரிந்துவிட்டுப் போகிறது.” என்று வெட்டெனப் பதில் வரவும் அவள் முகம் வாடியது.

தானாகத் தெரிகிறபோது, அது சரியில்லாததாக இருந்துவிட்டால் என்ன செய்வது?

கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் முகத்தை வெளிப்புறமாக அவள் திருப்பும்போதே, “சாரி.” என்றான் உதயராஜன். “செல்லுமிடம் தெரிந்துகொள்ள உனக்கு ஆர்வமாகத்தான் இருக்கும். ஆனால் இது எந்த அளவுக்கு சரி என்று எனக்கே கொஞ்சம் குழப்பம். ஆனால் வேறு வழியைக் காணோம் . .” என்று அவன் சொல்லும்போதே கார் ஒரு பெரிய கட்டிடத்தின் பின்புறம் சென்றது.

காரின் விளக்கை அவன் இருதரம் அணைத்துப் போடவும், காவலாள் ஒருவன் ஓடோடி வந்து கேட்டைத் திறந்தான்.

“பின் வழியாகப் போகிறீர்கள்?” என்று ஆச்சரியப்பட்டபடி சுமனசி இறங்கினாள்.

“ம். முன்புறம் லாபி, வரவேற்புப் பகுதி எல்லாம் ஒரே வெளிச்சமாக இருக்கும். யாராவது அடையாளம் கண்டு, கூட்டம் சேர்ந்து விடலாம். அதற்காகத்தான் ஹோட்டல் நிர்வாகத்தோடு இந்த ஏற்பாடு.” என்று கார்க்கதவைப் பூட்டிவிட்டு “வா, போகலாம்.” எனறான் உதயராஜன்.

அவள் அசையாமல் நிற்கவும், “என்ன?” என்று வினவினான்.

“இஇங்கே ஹோட்டலில் நான் உங்களோடு ததங்கினால் எல்லோரும் என்ன எண்ணுவார்கள்.?”

“எண்ணுவதற்கு என்ன இருக்கிறது?” என்றான் அவன் ஒரு மாதிரிக்குரலில்.

“சிசினிமாக்காரரோடு தங்கினால் . . ஐயோ வேண்டாம்! வேவேண்டாம் சார்.”

“ஏன்? என்ன ஆகிவிடும்? தங்க நிழல் இல்லாமல் வீட்டை விட்டு ஓடி வந்ததாகச் சொன்னாயே, காரணமான அந்த மனிதன் எந்தப் படத்துக் கதாநாயகன்?” என்றபோது அவனத முகம் குரல் எல்லாவற்றிலுமே கடுப்படித்தது.

அவளது தலை தானாகக் கவிழ்ந்து போயிற்று. “

மெய்தானே? அங்கே ஒரு குடும்பமே அநியாயம் செய்ததே, அவர்களில் யார் எந்தப் படத்தில் நடித்தவர்?

“சாரி.” என்றாள் மெதுவாக.

“நிச்சயமாகப் பட வேண்டியவள்தான்!”

திகைத்து "எஎன்னது?" என்று கேட்டாள் சுமனசி.

"அதுதான் வருத்தம். சாரி என்று சொன்னாயே. அந்த வருத்தம் பட வேண்டியவள்தான் என்றேன். சரி வா." என்று அவன் முன்னே நடக்கவும் வாய் திறவாமல் பின் தொடர்ந்தாள் அவள்.

நல்லவேளையாக அதிகம் நடக்கவோ, அடுத்தவர் பார்வையில் படவோ தேவையில்லாமல் சில வினாடிகளிலேயே ஒரு கதவின் முன் நின்று ஒரு கார்டைச் சொருகி எடுத்தான் உதயராஜன்.

கதவு திறந்துகொள்ள இருவரும் உள்ளே சென்றனர்.

பின்னே தானாகச் சாத்திக்கொண்ட கதவைக் கண்டும் காணாதது போலப் படபடப்பை அடக்கிக்கொண்டு நின்றாள் சுமனசி.

அவள் வளர்ந்த விதத்தில் இப்படி ஓர் ஆணின் அறையில் இரவைக் கழிப்பது சற்றும் சரி கிடையாது. ஆனால் ஒரு "சாரி" சொன்னதற்கே இவ்வளவு பேசும் இவனிடம் முகத்தில் கூட எதையும் காட்டிவிடாமல் எச்சரிக்கையோடு நிற்க வேண்டியிருந்தது.

ஓரக் கண்ணால் பார்த்துவிட்டு, அவன் பேசலானான். "பார், இது சாதாரண ஹோட்டல் அறை அல்ல. உள்ளே வரவேற்பறை, படுக்கையறை பால்கனி எல்லாம் இருக்கும். நீ அறைக்குள் படுத்துத் தூங்கு. நல்லது நினைத்த பாவத்துக்கு, நான் இங்கே தூங்குகி . .முடிந்தால் தூங்குகிறேன். அந்த அறைக் கதவை உள்ளே பூட்டிக்கொள்ள முடியும். எங்கே நான் மேலே பாய்ந்துவிடுவேனோ என்கிற பயம் இல்லாமல் நீ நிம்மதியாக உறங்கலாம்."

அந்தக் கடைசி வாக்கியத்தை அவன் சொல்லாமல் இருந்திருக்கலாம். அதுவும் அந்த மாதிரியாகத் தொனிக்கும்படி அவள் ஒரு வார்த்தை கூடக் கூறாதபோது! என்றாலும் மீண்டும் அவள் வாய் "சாரி." என்றது.

"என்னது? மறுபடியுமா? தேவையில்லை. ஒரு தரமே போதும்!"

உள்ளூர அவனுக்குக் கோபம் என்று அவளுக்குத் தோன்றியது. இவன் போன்ற ஆட்களெல்லாம் தன் சுகத்தைப் பெரிதாக எண்ணுகிறவர்களாக இருக்கக் கூடும்.

ஒருவாறு சமாளித்து, "வந்து . .நான் வேண்டுமானால் இங்கே படுத்துக் கொள்ளட்டுமா?" என்று மெல்லக் கேட்டாள்.

"வேண்டாம்." என்றான் அவன். "காலையில் எனக்குக் காஃபி வரும். உன்னை எழுப்பி அறைக்குள் அனுப்பிவிட்டு ரூம் சர்வீசை உள்ளே விடுவது சரி வராது. அப்படி எழுப்ப வரும்போது நீ என்னதாவது எண்ணிவிட்டால் இன்னமும் மோசமாகிவிடும்.

பரவாயில்லை. ஒரு நாள் சற்று வசதியற்றுப் படுப்பதில் நான் ஒன்றும் ஆகிவிட மாட்டேன். அது போகட்டும். உன் சாப்பாடு? உன்னைப் பார்த்தால் பஞ்சத்தில் அடிபட்ட மாதிரி இருக்கிறாயே? ஓ! பயந்து பயந்து ஒளிந்து மறைந்து வந்ததில் உணவு பற்றிய நினைவே வரவில்லை போல! ஹூம். வெளி உலகத்தில் உள்ளவர்களிடம் இப்படி நடுங்க வேண்டியிருக்கிறது. நீயானால் சினிமாக்காரனைக் குறை சொல்லுகிறாய்! “

குட்டுவதற்கு எங்கே வாய்ப்புக் கிடைக்கும் என்று தேடிக் கொண்டே இருப்பான் போல! ஆனால் மறுத்துப் பேசவும் முடியாமல், முதலில் பேசியதற்கு மீண்டும் வருத்தம் தெரிவிக்க முயன்றாள் சுமனசி.

ஆனால் “சா . . .” என்று அவள் வாயைத் திறக்குமுன், “வேண்டாம்.” என்று அவசரமாகக் குறுக்கிட்டுத் தடுத்தான் நடிகன்.

புரியாமல் அவள் திகைக்கையில் அவனே தொடர்ந்தான். “வேண்டவே வேண்டாம். ஒரு தரத்துக்கு இரண்டு தடவை வருத்தப்பட்டாயிற்று. இதற்குமேல் அதே வசனம் பேச என்னால் முடியாது. விட்டு விடு. இப்போது உனக்குச் சாப்பாடு வரவழைக்கிறேன். நல்லவேளை! அங்கே ஃபுல்லாக அடித்துவிட்டேன். இல்லையானால் இரண்டு கொண்டுவரச் சொல்லி இன்னொன்று யாருக்கு என்று யோசனை கிளம்பி அது ஒரு கிசுகிசு ஆகியிருக்கும்.”

சுற்றி வளைத்துப் பேச்சு அதிலேயே போய் நின்றது.

பெருமூச்சுடன் போய் சுமனசி முகம் கழுவிக்கொண்டு வரும்போது, அவளுக்கான உணவு வந்து காத்திருந்தது.

உணவைச் சுட்டிக் காட்டிவிட்டு அவன் டீவியில் ஏதோ கார்ட்டூன் பார்க்கலானான்.

“சார், நீங்களும் ஏதாவது . .நிறைய இருக்கிறது. இனிப்பு, காரம் . . .” வேண்டாம். அங்கே நன்றாக உண்டதாகச் சொன்னேனே. நீதானே நன்றாகச் சாப்பிடு. பார்த்தால் இதற்கு இரண்டு பங்கு உண்டாலும் உனக்குப் பசி தீராது போல இருக்கிறாய். என்னைப் பற்றி நினைக்காமல் நிம்மதியாகச் சாப்பிடு. நான் டீவி பார்க்கப் போகிறேன்.”

அவள் நிம்மதியாகச் சாப்பிடட்டும் என்று டீவி பார்ப்பது போலப் பாவனை செய்கிறானோ? மற்றபடி சின்னப் பிள்ளைகள் பார்க்கிற இந்த நிகழ்ச்சியை இவன் ஏன் பார்க்கிறான்?

ஆனால் அவ்வப்போது தேளாகக் கொட்டவும் செய்கிறான். இவனை என்னவென்று எண்ணுவது?

நல்ல உணவைப் பார்த்ததும் வயிறு கபகபவென்றது. கதாநாயக நடிகருக்குக் கொண்டுவரப் பட்டது அல்லவா? சுவையும் உயர்வாகவே இருந்தது.

ருசி பார்க்க வாயில் வைத்த மாதிரிதான் அவளுக்கு இருந்தது. ஆனால் கிட்டத்தட்டத் தட்டு காலியாகி இருந்தது அவளுக்கே ஆச்சரியம்தான்.

இந்த மீதியை என்ன செய்வது என்று அவள் யோசித்தபோது, வெளிக் கதவை யாரோ தட்டினார்கள்.

இந்த நேரத்தில் யார்?

திகைப்புடன் பார்த்தபோது, அவன் முகமும் அதே கேள்வியை எதிரொலிப்பது போலவே அவளுக்குத் தோன்றியது.

ஆனால் உடனே அவளது எண்ணம் மாறியது.

வருகிறவர்கள் யாரானாலும் இப்போது அவளை இங்கே பார்த்ததும் என்ன நினைப்பார்கள்? சுமனசி கலக்கத்துடன் எழுந்தாள்.

உதயராஜனின் கவனம் கதவிடம் இருந்தது.

கதவைத் தட்டுகிறவர் யாரானாலும் அதிக ஒலியெழுப்பாமல் மெல்லவே தட்டினார்கள்.

சுமனசியின் அருகே வந்தவன், “சாப்பிட்டு முடித்துவிட்டாயா? இல்லையென்றால் அறைக்குள் தூக்கிப் போய்விடு.” என்றான் தாழ்ந்த குரலில் வேகமாக.

“முடித்தாயிற்று, மீதியை என்ன செய்வது என்றுதான் சும்மா அளைந்து கொண்டிருந்தேன்.” என்றாள் அவளும் அவனது பாணியிலேயே.

“ரைட். நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தது போல நடித்து விடுகிறேன் . நடிகனாக இருப்பதன் லாபம் பார்த்தாயா? பொய் சொல்லத் தெரியாதே, நடிக்க வராதே என்ற கவலை வேண்டாம்.” என்றவன் குரலில் சிரிப்பு தெரிந்தது.

மனம் இலகுவாகிவிட, ஓரக் கண்ணால் நோக்கி “விட்டால் நடிப்புதான் உலகில் மிக உயர்ந்த தொழில் என்று முடித்து விடுவீர்கள் போல!” என்றாள் அவள். முறுவலித்து, “கிட்டத்தட்ட அப் . .வேண்டாம். இன்னொரு விவாதத்துக்கு அவகாசமில்லை. பிறகு வைத்துக் கொள்ளலாம். சீக்கிரமாக அறைக்குள் போய்விடு. கதவைப் பூட்ட வேண்டாம். யாரோ இருக்கிறார்கள் என்று சந்தேகம் வரும். சத்தமில்லாமல் ஒதுங்கி இரு. கையை சுத்தம் செய்துகொண்டு சொல்லு. நான் போய்க் கதவைத் திறக்கிறேன்.” என்றான்.

அதே போல அவள் உள்ளே போய் வந்து கதவை

ஒருக்களித்தாற்போல சாத்தியதும், ஸ்பூனால் எதையோ எடுத்து வாயில் வைத்தபடி போய் அறையின் வெளிக் கதவை உதயராஜன் திறந்தான்.

திறக்கும்போதே, “உண்டு முடித்தால் கூப்பிட மாட்டேனா? என்ன அவசரம்? . . “ என்று அதட்டலாகக் கேட்டவனின் பேச்சு சட்டென நின்று பின் மறுபடி தொடர்ந்தது. “வாட்? ரதி . .மாலா! என்ன அதிசயம்? இ . .இது. . . .வந்து . . இது உன் அறை இல்லையே . . “ என்று வினவினான்.

அவள் பதில் சொல்லு முன்னரே தலையை நீட்டி அறை எண்ணைச் சரி பார்த்தான். “ஊகூகூம். இல்லவே இல்லை. என்னதேதான். என்ன திடீர் என்று இந்தப் பக்கம் வருகை? “ என்று விசாரித்தான்.

ரதிமாலா! இந்தப் பெயர் சுமனசி கேட்டிருக்கிறாள். உதயராஜனோடு ஜோடி சேர்ந்து நடிப்பவள். இருவரும் நடித்த எல்லாமே வெற்றிப் படங்கள் என்றாளே!

விழா நடந்த தியேட்டருக்குச் செல்லும் வழியில் இருவரும் இணைந்திருந்த போஸ்டர்கள் கூட வைக்கப்பட்டிருந்தனவே!

அவள் எதற்கு இந்த நேரத்தில் இங்கே வந்திருக்கிறாள்?

என்னமோ உள்ளூரப் பிசைவது போல சுமனசி உணரலானாள்.

அவன் ரதிமாலா என்றானே, அவளது குரல் முதல் முறையாகக் கேட்டது. “வழி விட்டால் உள்ளே வந்து சொல்லலாம் என்று நினைக்கிறேன்! “ என்றாள் அவள் மிடுக்காக.

“ஓஓஓ! சாரிம்மா. சாரி சாரி! சாப்பிட்டுக் கொண்டிருந்தேனா? ட்ரே எடுத்துப் போக ரூம் சர்வீஸ் வந்தானோ என்று எண்ணிவிட்டேன். ஓகே ஓகே உள்ளே வா. வந்து, இந்த நேரம் திடீர் தரிசனம் தந்திருக்கும் விவரம் சொல்லு.” என்று ஒதுங்கி வழி விட்டான் உதயராஜன்.

உள்ளே வந்து கொஞ்சம் மீதி இருந்த ட்ரேயைப் பார்த்த ரதிமாலா ஆவலோடு உதயராஜன் பக்கம் திரும்பினாள்.

“மீதியை நாம் இருவருமாகச் சேர்ந்து சாப்பிடுவோமா? ஒருவருக்கு ஒருவர் ஊட்டி விட்டுக்கொண்டு . . . “ என்று கூறியபடி தட்டருகே சென்றவள் முகம் சுளித்திருக்க வேண்டும். ஏனெனில் தொடர்ந்தது அவளது எரிச்சல் குரல்.

“ஆனால் என்னப்பா, எல்லாம் வெறும் சைவமா? நீ கூடவா? கேட்டால் அசைவத்தில் அத்தனை விதமும் அனுப்பி இருப்பார்களே!”

“ஏனோ? நான் காய்கறி உண்டால், கோழியும் ஆடும் கோபித்துக் கொள்ளுமா? இன்றைக்கு ரொம்ப பிசி! கொஞ்சம் எளிய உணவு உண்டு சீக்கிரமாகத் தூங்கலாம் என்று ஐடியா. நீ சொல்ல வந்ததை . .”என்று நாசூக்காக ஒரு கொட்டாவியை வெளியேற்றி, அதற்காக “சாரி”யும் சொன்னான்.

கொஞ்சம் நாகரீகம் உள்ளவர்கள் என்றால் இந்த நேரத்தில் தொல்லை செய்ததற்கு வருத்தம் தெரிவித்துவிட்டுக் கிளம்பியும் இருப்பார்கள்.

ஆனால் இந்தப் பெண் அப்படி இல்லை போல சுமனசிக்குத் தோன்றியது!

அல்லது, இதுதான் வழக்கமோ? சுமனசி இங்கே இருப்பதால்தான் வந்தவளைத் திரும்பிப் போகச் சொல்லுகிறானோ?

# அத்தியாயம் - 4

அப்படித்தானோ என்பது போல, ரதிமாலாவின் குரல் கேட்டது.

அவளோடு கூட வந்தவளையாக இருக்க வேண்டும். “ஆயா, நீ போகலாம். அப்புறமாக நான் கூப்பிடுகிற போது வந்தால் போதும்.” என்று கூறி, அவளை அங்கிருந்து அனுப்பி வைத்தாள்.

வேண்டாம் என்று உதயராஜன் தடுக்கவில்லையே.

தொப்பென்று சோஃபாவில் அமர்ந்து, “இங்கே என் பக்கத்தில் வந்து உட்கார், உதய். உன்னிடம் நிறையப் பேச வேண்டும். அதாவது நம்மால் பேச முடிந்தால் . . .” எனறுரைத்து ஒரு மாதிரி நகைத்தாள்.

உதயராஜன் சிரிப்பில் கலந்துகொள்ளவில்லை. கூடவே, “ரொம்ப முக்கியமான விஷயமா, ரதிமாலா? அப்படி ஏதும் இருந்தால் நிதானமாக நாளை பேசலாமே! சில வேலைகளைச் செய்து முடிக்க வேண்டி இருந்ததால், விழாவிலிருந்து இங்கு வந்து சேரவே எனக்குத் தாமதமாகிவிட்டது. நான் இன்னும் குளிக்கக் கூட இல்லை. அதனால் ” என்றவனின் பேச்சில் ரதிமாலா குறுக்கிட்டாள்.

“அடப் பாவமே! ரொம்ப அசதியாக இருக்குமே! அச்சச்சோ! போனால் போகிறது ஒரு வகையில் அதுவும் நல்லதுதான். நான் வேண்டுமானால் . .. வேண்டுமானால் என்ன? நீ பேசாமல் வந்து ஷவரில் நில்லு. நானே உன்னைக் குளிப்பாட்டி விடுகிறேன். என்னடா செல்லம்?” என்று கொஞ்சலாகக் கேட்டாள் அவள்.

என்ன பேச்சு இது? எல்லாம் தெளிவாகக் காதில் விழ, அந்த ஏசிக்காற்றிலும் சுமனசியின் முகம் சூடாகி வியர்த்து வழிந்தது.

நல்லவேளையாக அவனும் கொஞ்சலில் கலந்து கொண்டுவிடவில்லை. ஆனால், “போடீ” என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளவும் இல்லை.

மாறாக, “ஜோக்கா? கடவுள் காப்பாற்றட்டும்!” என்று நகைத்தான். “கேள் ரதிமாலா, என் மூன்றாவது வயதில் இருந்து, என்னைக் குளிப்பாட்டி விட என் அம்மாவைக் கூட நான் அனுமதித்தது இல்லையாம். இப்போது மேக்கப் போடும்போதே கூசுகிறது . . .ப்ளீஸ்மா, வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டுத் தயவுபண்ணிக் கிளம்புகிறாயா? “ என்றான் சற்றே அலுத்தாற்போல.

“உதய், நீ புரியாதது போல நடிக்கிறாய் என்று நினைக்கிறேன்! “

“நடிப்பா? அது காசுக்குச் செய்வது அல்லவா?” என்று கேட்டான் அவன். “ஆனால், இன்றைக்கு என் மூளை வேலை செய்ய மறுப்பது

போல எனக்கே தோன்றுகிறது. அதிக வெளிச்சமும் கூட்டமுமாக வேலை அதிகமில்லையா? ரொம்ப அசதியால் இருக்கலாம்.” என்று காரணமும் காட்டினான்.

இப்போதும் அவனுடைய கதாநாயகி நடிகை அசையக் காணோமே!

இது அவள் மேல் தப்பா? அவன் மீதா? தான் இருப்பதால் அப்பாவி போல நடிக்கத்தான் செய்கிறானோ? அவனது இணக்கம் சிறிதும் இல்லாமலா ஒருத்தி இந்த அளவு அவன் தனியே இருக்கும் இடம் தேடி வந்து, அதுவும் இரவு நேரத்தில் வந்து இப்படிப் பேசுவாள்?

கூசவே காணோமே! எப்படி முடியும்?

பெரு முயற்சி செய்து தன் மனதை சுமனசி கட்டுப் படுத்தினாள்.

உதயராஜன் நல்லவனோ கெட்டவனோ? இந்த இக்கட்டான தருணத்தில் அவளுக்கு அடைக்கலம் அளித்திருக்கிறான். பசிக்கு உணவு தந்திருக்கிறான். அவனைத் தவறாக நினைப்பது தவறு.

அத்தோடு, நடப்பது எதுவானாலும் அது அவனது சொந்த விஷயம். அதைக் காது கொடுத்துக் கேட்பதே தவறு. வேறு வழியின்றிக் கேட்க நேர்ந்துவிட்டது.

அதற்கு மேல் அவனைப் பற்றித் தவறான அபிப்பிராயம் வேறு கொள்வது பெரும் தவறு. தப்பு என்றே சொல்லலாம். ஆனால் . .

இடையிடையே நீண்ட அமைதி வேறு சுமனசியை நிலைகுலையச் செய்தது. அங்கே என்ன நடக்கிறதோ என்று கட்டுப்பாடே இல்லாமல் மனக்குரங்கு கற்பனை செய்தது.

காதைப் பொத்திக்கொண்டு இருந்தால் கொஞ்சம் குரல் மங்கலாகக் கேட்பதோடு, இந்தக் கற்பனையும் நேராதிருக்குமோ என்று முயற்சி செய்து பார்த்தாள்.

ஆனால் சுதி குறைந்து ஒலித்தபோதும், வார்த்தைகள் தெளிவாகவே கேட்டது. இப்போதெல்லாம் நடிப்புப் பயிற்சியின்போது, உச்சரிப்புத் தெளிவு, குரலில் ஏற்ற இறக்கம் எல்லாம் கற்றுக் கொடுப்பார்களாமே. இருவரின் பேச்சும் தெளிவாக இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. கதவை நன்றாகச் சாத்தினால், அவர்கள் பேச்சுக் கேளாதிருக்க வாய்ப்பு இருக்கலாம். ஆனால், வந்திருப்பவளுக்கு இவள் இருப்பது தெரிந்துவிடும். அது ரொம்பப் பெரிய பிரச்சினையாகி விடலாம்.

அவனுக்குமே! இவ்வளவு நெருக்கம் இருக்கும்போது, அங்கே இன்னொரு பெண்ணைப் பார்த்தால் அவள் என்ன ஆட்டம்

ஆடுவாளோ!

திடுமென ரதிமாலா பேசலானாள். “உதய், என்னைப் பற்றி உனக்குத் தெரியும். ஓரளவேனும்.  .என் பெற்றோர் எனக்குத் திருமணம் நடக்க விட மாட்டார்கள். நான் சம்பாதிக்கிற பணம் அவர்களுக்கு வேண்டும். ஆனால் இதற்கு ஒரு வழி இருக்கிறது. நாம் இருவரும் ரகசியமாகத் திருமணம் செய்துகொண்டு போய் நின்றால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாமோ வெற்றி ஜோடி. இருவருமாகச் சேர்ந்து நிறைய்யச் சம்பாதிக்கலாம். கோடி கோடியாக. என்ன சொல்லுகிறாய்?” என்று கேட்டாள்.

“ஐடியா பிரமாதம்தான். ஆனால், இந்த திட்டத்தில் ஒரு பெரிய ஓட்டை இருக்கிறதேம்மா! எனக்குத் திருமணம் செய்யும் எண்ணமே இப்போதைக்கு இல்லை.  . . “              குறுக்கிட்டு, “புதிதாக ஏற்படுத்திக் கொள்ளேன். என்னைப் போல! எண்ணிப் பார்த்தால் கற்பனையே இனிக்கும்! “

அவள் பேசவே இல்லாதது போவப் பாவித்து, “அத்தோடு ரதிமாலா, கல்யாணம், காதல் என்பது போல நான் உன்னிடம் பேசியதோ, பழகியதோ கூடக் கிடையாது என்று எனக்கு ஞாபகம்!. “ என்றான் உதயராஜன் சாதாரணக் குரலிலேயே!

ஓகோ, அப்படியானால் வந்திருக்கும் பெண்ணுக்குத்தான் நாசூக்கு இல்லை!

“ஷ்! சும்மா விளையாடாதே உதயா. நம் இருவருக்கும் நிறையப் பொருத்தம் இருக்கிறது. உயரம், உடல் கட்டு, தோற்றப் பொலிவு . . . எத்தனையோ அடுக்கலாம். இரண்டு படங்கள் பிரமாதமான வெற்றியாகி உன் . . .வந்து, இருவரின் ரேட்டுமே பல மடங்காகி இருக்கிறது.  ரசிகர்கள் வரவேற்பார்கள். நண்பர்கள் சந்தோஷப்படுவார்கள் . . .”

இந்தப் பேச்சை நிறுத்த எண்ணினான் போல, உதயராஜனின் குரல் மாறியது.

“பார் பெண்ணே, யார் ஏற்றாலும் கொண்டாடினாலுமே, அது பற்றி எனக்குக் கவலை இல்லை. இந்தத் தொழிலுக்குள் இறங்கும்போதே என் தாயாருக்கு சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். இங்கே பழகுகிற யாரையும் திருமணம் செய்வது இல்லை என்று. அதனால் உன்னை மணப்பது, அதுவும் திடீரென்று அதிரடியாக மணப்பது சற்றும் சாத்தியம் இல்லை. “ என்றான் அழுத்தம் திருத்தமாக.

ஆனால் ஒரு முடிவோடு வந்தவள் போல, அவனது குரல் பேச்சு எதையும் ரதிமாலா மதிப்பதாக இல்லை.

அல்லது பிடிவாதக்காரியாகவும் இருக்கலாம்.

அவனது வார்த்தைகளை அலட்சியம் செய்து, தன் விருப்பம் போல அவள் ஏதேதோ பேசிக்கொண்டே இருந்தாள்.

கொஞ்சலும் சலுகையுமான குரலில், “சும்மாச் சுற்றிக்கொண்டே இருக்காதே, உதய்! வா. வந்து என் பக்கத்தில் உட்கார். நம் முதல் படத்தில் சோஃபாவில் காதல் காட்சி நினைவிருக்கிறதா? அது போல அணைத்துக்கொண்டு பேசலாம் வா.” என்று கூச்சமின்றிக் கூப்பிட்டாள்.

“ரதிமாலா, நான் என் அம்மாவுக்குச் செய்து கொடுத்த சத்தியம் பற்றிச் சொன்னேன். ” என்றான் உதயராஜன் ஒரு மாதிரிக் குரலில்.

“பெரிய சத்தியம்! ஒரே ஒரு தரம் மீறுவதால் பெரிய பாவம் வந்துவிடாது. உன் அம்மாவுக்குப் பெரும் பணத்தை . . . பெரிய பெரிய நகைகளைக் கொடுத்து சமாதானம் செய்து விடலாம். “ என்று மேலும் திட்டமிட்டாள்.

ஆனால், “பாவம், நீ!” என்று பரிதாபப்பட்டான் ஹீரோ. “உண்மையிலேயே உன் பெற்றோர் ரொம்ப மோசம் என்றே தெரிகிறது, ரதிமாலா. ஆனால் என் அம்மா நேர் மாறு. அடியோடு வேறு மாதிரி. லஞ்சம், அன்பளிப்பு எல்லாம் அவர்களிடம் நடக்காது. அத்தோடு, நானும் இலகு சத்தியம் செய்கிறவன் இல்லை. கிளம்புகிறாயா? “ என்று நாசூக்குப் பாராமல் விரட்டவே செய்தான்.

ஆனால், ரதிமாலா ஒரு முடிவோடு வந்திருந்தாள் போலும். அப்போதும் கிளம்பாமல் வேறு வழி கூறினாள்.

“உதய், என் மொபைலை நோண்டிக் கொண்டிராமல் கீழே வைத்துவிட்டு என்னைப் பார். என் உடல் உனக்கு என்ன சொல்லுகிறது என்று புரியவில்லையா? அப்படியானால், நான் சொல்வதையும் சேர்த்துக் கவனி. உன் தாயிடம் நாம் இருவரும் உணர்ச்சி வேகத்தில் தப்பு செய்துவிட்டதாக ஒரு பொய் சொல்லி விடலாம். கேளேன், அது பொய்யாகக் கூட இருக்கத் தேவையில்லை, உதய். இன்று இங்கேயே . .நாளைக் காலை வரை இங்கேயே இருந்துவிட நான் தயார் . .. தயாராகத்தான் வந்திருக்கிறேன். உதயராஜ், எனக்குக் கவர்ச்சி அதிகம். கவர்ச்சிக் கன்னி என்று பட்டமே கொடுத்திருக்கிறார்களே! செயற்கை கலவாத கவர்ச்சி. வேண்டுமானால் நீயே பா . . .”

“தயவு பண்ணி வேண்டாம், ரதிமாலா. இதோ வெளியே உன் பணிப்பெண், உன் ஆயா வந்துவிட்டாள்.” என்று போய்க் கதவைத் திறந்தான்.

ஆத்திரத்துடன் “இருக்காது. நான் சொல்லியிருக்கிறேன், நான்

கூப்பிடாமல் அவள் வரமாட் . . .” என்று வேகமாகப் பேசிய ரதிமாலா திகைத்தாள்.

காரணம், சற்று மிரண்ட தோற்றத்துடன் அறை வாயிலிலேயே அவளுடைய பணிப்பெண் நின்றாள்.

உதயன் உள்ளே திரும்பி, “சற்று முன்தான், உன் மொபைலில் இருந்தே மெஸேஜ் அனுப்பி அவளை வரவழைத்தேன். கிளம்பு ரதிமாலா.” என்றான்.

“உதயன், என்னைச் சீண்டாதே. அப்புறம் . . . நான் என்ன செய்வேன் என்று உன்னால் ஊகிக்கக் கூட முடியாது. சொல்வதைக் கேள். நான் தோல்வியை ஒத்துக் கொள்கிறவள் இல்லை! இன்று வரை நான் யாரிடமும் தோற்றதில்லை. . . “

“எதற்கும் முதல் முறை என்று ஒன்று உண்டு என்பார்கள். இந்தாம்மா உன் கைப்பை. உன் பொருள் வேறு ஏதேனும் . . ம், அடடா, இந்தா உன் மொபைல்! வேறு ஒன்றும் நீ கொண்டு வரவில்லை என்று நினைக்கிறேன். அப்படியே ஏதேனும் இருந்தாலும் காலையில் நானே அனுப்பி விடுகிறேன். இன்னும் தாமதமாக்காமல் இப்போது கிளம்பு! எவ்வளவு நேரத்தை வீணாக்கிவிட்டாய், பார்! இனியேனும் போய்த் தூங்கு. முக்கியமாக நான் தூங்க வேண்டும்! போம்மா. கிளம்பு!”

சற்று நேரம் ஒன்றும் கேட்கவில்லை.

பிறகு, “இதற்காக நீ ரொம்பவும் வருத்தப்படுவாய் உதயா. ஒரு நல்ல வாய்ப்பை விட்டுவிட்டோமே என்று எண்ணி எண்ணி வருத்தப்படுவாய்! “என்றாள் ரதிமாலா ஆத்திரத்துடன் .

“என் தலைவிதி அப்படி இருந்தால் அதற்குப் பாவம், நீ என்னம்மா செய்ய முடியும்? ஆனால் என்னைப் பற்றிக் கவலைப்படாமல் நீ ஆயாவோடு போம்மா. “ என்று கதவைத் திறந்து வைத்துக்கொண்டு உதயன் கதவருகிலேயே நின்றான்.

கதவைத் தாண்டி வெளியே செல்லும்போதும் அவளது பேச்சுநிற்கவில்லை. “ஒன்றை நினைத்தால் நான் லேசில் விடுவதில்லை, உதயா. விடவே மாட்டேன். நினைவிருக்கட்டும்.” என்று, சூளுரைப்பது போலக் கூறியதை அடுத்துச் “சுளீரே”ன்று அறை விழுந்த வேகத்தில் சுமனசி திடுக்கிட்டுப் போனாள்.

யாரை . .என்ற கேள்வி தோன்றுமுன்னரே, “அய்யோம்மா . .” என்ற பெண்குரல் விழுந்த அடி ரதிமாலாவுடைய பணிப் பெண்ணுக்கே என்பதை உணர்த்தியது.

பொது இடத்திலேயே இப்படி அடிப்பவள் அந்தப் பெண்ணைச் சும்மா விடுவாளா?

“நான் கூப்பிடாமல் எப்படியடி வருவாய்? வாவா, உன் தோலை உரித்து விடுகிறேன்!” என்று அந்தக் கதாநாயகி நடிகை மிரட்டியதில் உதயராஜன் கூட சற்றுக் கலங்கியிருக்க வேண்டும்.

“மெல்ல ரதிமாலா. உன் மொபைலில் இருந்து செய்தி போய்த்தான் அவள் வந்திருக்கிறாள். அத்தோடு, இது ஹோட்டல். யார் யாரோ தங்கியிருக்கலாம். பொது நலவாதிகள் கூட இருக்கலாம். இந்த மாதிரி இரண்டு அடி கொடுத்தால் வேண்டாத காதில் விழுந்து, வேலைக்காரப் பெண்ணைக் கொடுமை செய்ததாகப் புகார் கொடுத்து வைத்தால் உன் “இமேஜ்” என்ன ஆகும்? யோசி!” என்று எச்சரித்தான் அவன்.

இடைப்பட்ட ஒரு சிறு மௌனத்தில் ரதிமாலா வெட்டுவது போலப் பார்த்திருக்க வேண்டும். “சீ போடீ நாயே. உன்னை வீட்டுக்குப் போய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன். . .” என்று மிரட்டியவளின் குரல் தேய, “அப்பாடி!” என்ற ஒரு பெருமூச்சுடன் கதவைச் சாத்திவிட்டு சோஃபாவில் வந்து விழுந்தான் உதயராஜன்.

இவன் களைத்துப் போனது, ஓய்வற்று அலைந்ததினாலா? அல்லது, சற்று முன் நடந்த உணர்ச்சிகரமான வாக்குவாதத்தின் காரணமாகவா?

சே, ஆண்களுக்கும் பிரச்சினைகள் . . . அதுவும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரக் கூடும் என்று சுமனசி எண்ணியதே இல்லையே!

கூடவே இப்படிப்பட்ட பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த மாதிரி நடந்தது என்று யாரேனும் சொன்னால் அவள் நம்பியிருக்கவே மாட்டாளே!

அந்த ரதிமாலாவிடம் சொன்னதே உண்மையாக, உதயராஜன் களைத்திருக்க வாய்ப்பும் இருந்தது.

நடுநாயகமாக இருக்க நேர்ந்த அந்த விழா, அப்புறம் அவளுக்காகச் சுற்றியது!

இந்தக் களைப்புடன் அந்த சோஃபாவில் சமாளித்துப் படுத்து உறங்க வேண்டும்.

உதயன் நல்ல உயரம் என்பது திடுமென அவளுக்கு நினைவு வந்தது. இலகுவாகப் படுப்பது இன்னமும் கடினம்!

ஆனால் அவன் சொன்ன காரணத்துக்குப் பிறகு, உள்ளே படுக்கச் சொல்லவும் முடியாது!

சற்று யோசித்துவிட்டு, ஒரு தலையணையை எடுத்துக்கொண்டு, சுமனசி முன்னறைக்குச் சென்றாள்.

சிகரட் நெடியை அவளது நாசி உணர்த்தியது. அவன்தான்.

ஏதாவது பிரச்சினை என்றால், ஊரில் கடை சொந்தக்காரர் சிகரட்டைப் பற்ற வைப்பது, அவளுக்கு நினைவு வந்தது.

நாயக நடிகனுக்கு அந்தப் பெண்ணின் பிரச்சினையா? அல்லது அந்த சோஃபாவில் படுக்க முடியவில்லையா?

அவன் புருவம் சுருக்கி ஏறிடவும், "வவந்து, இந்தத் தலையணையை வைத்துக் கொண்டால் சோஃபாவில் படுப்பதற்குச் சற்று வசதியாக இருக்குமோ என்று கொண்டு வந்தேன்." என்றுரைத்துத் தலையணையை அவன் அருகில் வைத்தாள்.

தலையணையை வைத்துவிட்டு அவள் நிமிரும்வரை பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

பிறகு, "மெய்யாகவே இதைத் தரத்தான் வந்தாயா? அல்லது உனக்கும் வேறே எண்ணம் ஏதும் இருந்ததா?" என்று, எதையும் காட்டாத குரலில் கேட்டான். அல்லது சற்றே ஏளனம் தொனித்ததோ?

ஆனால் வேறே என்ன எண்ணம் . . .

ஒரு கணம் புரியாமல் விழித்த சுமனசியின் முகம் சட்டெனக் கன்றிச் சிவந்தது.

சீறிச் சினந்த முகத்துடன், "என்ன சொன் . . " என்று அவள் ஆத்திரத்துடன் தொடங்கும்போதே சமாதானம் கோரும் செயலாகக் கைகளை மேலே தூக்கினான் அவன்.

கைகளை உயர்த்தி, "ஹேய் . .கூல். கூல். அமைதிம்மா, ப்ளீஸ்! இங்கே எனக்குத்தான் கொஞ்சம் மனநிலை கெட்டுவிட்டது. சிலபேர் எந்த அளவுக்குப் போகிறார்கள் என்று ஒரே வெறுப்பாக . . .நீயும் எல்லாம் கேட்டிருப்பாய்தானே? முட்டாள் பெண்! திமிர் வேறு! சாரி. அவளோடு உன்னை ஒத்து நினைத்திருக்கக் கூடாது! போகட்டும். விடு. போய்ப் படுத்துத் தூங்கு. நாளை அதிகாலையிலேயே . . ஹோட்டலில் நடமாட்டம் தொடங்கு முன்பே கிளம்ப வேண்டும். போய் ஓய்வெடு. குட்நைட்." என்றுவிட்டு மறுபடியும் சிகரட்டை வாயில் வைத்தான் அவன்.

அதற்கு மேல் அவன் மீது கோபத்தை நிலை நிறுத்திக்கொள்ள அவளாலும் முடியவில்லை.

அவளது இனத்தைச் சார்ந்த ஒருத்தி, மகாக் கேவலமாக நடந்து காட்டிய பிறகு, அவனும்தான் வேறு என்ன நினைப்பான்?

ஆனாலும் அதற்காக . . .மேலே யோசிக்கவோ, அங்கே நிற்கவோ பிடிக்காமல், "குட்நைட்." என்று பதிலுக்கு முணுமுணுத்துவிட்டுத் திரும்பி நடந்தாள் சுமனசி.

கட்டிலில் ஏறிப் படுக்கும்போதே, தூக்கம் கண்ணைக் கட்டுவது போல இருந்தது. அவ்வளவு சுகமான படுக்கை.

அவனுக்கான இந்த வசதியை விட்டுவிட்டு உதயராஜன் கஷ்டப்பட்டு சோஃபாவில் முடங்கிக் கிடக்கிறான்!

பெரிய தப்புச் செய்தது போல உணர்ந்தாலும், வேறு எதுவும் செய்வதறகு இல்லை. மீண்டும் போய் நின்றால் அவனே நோகப் பேசக் கூடும். எதுவும் முடியாமல் சுமனசி பேசாமல் படுத்தாள்.

கூடவே காலையில் சீக்கிரமாக எழ வேண்டும். அவன் வந்து எழுப்பும்படி ஆகிவிடக் கூடாது.

அதே நினைவாகப் படுத்ததோ என்னவோ? வெளியே இருள் கலையுமுன்பாகவே சுமனசி விழித்துவிட்டாள்.

பல் துலக்கி, குளித்துக் குளியலறையிலேயே உடை மாற்றிக்கொண்டு அவள் வெளியே வந்தபோது, அவன் லேசாகக் கதவைத் தட்டினான்.

அவளைப் பார்த்தவனின் முகம் மலர்ந்தது. “ஓ, குளித்தே ஆயிற்றா? வெரிகுட். ஹாலில் ஜக்கில் காஃபி இருக்கிறது. குடித்துக் கொண்டிரு. நானும் இதோ கிளம்பி வந்து விடுகிறேன்.”

காரை அவனேதான் ஓட்டினான். ஓட்டும்போது சட்டென அடையாளம் தெரியாதபடி பெரிய கறுப்புக் கண்ணாடி, வெளிப்புறத்துக்கு லேசாக முகம் மறைத்தாற்போலச் சாய்வாக வைத்த தொப்பி . ..

மாறு வேஷம் போலப் பெரிதாக எதையும் செய்யவில்லை என்றாலும் சட்டென அடையாளம் காண்பது கடினம்.

பெரிய ஸ்டார் ஆவதானால் அதற்கும் விலை கொடுத்தாக வேண்டும் போல!

ஒன்று தோன்ற அவன் புறம் திரும்பி, “இந்தக் காரை அடையாளம் கண்டுவிட மாட்டார்களா, சார்?” என்று கேட்டாள் சுமனசி.

“ஊகூம். இது என் கார் அல்ல. அவ்வப்போது அங்கங்கே நண்பர்களிடம் வாங்கிக் கொள்வேன். தேவை முடிந்ததும் டிரைவர் கொண்டுபோய் நண்பனிடம் சேர்ப்பித்து விடுவான். பரவாயில்லை. சரியாகவே ஊகித்திருக்கிறாய்.” என்றான் அவன் மெச்சுதலாக.

திறமைக்குப் பரீட்சை மாதிரிப் பெரிய விஷயம் இல்லை என்றாலும், தலையில் கிரீடம் வைத்த மாதிரி அவள் உணர்ந்தாள்.

யார் என்ன திட்டுவார்களோ என்றில்லாமல் ஒரு நல்ல வார்த்தை எவ்வளவு சுகமாக இருக்கிறது? ஆனால் அக்கா அங்கே

என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கிறாளோ?

ஒரு பிசிஓவில் போய்த் தகவல் அறியக் கூடத் தைரியம் இல்லை!

நல்லவேளையாக உதயராஜன் ஏதோ கேட்டான்.

“பசித்தால் தயக்கம் இல்லாமல் சொல்லு. பின் சீட்டில் சான்ட்விச் கொஞ்சம் இருக்கும். ஃப்ளாஸ்கில் காஃபியும் இருக்கும். எப்படிக் கேட்பது என்ற யோசனையில் பசியோடு இருக்க வேண்டாம்.”

“இப்போது இல்லை சார். அங்கேயே காஃபியோடு பிஸ்கட்டும் இருக்கவே, அதில் இரண்டு உண்டுவிட்டேன். அதனால் பசிக்கவில்லை.”

பக்கவாட்டுப் பார்வையை உணர்ந்து திரும்பி, “என்ன சார்?” என்று வினவினாள்.

தலையசைத்து “ஒன்றுமில்லை.” என்றான் அவன். “உனக்காக யாரிடமும் எதையும் கேட்கப் பிடிக்காது போல?” என்றான் கேள்வியாக.

நம்மால் யாருக்கும் தொல்லை கூடாது என்று . . . என்பது போலப் பொதுப்படையாக ஏதோ சொல்ல நினைத்த சுமனசிக்கு த் தொண்டை அடைத்தது.

செருமிக்கொண்டு, “அப்படி இல்லை சார். நமக்கென்று எதையும் கேட்கும் உரிமை இல்லாது போகும்போது . . அதற்காக உடல் நலத்தையும் விட முடியாது. எனவே, அக்காவும் நானும் இப்படியே பழகிவிட்டோம்.” என்று உண்மையைச் சொன்னாள்.

சிறு அமைதியின் பின், “சென்னையில் யாரையும் தெரியுமா?” என்று கேட்டான் அவன்.

“இல்லை சார். அங்கே அறையில் வைக்கப்பட்டிருந்த பத்திரிகையை எடுத்து வந்தேன். அதில் தேவை விளம்பரங்களைப் பார்த்து, என் தகுதிக்கு ஏற்ப ஏதாவது முயற்சி பண்ண வேண்டும். “ என்றவள் அவன் பேசாதிருக்கவும், “திருச்சியிலேயே பல போர்டுகள் பார்த்தேன், சார். பெண்கள் தங்கிப் படிப்பதற்கு, வேலைக்குச் செல்வதற்கு என்று விடுதிகள் பெயர் பார்த்தேன். சென்னையிலும் இருக்கும்தானே? கொஞ்சம் சாதாரணமாக ஒன்றைப் பார்த்துத் தங்கிக் கொள்ளலாம். முதல் செலவுக்கான பணத்துக்குப் பிரச்சினை இல்லை சார். அக்கா கொஞ்சம் அதிகமாகவே வைத்திருக்கிறாள். வீட்டுச் செலவுப் பணத்தையும் சேர்த்து வைத்தாளோ, என்னவோ? பாவம், அதற்காக வேறு என்ன பாடு படுகிறாளோ?” என்றபோது அவளது குரல் லேசாகக் கரகரத்தது.

சற்று நேரம் பேசாமலே காரை ஓட்டினான் உதயராஜன்.

பிறகு, “பின் புறம் இருக்கும் சான்ட்விச் பாக்கெட்டையும் காஃபியையும் எடுக்கிறாயா? சாப்பிட்டுக்கொண்டே போகலாம். காரை இங்கெல்லாம் நிறுத்தி உண்பது அவ்வளவு சரியில்லை. எல்லாம் செட் செட்டாக வைத்திருப்பார்கள். நீ சாப்பிட்டபடியே எனக்கும் ஒவ்வொன்றாக எடுத்துத் தந்தாய் என்றால், காரை ஓட்டியபடியே நானும் உண்டுவிடுவேன்.” என்றான்.

பெரிய முக்கோணம் முக்கோணமாக “ஃபாயிலு”க்குள் பாக் பண்ணப் பட்டிருந்த சான்ட்விச்கள். அதையும் மீறி மடியில் துகள்கள் விழுந்து விடாமல் காக்க டீ டவல்கள்.

அவனுக்கும் எடுத்துக் கொடுத்தபடி தானும் உண்ணும்போது, திடுமென சுமனசிக்கு ஆச்சரியமாகிப் போயிற்று.

தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமான நடிகன் இவன். அவன் அருகில் அமர்ந்து ரொம்ப சாதாரணமாக உணவை எடுத்துக் கொர்டுத்துத் தானும் உண்டு கொண்டு இருக்கிறாளே!

இதை நம்புவதே எவ்வனவு கடினம்!

மந்தாகினிக்கு மட்டும் இது தெரிந்தால் தானும் இங்கே இல்லையே என்று குதிப்பாள்! ஆனால் இது அவளால் நடக்கும் அதிசயம் அல்லவா? கட்டாயமாக அவளது ஸ்லாம் புக்கில் உதயராஜனின் கையெழுத்தை வாங்கி வைக்க வேண்டும். இரண்டு வாரம் கழித்து, திருச்சியில் அவள் தங்கியிருந்த வீட்டுக்கு அனுப்பி, மந்தா வந்து கேட்கும்போது கொடுக்குமாறு சொல்ல வேண்டும்.

அதற்குள் அவளுக்கு வேலை கிடைத்து, நல்ல தங்குமிடமும் கிடைத்துவிட்டால், சந்தோஷமாக முகவரியையும் கொடுக்கலாம்!

ஆனால் அவளுக்கு வேலை கிடைக்குமா?

கிடைக்கும். கிடைத்தாக வேண்டும். அக்காவின் கஷ்டமும், அவளது துன்பமும் தீர, சுமனசிக்குக் கட்டாயமாக வேலை கிடைத்தே ஆக வேண்டும்!

உண்டு முடித்த பின் மிச்சம் மீதிகளைத் துப்புரவாக எடுத்து வைத்துவிட்டு, கையோடு எடுத்து வந்திருந்த பத்திரிகையைப் பிரித்துத் தேவை விளம்பரங்களில் தனக்கு உகந்தவற்றைத் தேடலானாள் அவள்.

அவனும் அதில் குறுக்கிடவில்லை.

அதிகாலையிலேயே கிளம்பிவிட்டதால் அதிகம் நெரிசலில் மாட்டிக் கொள்ளாமல் சென்னைக்கும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

கார் எங்கெங்கோ சென்று, பல்வேறு அலுவலகங்கள்

அமைந்திருந்த ஒரு பெரிய காம்ப்ளக்சின் உள்ளே சென்றது.

பக்கவாட்டில் சென்று உதயராஜன் காரை நிறுத்தினான். “இரண்டாவது மாடியில் “தயா ஃபவுண்டேஷன்” என்று பெயர்ப்பலகை இருக்கும். அங்கே வேலைக்கு ஆள் எடுப்பதாகக் கேள்வி. போய் முயற்சித்துப் பார். உன் சான்றிதழ் படி நிர்வாகம், வரவு செலவு பற்றிய அடிப்படைக் கல்வி கற்றிருக்கிறாய் அல்லவா? அனேகமாக வேலை கிடைக்கக் கூடும். ஆல் த பெஸ்ட்.” என்றான் அவன்.

சுமனசி சற்றுத் திக்கென்றது.

இது “குட்பை” சொல்ல வேண்டிய நேரமா?

ஒரு வேலை கிடைக்கக்கூடிய இடத்துக்கு அவன் கூட்டி வந்ததே பெரிய காரியம். ஆனால் முடிவைத் தெரிவிக்கிறோம் என்று அந்தத் “தயா”வில் கூறினால் எந்த முகவரியைக் கொடுப்பது?

ஆனால் இதற்கு மேல் இவனைத் தொல்லை செய்வதும் சரியல்ல.

காரில் இருந்து இறங்கி அவன் புறம் வந்து தன் பிரச்சினையைச் சொன்னாள்.

“ஆனால் அதுவும் பெரிய பிரச்சினை இல்லை, சார். இந்தத் தெருவுக்குத் திரும்புமுன் முந்திய தெருவில் மகளிர் தங்குமிடம் என்று அம்புக்குறி போட்டிருந்தது. அங்கே போய்த் தங்கும் இடத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டு அப்புறமாக . . .” என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே உதயன் அவனது வாலெட்டில் இருந்து ஒரு கார்டைத் தேடி எடுத்தான்.

“சரியான விவரம் தெரியாமல் எங்கேயும் தங்குவது சரியல்ல. இப்போதைக்கு முகவரி கேட்டால் . . கேட்டால் மட்டும் இந்தக் கார்டைக் காட்டு. மற்றபடி வேண்டாம். வேலை கிடைத்துவிட்டதா என்று வந்து சொல்லு. பின்புறம் கார் பார்க்கில்தான் இருப்பேன்.” என்றான் அவன்.

“ஆனால் சார் உங்களுக்கு எத்தனையோ வேலைகள் . . . இஇருக்கும்.”

“அப்படி இருந்தால் உனனை மீண்டும் வரச் சொல்லியிருக்க மாட்டேன். போ. போய் வேலைக்கு முயற்சித்துவிட்டு வா. உன் ஃபைல் தவிர மற்றது காரிலேயே இருக்கட்டும்.” என்றவாறு கண்ணாடியை ஏற்றிக் காரைக் கிளப்பினான் உதயராஜன்.

உள்ளூரக் குழப்பத்துடன் “தயா ஃபவுண்டேஷனை” நாடிப் போனாள் சுமனசி.

# அத்தியாயம் - 5

வேலைத் தேர்வுக்கு சென்ற இடத்திலும், சுமனசியின் குழப்பம் குறைவதாக இல்லை.

எந்த வேலைக்கும் சென்னையில் பெரும் போட்டி, கூட்டம் இருக்கும் என்பார்களே! இங்கே அப்படிக் கூட்டம் எதுவும் இல்லை.

ஒருவேளை வேலைக்கான தேர்வு முடிந்துவிட்டதோ? அவள் தாமதமாக வந்திருக்கிறாளோ?

உள்ளூர நம்பிக்கை வடிந்துவிட, முதல் கவுன்டரில் அமர்ந்திருந்த பெண்ணிடம் போய், “இங்கே வேலைக்காக வந்தேன்.” என்றாள் சின்னக் குரலில்.

“ஓ!” என்ற அந்தப் பெண், “இதோ கேட்டு வந்து சொல்கிறேன்.” என்று எழுந்து சென்று ஒரு கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

விரைவிலேயே திரும்பி வந்து, “உள்ளே வரச் சொல்கிறார்கள்.” என்று கூறிவிட்டுத் தன் இடத்தில் போய் அமர்ந்தாள்.

உள்ளே அமர்ந்திருந்த பெண்மணிக்கு அழகான தோற்றம். வயது நாற்பதிலிருந்து ஐம்பதுக்குள் இருக்கலாம். அமர்ந்திருந்த நிலையில் நிமிர்வு தெரிந்தது.

மனதில் இருப்பதைக் கொக்கி போட்டு இழுக்கிற மாதிரி ஒரு கூரான பார்வை!

அவள் மனதில் இருப்பதையும் இந்தப் பெண்மணி கண்டு விடுவார்களோ? ஆனால், உடனே ஒரு வேலை வேண்டும் என்பது தவிர, அவள் மனதில் பெரிதாக என்ன இருக்கிறது?

சைகையால் எதிர் ஆசனத்தைக் காட்டிவிட்டு “இங்கே வேலை காலியாக இருப்பதாக உனக்கு யார் சொன்னார்கள்?” என்று அந்தப் பெண்மணி கேட்கவும், சுமனசி சந்தோஷமாக முறுவலித்தாள்.

பெரிய கதாநாயக நடிகன்! அவன் பெயரைச் சொன்னதுமே வேலை கிடைத்துவிடப் போகிறது.

பதில் சொல்வதற்கு உற்சாகத்தோடு வாயைத் திறந்த சுமனசி சற்றுத் திகைத்தாள்.

உதயராஜனின் பெயரைச் சொல்வது அவ்வளவு உசிதம் இல்லையோ?

அவன் பெயரைச் சொன்னால், அடுத்து அவனை எப்படித் தெரியும், எவ்வளவு நாளாகத் தெரியும்? இப்படிக் கேள்விகள் கேட்டால் என்ன சொல்வது?

நடந்ததைச் சொன்னால் நம்பக் கூடிய மாதிரி இராது. அதிலும் முந்திய இரவு பற்றி யாரிடமும் வாயைத் திறப்பதே பெரும் தவறு!

மேலும், தன் பெயரைப் பயன்படுத்தலாம் என்றால், அவனே அது பற்றி இந்த அம்மாவிடம் பேசியிருப்பானே! அப்படி இல்லாதபோது, நீயும் சொல்லாதே என்றுதானே பொருள் கொள்ள வேண்டும்?

அது மட்டுமல்ல. அவன் கொடுத்த கார்டில் கூட அவன் பெயர் இல்லை. ஏதோ நிறுவனப் பெயர் மட்டுமே இருந்தது. அந்த நிறுவனத்தில் உள்ள யாராகவும் அவன் இருக்கலாம். எம்டியில் இருந்து ஆஃபீஸ் பையன் வரை யாராகவும்!

அர்த்தம் என்னவென்றால், அவன் நேரடியாக சிபாரிசு செய்யத் தயாரில்லை!

அதனால், அவளும் அவன் பற்றி வாய்திறக்கக் கூடாது!

"வவந்து, தெரிந்தவர்கள் சொன்னார்கள் மேடம்." என்று சமாளித்தாள் அவள்.

"யாருக்குத் தெரிந்தவர்கள்? "

இந்த அம்மாவிடம் வாயை விடக் கூடாது என்று நிச்சயமாகத் தோன்றிவிட, "வேலை இருப்பது பற்றித் தெரிந்தவர்கள், மேடம்." என்றாள் சுமனசி.

"அதுதான் யார் என்று கேட்டேன். "

பெயரைச் சொன்னால் அவனுக்குப் பிரச்சினை ஆகிவிடுமா? அவன் தன் பெயரைக் கொடுக்காத காரணமே அதுதானா?

"மேடம், அந்தப் பெயரை நான் எப்படிச் சொல்லட்டும்? அப்புறம், அவரிடம் போய் ஏன் சொன்னாய் என்று நீங்கள் கோபித்தால்? உதவி செய்தவருக்கு என்னால் கஷ்டம் என்று எனக்கு வேதனையாக இராதா? அதனால், அந்தப் பேச்சைப் ப்ளீஸ் விட்டு விடுங்களேன் மேடம். அதை விட என் திறமையைப் பரிசோதியுங்களேன், மேடம், ப்ளீஸ் மேடம்!" என்று கெஞ்சிக் கேட்டாள் அவள்.

மறுபடியும் ஒரு தரம் அவளைக் கூர்ந்துவிட்டு, ஃபைலைப் பார்த்தாள் முதலாளி அம்மா. "அடிப்படை நிர்வாகம். கணக்கில் நல்ல திறமை. இந்த அளவு இங்கே போதும்தான். ஆனால், இது பெரிய நிறுவனம் அல்ல. இங்கே எனக்குச் செயலாளராகச் செயல்படத்தான் ஆள் தேட எண் . .தேடினேன். சென்னையில் உன் வீடு எங்கே இருக்கிறது?" என்று விசாரித்தாள் அந்த முதலாளியம்மா.

கேட்டது சாதாரணமாகவே இருக்கலாம். ஆனால் விஷயம்

அவளுக்குப் பிரச்சினையானது ஆயிற்றே!

இந்தப் பெண்மணியிடம் பொய் சொல்லி சமாளிப்பது கடினம் என்று தோன்ற, "மேடம், இங்கே எனக்கு வீடு . . குடும்பம் கிடையாது. சென்னைக்கே இன்றுதான் வந்தேன். ஆனால் தங்குமிடம் பிரச்சினை அல்ல. பக்கத்தில் பெண்கள் விடுதிகள் இருப்பதாக போர்டுகள் பார்த்தேன். அவைகளுள் ஏற்றதாக ஒன்றில் தங்கிக்கொண்டு, இங்கே சரியான நேரத்துக்கு வேலைக்கு வந்துவிடுவேன் மேடம்!" என்று நயந்த குரலில் பதில் உரைத்தாள் அவள்.

என்னவோ, உதயராஜன் கொடுத்த கார்டைப் பயன்படுத்த அவளுக்கு மனம் வரவில்லை.

தன்னைக் காட்டிக்கொள்ள அவன் விரும்பவில்லை என்பது தெளிவு. ஒன்றிலிருந்து ஒன்றாக, அந்தக் கார்டில் தொடங்கி, இவர்கள் அவனிடமே போய் நின்றால்? முடியாத காரியம் அல்லவே!

வெளியறையில் மாட்டியிருந்த படங்களைப் பார்த்தால், இது ஏதோ தொண்டு நிறுவனமாக இருக்க வேண்டும். அதற்கு நன்கொடை கூடக் கேட்கலாம். அவன் பெயரைச் சொல்லாதிருப்பதுதான் சரி!

"இன்றுதான் வந் . .தாயா? தங்கும் இடமும் இனியேதான் ஏற்பாடு செய்ய வேண்டும் போல! " என்று யோசனையோடு கேட்டாள் பெரியவள். "ரைட். நீ இங்கே கண்ட இடத்தில் தங்க வேண்டாம். நம் அலுவலகத்திலேயே பணிபுரியும் மீனாட்சி என்று ஒரு பெண் இது போன்ற விடுதி ஒன்றில்தான் தங்கி இருக்கிறாள். அவளிடம் கேட்டு, முடிந்தால் நீயும் அங்கேயே தங்கலாம். இனி, இங்கே நீ செய்ய வேண்டிய வேலைகள் பற்றித் தெரிந்து கொள். . .."

அப்படியானால், சுமனசிக்கு வேலை கிடைத்துவிட்டது.

ஊதியம் எவ்வளவு என்று மேடம் சொல்லவில்லை. ஆனால் ஒரேயடியாகக் குறைவாக இருக்காது என்பது அவளுக்கு நிச்சயம். அப்படிப்பட்ட இடத்தில் வேலைக்காக அந்த உதயராஜன் கூட்டி வந்திருக்க மாட்டான்.

என்ன பைத்தியக்காரத்தனம்? அவனைப் பற்றி எதுவுமே தெரியாத போது இதென்ன அசட்டு நம்பிக்கை?

ஆனால், அங்கே பணி புரியும் மற்றவர்கள் முகத்திலும் குறை தெரியவில்லை. திருப்தியாகவே தோன்றினார்கள்.

கடுமையாக வேலை செய்து இந்த வேலையை உறுதிப்படுத்திக் கொண்டால், சீக்கிரமே அக்காவைக் கூட இங்கே கூட்டி வந்துவிடலாம்!

“சொல்லுங்கள் மேடம்!” என்றாள் அவள் சந்தோஷமாக.

“என் பெயர் தெரியுமா உனக்கு?” என்று முதலில் வினவினாள் பெரியவள்.

தொண்டையில் காய்ந்தாற் போல உணர்ந்ததை ஒருவாறு சமாளித்து, “தெதெரியாது மேடம்.” என்றாள் மற்றவள்.

“நான் யார், என்ன என்று எதுவுமே தெரியாது?”

“தெரியாது மேடம். இங்கே நான் செய்யக் கூடிய வேலை ஒன்று இருப்பது மட்டும்தான் . .தெரிதெரியும்.” என்றாள் அவள்.

“ம்ம்ம் . .. போகட்டும். இப்போது சொல்வதைப் குறிப்பெடுத்து வைத்துக்கொள்

“இந்த நிறுவனம், பல தொண்டு நிறுவனங்களோடு தொடர்பு உடையது. அவர்களிடம் இருந்து வரும் பணம் மற்றும் பொருட்களுக்குத் துல்லியமாகக் கணக்கு வைக்க வேண்டும். சில பாங்க் டெப்பாசிட், பங்குச் சந்தை மூலமாக வரும் என் தனி வருமானத்தை எப்படி என்ன செய்வது என்பது பற்றி நான் சொல்வது போலச் செய்ய வேண்டும். எல்லாமே ஆடிட்டரிடம் கலந்து அவ்வப்போது சொல்வேன். இதுவரை புரிந்ததா?”

“ஆமாம் மேடம். வந்து மேடம், ஒரு சின்ன வேண்டுகோள். நான் போய் என் சாமான்களை எடுத்துக்கொண்டு வந்துவிடட்டுமா? ஒரு பெரிய தோள்பை மட்டும்தான் மேடம். அதை எடுத்துக்கொண்டு, இங்கே கூட்டி வந்ததற்கு நன்றியும் சொல்லிவிட்டு வந்துவிடுகிறேனே, ப்ளீஸ்?” என்று, முதலாளியிடம் அனுமதி கேட்டாள் சுமனசி.

அவளைப் பாராதது போலப் பார்த்து, “யாரிடம் நன்றி தெரிவிக்கப் போகிறாய்?” என்று இயல்பான குரலில் பெரியவள் வினவினாள்.

மற்றவளின் தந்திரம் சட்டெனப் புரிந்து, “இந்த வேலை பற்றி என்னிடம் சொன்னவர்களிடம்!” என்று முடித்தவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

சிரிக்கும்போதே, முதலாளி அம்மா கோபப்படுவாளோ என்று அவளுக்கு உள்ளூர அச்சம்தான்.

நல்லவேளையாக அந்தம்மா கோபப்படவில்லை. சிரித்த முகமாகவே இருந்து, “கெட்டிக்காரிதான்.” என்றுரைத்து, அவளை அனுப்பி வைத்தாள்.

பரவாயில்லை! இந்த இடத்து வேலை சுவாரசியமாகவே இருக்கும் போல!

ஜோக்கைப் புரிந்துகொண்டு சிரிக்க வேறு செய்கிறார்களே!

முகத்தில் சந்தோஷத்துடன், பார்க்கிங் பகுதியில் இருந்த உதயனிடம் போய் நின்றாள்.

மொபைலில் ஏதோ பேசிக் கொண்டிருந்த உதயராஜன் அவளைச் சற்று வியந்து நோக்கினான்.

செல்லை அணைத்துவிட்டு, “பரவாயில்லையே! முகத்தில் ஆயிரம் வாட் பல்ப் எரிகிறதே! போன காரியம் பழம் என்று தெரிகிறது. வேலை கிடைத்துவிட்டது போல?!” என்று விசாரித்தான்.

“ஆஆமாம் சார். வேலை கிடைத்தது மட்டுமல்ல. இங்கே பணிபுரியும் மீனாட்சி என்கிற பெண் ஒரு மகளிர் விடுதியில் தங்கி இருக்கிறாளாம். அதே விடுதியில் தங்கிக் கொள்ளவும் மேடம் சொன்னார்கள். ஆக, தங்கும் இடத்துப் பிரச்சினையும் தீர்ந்தது!” என்றாள் அவள் குதூகலத்துடன்.

“ஆனால் எளிதாக வேலை கொடுத்துவிட்ட மாதிரியில்லை?”

“என் தகுதிச் சான்றிதழ்களைப் பார்த்ததும், இது போலத் தகுதிகள் உள்ளவளையே தேடியதாகச் சொன்னார்கள். ஆனால், முதலில் இங்கே வேலை காலி இருப்பது எப்படித் தெரியும் என்று ஒரு மாதிரிக் குரலில் அவர்கள் கேட்டபோது, வேலை கிடைக்காது என்றே எண்ணிவிட்டேன். ஆனால் அப்புறம் சரியாகிவிட்டது. “ என்றாள் சுமனசி.

“அந்தக் கார்டைக் காட்டினாயா?”

“இல்லை. ஆனால், உதவியாக விவரம் சொன்னவரை பிடித்து ஏன் சொன்னாய் என்று கண்டித்தால் எனக்கு வருத்தமாக இருக்குமே என்றேனா, சரிதான் என்று அத்தோடு விட்டுவிட்டார்கள். . .என்ன சார்?”

ஏதோ சொல்ல வாயெடுத்தவன், அதைக் கண்டுகொண்டு கேட்டவளிடம் அது பற்றிப் பதில் சொல்லவில்லை.

ஒன்றுமில்லை என்பது போலத் தலையசைத்துவிட்டுக் கார்க் கதவைத் திறந்து அவளது கிட்பாகை எடுத்துக் கொடுத்தான்.

கொடுக்கும்போதே, “அப்படியானால், நீ விரும்பியது போல வேலை, தங்குமிடம் எல்லாம் கிடைத்துவிட்டது. ரைட்? இனி நான் கிளம்புகிறேன். குட்பை.” என்று மறுபடி காரில் ஏறினான் உதயராஜன்.

ஐயோ கிளம்புகிறான்!

ஓடிப் போய்க் கார்க் கண்ணாடி அருகே குனிந்து, “ரொம்பத் தாங்க்ஸ் சார். எனக்கு நிறையச் செய்திருக்கிறீர்கள்!” என்றாள்

நன்றியுடன்.

“பிரச்சினை உருவானதற்கே நான்தான் காரணம் என்பதால் இந்த நன்றி தேவையே இல்லை. ஆனால் சீக்கிரம் திரும்ப வேலைக்குப் போய்விடு. பொதுவாக மேடம் ரொம்பக் கண்டிப்பானவர்கள் என்று கேள்வி.” என்று எச்சரித்தவன் அதற்கு மேல் நில்லாமல், ஒரு “பை.”யுடன் காரை ஓட்டிச் சென்றுவிட்டான்.

அவன் சென்ற திசையைப் பார்த்துக்கொண்டு நின்றவளுக்கு அவனது எச்சரிக்கை நினைவு வரவே, சட்டெனத் திரும்பி இரண்டாவது மாடிக்கு விரைந்தாள்.

சென்னை வாசம் சுமனசிக்கு விரைவிலேயே பழகிப் போயிற்று.

உடன் பணி புரியும் மீனாட்சி தங்கியிருந்த இடமும் அவளுக்கு வசதியாக இருந்தது. பஸ்சோ, ஷேர் ஆட்டோவோ பிடித்து வர வேண்டிய தூரம் என்றாலும், காற்றோட்டமான அறைகளுடன், அங்கே தயாரித்துக் கொடுத்த உணவும் தரமானதாக இருந்தது.

“தயா” பக்கத்திலும் மகளிர் விடுதிகள் சில இருந்தபோதும், “அவை நகரின் முக்கியமான இடத்தில் இருந்ததால் அறை வாடகையே அதிகம். உணவும் அதற்கேற்ப கொஞ்சம் விலை அதிகமாக இருக்கும். எல்லாம் கணக்குப் பார்த்தால், பாதிக்குப் பாதி அங்கே அதிகச் செலவாகும். அத்தோடு, அங்கே பழகும் விதமும் . . எனக்கு ஒத்து வரவில்லைப்பா.” என்றாள் அந்த மீனாட்சி.

அலுவலகத்துக்குச் சென்று வரும் சமயங்களில், அந்த விடுதிகளில் இருந்து வெளியே, உள்ளே செல்லும் சில பெண்களைப் பார்க்க நேர்ந்தபோது, மீனாட்சி சொன்னது என்ன என்று சுமனசிக்குப் புரிந்தது.

“உள்ளே மதுவுக்குக் கூட அனுமதியாம். நள்ளிரவு வரை ஆட்டம் பாட்டுக்குத் தடை கிடையாதாம். என் பெற்றோர் இங்கு வந்து தங்கி இருந்து இந்த விடுதியைத் தேர்ந்தெடுத்து இதில் தங்க ஏற்பாடு செய்துவிட்டுப் போனார்கள்.” என்றாள் அவள்.

இன்னுமொரு பிரச்சினையாக இரண்டு மாத முன் பணம் கேட்டார்கள்.

அதை முழுமையாகக் கொடுத்தால், சுமனசியின் கைச்செலவுக்குப் பணமே இராது.

யோசித்து, “தயா”வின் மேடத்திடமும், விடுதி நிர்வாகியிடமும் பேசி, ஒருமாத முன்பணத்தை உடனேயும் பதினைந்து நாட்களில் இரண்டாவது மாதப் பணத்தைக் கொடுத்து விடுவதாகவும் ஒத்துக் கொண்டாள்.

“தயா”விலும் எடுத்த எடுப்பிலேயே கடன் கேட்பது சரியல்ல என்று உணர்ந்து, பாதி மாதம் வேலை செய்த பிறகு, அந்த நாட்களுக்கு உரிய ஊதியத்தைத் தரும்படி காரணத்தைச் சொல்லிக் கேட்டுக் கொண்டாள்.

இது பழக்கமில்லை என்றாலும், உண்மை நிலை புரிந்து மேடம் தயாகரியும் இதற்குச் சம்மதிக்க, பிரச்சினை இலகுவாகத் தீர்ந்தது.

இது பற்றி சுமனசி ரொம்பவே ஆச்சரியப்பட்டாள். “சில சமயம் என்னதான் முயற்சி செய்தாலும் நாம் நினைக்கிற வேலை நடப்பதே இல்லை. இப்போது பாருங்கள் மீனாக்கா, இப்படிச் செய்து பார்க்கலாமே என்று யோசித்ததுதான். மளமளவென்று ஒரே முயற்சியில் காரியம் நடந்தே முடிந்துவிட்டது. அதிலும் மேடம் பணியில் சேர்ந்ததும் சேராததுமாகப் பாதி மாதத்திலேயே பணம் தருவதாகச் சொன்னதுதான் பெரிய அதிசயம்!”

என்றாள்.

“மேடம் எப்போதுமே இப்படித்தான். அவர்களுக்காக மனது ஒப்பவேண்டும். உண்மை என்று தெரிந்தால் கட்டாயம் செய்வார்கள். நம்பவில்லை என்றால் தலைகீழாக நின்றாலும் ஒன்றும் நடக்காது.” என்றாள் மீனாட்சி.

உதயன் சொன்னது நினைவு வர, “மேடம் ரொம்பக் கண்டிப்பானவர்கள் என் . .” என்று தொடங்கிவிட்டு, “ . .பது போல முமுதலில் பார்த்தபோது நினைத்தேன்.” என்று முடித்தாள் சுமனசி.

மற்றபடி அவ்வளவு பெரிய நடிகன் அவளிடம் இது போலப் பேசினான் என்பதே இயல்பாக யாராலும் ஏற்க முடியாதது ஆயிற்றே! அத்தோடு, இந்தச் சந்திப்பு பற்றிய விவரம் வெளியே கசிவது அவனுக்குப் பிடிக்காது என்று அவள் உள்ளூர உணர்ந்திருந்தாள்.

அவளது பேச்சின் தொடர்ச்சியாக, “ம்ம். பார்த்தால் கொஞ்சம் அப்படியும் தோன்றும்தான். ஆனால், என் தம்பிக்குத் தண்டுவடத்தில் ஓர் அறுவை சிகிச்சைக்காகப் பணத்துக்குத் “தயா” மூலம் ஏற்பாடு செய்தார்கள். பெரிய சிகிச்சை. கடைசியாக ஒன்றரை லட்சம் ரூபாய் குறைந்தபோது அந்தத் தொகை முழுதையும் கொடுத்து, அங்கே அவனோடு  தங்குகிற, இன்னும் மற்றச் செலவுகளுக்கு என்று தனியாகவும் பணம் கொடுத்தார்கள். என் அம்மா மேடம் காலலேயே விழுந்துவிட்டார்கள், தெரியுமா?” என்று அப்போதும் கண்ணில் கசிந்த நீரைத் துடைத்துக் கொண்டாள் மீனாட்சி.

ஒரு நல்ல இடத்துக்குத்தான் உதயராஜ் அவளைக் கூட்டி வந்திருக்கிறான்! அவனுக்கு நிறைய்ய நன்றி செலுத்த வேண்டும் போல!

ஆனால் அவனை நேரில் பார்த்தால் அல்லவா அது முடியும்! பார்க்க வேண்டும். நின்று பேச வேண்டும்!

நடக்கிற காரியமா அது?

தன்னை மீறிப் பெருமூச்சு வந்தது சுமனசிக்கு.

“தயா ஃபவுண்டேஷன்” சூழலும் விரைவிலேயே சுமனசிக்குப் பழகிப் போயிற்று.

ஒரு பெரிய கடையில் தனி ஆளாகக் கம்ப்யூட்டரில் பில்லிங், வரவு செலவுக் கணக்குகள் எல்லாம் பார்த்ததின் பலனாக இருக்கலாம்., தயாகரி மேடம் சொன்ன வேலைகளை எளிதாகவே சுமனசியால் செய்து முடிக்க முடிந்தது.

தயாகரி மேடம் பாராட்டும் விதமாகவே.

பாராட்டுவதில் அந்த அம்மாள் கஞ்சத்தனம் செய்யவில்லை.

ஆனால் பாராட்டும்போதே, “தப்பு செய்தால் திட்டவும் செய்வேன். அதையும் இயல்பாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.” என்றும் ஒரு வார்த்தை எச்சரிக்கை செய்வதுண்டு.

ஒரு பாராட்டில் மிதப்பு வந்து விடாமல் கவனத்தோடு வேலை செய்ய வைப்பதற்காக என்று அவள் எண்ணிக் கொள்வாள்.

சற்றும் எதிர்பாராத அளவு நல்ல விதமான வாழ்வே!

இரண்டே இரண்டு குறைகள். ஒன்று அக்கா சுந்தரியிடம் எதையும் பகிர்ந்து கொள்ள முடியாதது. எந்த விதமாக அவளோடு தொடர்பு கொண்டாலும், அது அவளுக்குப் பெரும் துன்பமாகவே முடியும்.

அடுத்தது, அந்தப் பிரபல நடிகனிடம் நன்றி தெரிவிக்க முடியாதது! ஏதாவது படப்பிடிப்பு நிலையங்களில் போய் அவனைப் பார்க்கலாம். ஆனால் தனியே பார்த்து நன்றி தெரிவிப்பது, சர்வ நிச்சயமாக நடவாத காரியம்.

அதனால் இரண்டு உறுத்தல்களையும் அவள் வாய் திறவாது சகித்துதான் ஆக வேண்டும். காலம் கனிந்தால் அக்காவுக்காவது உதவி செய்யக் கூடும்.

ஆனால் மற்றது எப்போதும் எட்டாக் கனிதான்!

ஞாபகமாக மந்தாகினியின் ஆட்டோகிராஃப் புக்கைத் திருச்சியில் அவள் தந்த முகவரிக்கு அனுப்பி வைத்தாள். சென்னையில் நல்ல வேலை கிடைத்திருப்பதாக ஒரு குறிப்புடன்.

பெரிதான மாற்றங்கள் எதுவும் இல்லாமல் மூன்று மாதங்கள் இப்படியே கடந்து போயின.

மீனாட்சியின் துணையோடு சுற்று வட்டாரத்தைப் பழக்கப்படுத்திக் கொண்டாள்.

எதிர்பார்த்தது போலவே, பணி ஊதியம் தாராளமானதாகவே இருந்தது. அதில் கணிசமாகச் சேமித்ததோடு, சென்னைச் சூழலுக்கு ஏற்ற வகையில் சில ஆடைகள், தேவை என்று கருதிய பொருட்களும் வாங்கினாள்.

அவளது பேச்சு பாவனை எல்லாவற்றிலுமே பணியிடத்துக்குப் பொருத்தமாகச் சில குறைப்பட முடியாத மாற்றங்கள் தானாக நேர்ந்தன.

மீனாட்சி அது பற்றிப் பேசியபோது சுமனசி அதைப் பெரிதாக நினைக்கவில்லை.

ஆனால், தயாகரியும் அதையே, அவளது மாற்றம் குறித்துப் பாராட்டுதலாகக் கூறவும் அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் அவளே அது பற்றி யோசித்துப் பார்த்தபோது, தயாகரி மேடத்தையே தான் பின்பற்றுவதை சுமனசி உணர்ந்தாள்.

தயாகரியிடம் அவளுக்கு மதிப்பும் மரியாதையும் நிறையவே இருந்தன. அவளையே மனதில் லட்சியப் பெண்ணாகக் கொண்டு, நடை உடை பாவனைகளில் பெரியவளைக் காப்பி . . காப்பியடிப்பது என்றால் அவ்வளவு சரியாக இராது.

ஆனால் பல விஷயங்களில், தனக்கேற்ற வகையில் தயாகரியை அவள் பின்பற்றியிருப்பது உண்மை.

அமைதியான நடை, நிமிர்ந்த தோற்றம், நேரான பார்வை, நிதானமான பேச்சு, கண்ணை உறுத்தாத உடை . .இது போலப் பலதிலும்!

மதிக்கத்தக்க விதமாகவே மாறியிருக்கிறாள்! ஆச்சரியம்!

இன்னும் தயாகரி மேடத்தின் வயதை அடையும்போது, அவர்களைப் போலவே மற்றவர்கள் மதிக்கும் நிலையையும் அடைய வேண்டும்! உயரவும் வேண்டும். அந்த நிலையிலும் அவர்களைப் பின்பற்றிப் பிறருக்கு உதவவும் வேண்டும்!

அங்கே அவள் செய்யும் பணியினால் தயாகரியின் வருமானம் பற்றி ஓரளவு அவளுக்குத் தெரிய வந்திருந்தது. அந்த காம்ப்ளக்ஸ் முழுதுமே கூடத் தயாகரிக்குச் சொந்தமானதுதான். அதிலிருந்து வாடகையாக வந்த பணம், வரி போகவும் மனதை மருட்டும் அளவு பெரிய தொகையே.

ஆனால் அதிலும் பெருமளவு தயாகரி செய்து வந்த தரும

காரியங்களுக்குக் கொடுக்கப்படுவதும், அவளது அதே பணியின் மூலம் அவளுக்குத் தெரியவும், பெரியவளின் மீது சுமனசியின் மதிப்பு பன்மடங்காகியது.

செல்வ நிலையில் அந்த அளவு உயர்வது கடினமாக இருக்கலாம். ஆனால் ஓரளவே உயர்ந்தாலும், உதவும் மனம் இருந்தால் அது போதுமே!

பிறரிடம் உதவி கேட்டு யாசிக்கும் நிலை மாறி, பிறருக்கு உதவுகிற நிலையை அவள் அடைவது எவ்வளவு பெரிது! இந்த எண்ணம் சிலபல நாட்கள் அவளது புன்னகையை வாடாமல் காத்தது!

இந்த நிலையில் ஓர் உண்மை தெரிய வந்து, அவளை சந்தேகத்தில் ஆழ்த்தியது.

# அத்தியாயம் - 6

எப்போதும் போலவே அலுவலகத்துக்குள் சென்ற சுமனசிக்கு, அன்று ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று.

அலுவலகம் அலங்கரிக்கப் பட்டிருந்தது! முக்கியமான விஷயம் உள்ளறையில் அழகாக ஒளிர்ந்த "பிறந்தநாள் வாழ்த்துக்கள்"!

"யாருக்கு . ." என்று யோசித்த சுமனசி உடனே ஊகித்து, "நம் மேடத்துக்கா பிறந்தநாள்? என்னிடம் சொல்லியிருக்கலாமே மீனாக்கா? ஏதாவது பரிசு வாங்கி வந்திருக்கலாமே!" என்றாள் சிறு வருத்தத்துடன்.

"அது கூடாது என்றுதான் சொல்லவில்லை. மேடம் உத்திரவு. அப்புறம், ஒருவருக்கு ஒருவர் உயர்வாக யார் வாங்குவது என்று ஓர் ஆரோக்கியமற்ற போட்டி உருவாகி, நமக்குள் உள்ள ஒற்றுமையைக் குலைத்துவிடும் என்பது அவர்களது கருத்து. அவர்களே சொன்னதுதான். தேவையானதை அவர்களுடைய குடும்பத்தாரே பார்த்துக் கொள்வார்கள். இங்கே மேலே ஒரு ஹால் இருக்கிறதல்லவா? அங்கே பதினோரு மணிக்கு ஒரு சின்னக் கூட்டம் நடக்கும். அப்போது, இங்கே பணி செய்யும் நாம் பத்துப் பேரும் அங்கே இருக்க வேண்டும். மேடம் சின்னதாக ஏதாவது கூறுவார்கள். டீயோடு சமோசா, கட்லட் , ஓர் இனிப்பு இன்னும் இது போல வரும். நமக்கு ஒரு பரிசும் இருக்கும். அப்படிக் கொஞ்ச நேரம் நம்மோடு கழித்துவிட்டு, அவர்கள் நடத்தும் ஆதரவற்றோர் இல்லத்துக்குப் போய் அவர்களோடு உணவருந்துவார்கள்.

"முன்பெல்லாம் சும்மா சாதாரணமாக, இங்கேயே நடத்துவார்கள். யாராவது வருகிற போகிற . . கூரியர், தபால்காரர் என்று யார் வந்தாலும் அவர்களுக்கும் சேர்த்து உபசாரம் நடக்கும். இப்போது பெரிதாகக் கூட்டம் சேர்ந்து விடக் கூடும் என்று மேலே நமக்குள் மட்டுமாக நடத்திவிட்டு, ஓசையற்றுக் கிளம்பிப் போய்விடுவார்கள்." என்றாள் மீனாட்சி.

இன்னும் எல்லாம் வெளிவரவில்லை என்று மீனாட்சியின் முறுவல் காட்ட, சுமனசி அது பற்றிக் கேட்டாள். "ஏன் கூட்டம் சேரக் கூடும்?" என்று விசாரித்தாள்.

இப்போது மீனாட்சி நன்றாகவே சிரித்தாள்.

"மேடம் சொல்வது போல, வேலையில் கெட்டிக்காரி என்றாலும் நீ அப்பாவிப் பெண்தான், சுமனசி. தூண்டித் துருவுவது, நோண்டுவது எல்லாம் உன் அகராதியிலேயே இல்லை." என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

தூண்டித் துருவுவதும் நோண்டுவதுமா? போட்டதை உண்டு கொடுத்ததை அணிந்து, கண்ணில் படக் கூட அஞ்சி ஒதுங்கிக் கிடப்பவளுக்கு அதெல்லாம் எப்படி வரும்?

ஆனால், கூட்டம் சேர்ந்துவிடுமா? அப்படி யார் அழைப்பில்லாமல் கூட வருவார்கள்?

ஏதோ தோன்ற, சிறு படபடப்புடன், “மேடத்தின் குடும்பத்தார் என்றால் யார்யார்?” என்று கேட்டாள் சுமனசி.

வாய் விட்டுச் சிரித்துவிட்டு, “உன் அகராதியில் இல்லாத வார்த்தைகளை எல்லாம் சேர்க்கப் பார்க்கிறாயே! கொஞ்சம் பொறுத்திரு , உனக்கே தெரிய வரும்.” என்றுரைத்துவிட்டுத் தன் பணியைத் தொடங்கப் போனாள் மீனாட்சி.

அவளைத் தொடர்ந்து, தன் கம்ப்யூட்டர் முன்னே அமர்ந்த சுமனசியின் மனம் குழம்பித் தவித்தது.

முதல் நாள் வேலை பற்றி யார் சொன்னார்கள் என்று தயாகரி மேடம் கேட்டதற்கு ஏதோ உள்ளர்த்தம் இருந்தது போல இப்போது தோன்றியது. உதயராஜனின் கார் இங்கே கார்ப் பார்க்கிலும் ஒதுக்குப் புறமாகத் தனியிடத்தில் நின்றது. யாரோ ஒருவனுக்கு இந்தச் சலுகை எப்படிக் கொடுப்பார்கள்?

இதையெல்லாம் அவள் அப்போதே யோசித்திருக்க வேண்டுமோ?

என்னத்தை யோசிப்பது? பிழைப்பதற்கு வழி ஒன்று கிடைக்க வேண்டுமே., அதை எப்படிப் பெறுவது? எப்படித் தக்க வைத்துக் கொள்வது என்று முழுக் கவனத்தையும் அதில் செலுத்த வேண்டிய நிலையில் இருந்துகொண்டு, இந்த மாதிரி விஷயங்களை யாரால் யோசிக்க முடியும்?

தன்னைத்தானே நியாயப்படுத்திக்கொள்ள அவளால் முடிந்தபோதும், அந்த அளவில் திருப்தி அடையாமல் அவளது மனம் வேறு பக்கம் பாய்ந்தது.

ஒருவேளை . .என்று யோசிக்கத் தொடங்கிவிட்டுப் பிடிவாதமாக அதை ஒதுக்கி மனதை வேலையில் ஈடுபடச் செய்தாள்.

தயாகரி மேடம் நடத்தும் இல்லக் குழந்தைகளுக்கான தடுப்பு மருந்துகளின் பட்டியல் வந்திருந்தது. உரிய இடத்தில் ஆர்டர் கொடுத்து, செலவுக் கணக்கு போட்டு வைத்தாள்.

அடுத்து ஒரு முதியோர் இல்லத்திலிருந்து படுக்கை வசதி கேட்டு ஒரு வேண்டுகோள் வந்திருந்தது.

அது உண்மையானதுதானா என்று அந்தப் பகுதியிலிருந்து

“தயா ஃபவுண்டேஷ”னுக்குச் சுத்திகரிப்புப் பொருட்கள் சப்ளை செய்யும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்துக் குறிப்பு எழுதி வைத்தாள்.

இது போன்ற வேலைகளைச் செய்யும்போது, சுமனசியின் மனம் தானாக உற்சாகம் கொள்ளத் தொடங்கிவிடும்.

குழப்பம் சற்றுக் குறைந்தவளாய், இன்னும் வழக்கமான பணிகளைத் தொடங்குமுன் தயாகரியின் அன்றைய நிகழ்ச்சி நிரலைப் பார்த்தாள்.

வெளி நிகழ்ச்சி எதுவும் இல்லாததோடு, நாள் முழுதும் குடும்பத்தோடு என்றிருந்தது.

குடும்பத்தவர் யார் யார்?

தயாகரியுடைய கணவர் ஓர் ஆர்கானிக் பண்ணையைப் பராமரித்துப் பயிர்த் தொழில் செய்வதோடு, அந்தப் பகுதியில் ஒரு முதியோர் இல்லத்தைக் கவனிப்பதிலும் உதவி செய்து கொண்டிருந்தார்.

தயாகரியின் வாரக் கடைசிகள் எல்லாம் அவர்களது அந்தப் பண்ணையில்தான்.

ஆனால் மற்றபடி யார் யார் என்று அவளுக்கு யோசிக்கத் தோன்றியதே இல்லை. இப்போது அதைத் தவிர எதையுமே யோசிக்க முடியவில்லை.

அங்கே யார் யார்? ஒருவேளை . . . மறுபடியும் சஞ்சலம் தொடங்கியது.

நல்லவேளையாக சுமனசி அதிகம் குழம்புமுன் மற்ற எல்லோரும் விருந்து ஹாலுக்குச் செல்ல ஆயத்தமாகி வந்துவிட்டார்கள்.

வெகு இயல்பாகத் தாய் தந்தையுடன் நின்று அவர்கள் அனைவரையும் வரவேற்றவன் உதயராஜனேதான்!

எப்போதோ அவள் இதைக் கண்டு கொண்டிருக்க வேண்டும்.

உதயன் அவளை இங்கே கொண்டுவந்து விட்டபோது இல்லாவிட்டாலும், மேடத்தின் “வேலை காலியிருப்பது எப்படித் தெரியும்” என்ற முதல் கேள்வியிலேயே புரிந்திருக்க வேண்டும்.

இப்படி ஓர் ஆள் தேவை என்று அவர்கள் வீட்டில் மட்டுமே பேசியிருக்கிறார்கள். அதனால்தான் அந்தக் கேள்விக்கு மேல் மேடமும் அவளிடம் அதிகமாக எதுவும் கேட்கவில்லை!

ஆனால் அவளுக்குச் சந்தேகமே வரவில்லையே! உள்ளூர அவளுக்கு அதுதான் மறுகலாக இருந்தது. இதில் கெட்டிக்காரி என்று

பெத்த பெயர் வேறு!

எப்பேர்ப்பட்ட பெரிய நடிகன்! எவ்வளவு நல்லவன் என்று மட்டுமே எண்ணினாளே.

ஆனால் இப்போது மண்டைக்குள் சந்தேகம் குடைந்தெடுத்தது.

அவளுக்கு அவன் ஏன் உதவி செய்ய வேண்டும்?

அவள் சந்தேகப்பட்டபடி, காரணம் அதுவேதானா?

ஆனால் இதை எப்படி அறிவது? முதலில் அவனிடம் தனிமையில் பேசினால்தான் கேட்க முடியும். அதுவே இயலாது. அதுவும் இந்தக் கேள்வி . .

தயாகரியின் சிற்றுரை முடிந்து நீளமாகப் போடப்பட்டிருந்த மேஜையில் இரு புறமுமாக எல்லோரும் உணவுக்காக அமர்கையில், “சுமனசி . .” என்று உதயன் அழைத்தான்.

அவளையா அழைத்தான்? அத்தனை பேர் நடுவில்!

திகைப்புடன் அவள் நோக்கும்போதே, “உணவு பரிமாறி முடிப்பதற்குள் எனக்கு ஓர் உதவி செய்கிறாயா? உள்ளே பரிசுப் பொருட்களை மொத்தமாக வைத்துவிட்டார்கள். பிரித்து ட்ரேயில் அடுக்கி வைக்க வேண்டும். கொஞ்சம் உதவி செய்தாயானால் . . மீனாட்சி, சுமனசி தட்டில் எல்லாம் வைக்கிறார்களா என்று சற்றுக் கவனித்துக் கொள்கிறாயா?” என்று அவள் பதில் கூறுமுன்பாகவே அவள் ஒத்துக் கொண்டது போலத் தொடர்பாக இன்னொருத்திக்கும் வேலை சொல்லிவிட்டான்.

ஆனால் பிரபல நட்சத்திரம்! முதலாளியுடைய மகன் வேறு! யாரால் மறுக்க முடியும்?

சுமனசி பேசாமல் எழுந்து, ஹாலை அடுத்திருந்த சிறு அறைக்குள் உதயனைத் தொடர்ந்து சென்றாள்.

பெரிய பாக்கெட்டாக இருந்ததை அவன் பிரித்ததும் அங்கிருந்த பெரிய மரத் தட்டுகளில் வரிசையாக அவள் அடுக்கலானாள்.

மெய்யாகவே வேலைக்காகத்தான் அழைத்திருக்கிறான் என்று அவள் நினைக்கும்போதே, கூடச் சேர்ந்து அடுக்கியவாறு சற்றுத் தணிந்த குரலில் அவன் கேட்டான். “என்னிடம் என்ன கேட்க வேண்டும்?”

தனியாகப் பேசும் வாய்ப்பையும் கொடுத்து, கேட்கவும் செய்கிறான். ஆனால் அவளுக்குத்தான் நினைத்ததைக் கேட்க மனம் தயங்கியது. கூசியது என்றும் கூறலாம்.

இது என் சொந்த விஷயம். அதைக் கேட்க நீ யார் என்று இவன்

கேட்டால்,அதற்கு அவள்  என்ன பதில் சொல்ல முடியும்? சொல்லப் போனால் உண்மையும் அதுதானே? அவனிடம் எந்தக் கேள்வி கேட்கவும், தகுதியோ, உரிமையோ அவளுக்கு என்ன இருக்கிறது?

எண்ணியதற்கு ஏற்றாற்போல, “ஒஒன்றும் இல்லை. . .” என்று அவளது வாயும் குழறியது.

ஆனால் உதயன் விடவில்லை. “பரவாயில்லை. நீ என்ன நினைத்தாயோ, சும்மாக் கேட்டுவிடு. ஒன்றும் நினைக்கவே இல்லை என்று மட்டும் சொல்லாதே. உன் மொத்த உருவமும் ஏதோ கேட்கத் துடித்துக் கொண்டிருந்தது எனக்கு நன்றாகவே புரிந்தது. . சும்மாச் .சொல்லு சுமனசி. இதுவரை என்னை நீ என்னென்னவோ சொல்லிவிட்டாய். அதை விட மோசமாக என்ன சொல்லிவிடப் போகிறாய்? தைரியமாகச் சொல்லு.”  என்று வற்புறுத்திக் கேட்டான்.

“அது . . “ என்று அப்போதும் கேட்கத் தயங்கினாள் அவள்.

“பரவாயில்லை சொல்லு. நீ சொல்லாவிட்டால் ரொம்ம்பவும் மோசமாக எதுவும் நினைத்தாயோ என்று என் மனதில் உறுத்திக் கொண்டே இருக்கும்.”

ஓ! இவன் மனதிலும் உறுத்துமா?

“அ . . அப்படியானால் . . . ஆனால் நீங்கள் வற்புறுத்திக் கேட்டதால்தான் சொல்லுகிறேன் என்பது உங்களுக்கு எப்போதும் நினைவிருக்கட்டும். என்ன?”

“கட்டாயமாய். உன் மனதில் இருப்பது, எவ்வளவு மோசமான கருத்தாக இருந்தாலும், அதை மறைத்துப் பூசி மெழுகாமல் அப்படியே உன்னைச் சொல்ல வைத்த பொறுப்பு என்னதுதான். என்னுடையது மட்டுமேதான். முழுதாக ஒத்துக் கொள்ளுகிறேன். காட் ப்ராமிஸ்! இப்போதேனும் சொல்கிறாயா? “

பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு, “அந்த அந்த ரதிமாலா பற்றி ஏதேனும் கிசுகிசு கசிந்தால், மேடத்திடம் நான் உங்களுக்குச் சாதகமாகப் பேசுவேன் என்றுதான் அன்றிரவு அவளைப் போகச் சென்னனீர்களோ என்று . . .” என்று அவள் சொல்லி முடிக்குமுன் “வா . .ட்?! “ என்று பிரமித்தான் அவன்.

வியப்புடன் நோக்கி, “எதற்கும் எதற்குமோ முடிச்சுப் போட்டதாகச் சொல்வார்கள். எப்படி முடியும் என்று யோசித்திருக்கிறேன்.  இப்படித்தான் என்று இன்றுதான் புரிகிறது. ஆனாலும் பெண்ணே, உனக்கு மனிதர்களிடம் ரொம் . . ப்ப ரொம்ப நம்பிக்கைம்மா! சற்று ஜாக்கிரதையாகவே இரு. இல்லாவிட்டால், ஏதாவது சின்னப் பாப்பா கூட உன்னை எளிதாக ஏமாற்றிவிடப் போகிறது! “ என்று அவன் கண்ணை உருட்டிச் சொல்லி

முடித்தபோது, தன்னை மீறிக் குபுக்கென்று அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

சிரிப்புச் சத்தம் வெளியே கேட்டு விடாமல் சட்டென வாயைப் பொத்தி சமாளித்துவிட்டு, மடமடவென்று மற்ற பாக்கெட்டுகளை அடுக்கலானாள்.

குரலும் முகமும் வசத்துக்கு வந்ததும், "சார் நீங்கள் நடிப்புத் தொழிலில் பேர் எடுத்தது எப்படி என்று இப்போது புரிகிறது." என்றாள்.

"ஆனால் நடிப்பு எல்லாம் வெளியே மட்டும்தான் சுமனசி. உள்ளே இருப்பது உண்மை மட்டுமே. நினைவில் வை!" என்று முடித்தான் அவன்.

"வா நாமும் உணவருந்தப் போகலாம்."

ஹாலுக்குள் செல்லும்போது சில பார்வைகள் அவளைக் கூர்ந்தனவோ என்ற சந்தேகம் அவளுக்கு. முக்கியமாகத் தயாகரியின் பார்வை.

ஆனால் கவனியாதது போல முடிந்தவரை இயல்பாக நடந்து இடத்தில் அமர்ந்தாள் சுமனசி.

ஆனால் அவன் வேடிக்கையாகச் சொன்ன விதத்திலேயே அவளது ஐயம் எப்படி மறைந்தது?

ஆனாலும் எப்படிச் சொன்னான்! அவள் அநியாயத்துக்கும் சந்தேகப் பேர்வழியாம்! அதை நேர் எதிராக மாற்றிப் பேசிக் கிண்டலடிக்கிறான்.

ஆனால் அவளும் சந்தேகப் பட்டாள்தானே?

கண்ணாலேயே . . இல்லையில்லை. காதால்தான். அவன் அந்த ரதிமாலாவின் கேவலமான விருப்பத்தை மறுத்துப் பேசி அனுப்பியதை, ஒரு வார்த்தை விடாமல் காதால் கேட்ட பிறகும் . .அதுவும் அந்தப் பெண் சூளுரைத்தது போலப் பேசியதைக் கேட்டாளே, அப்புறமும் அவள் சந்தேகப்பட்டாள் என்றால், அவனுக்கும்தான் எப்படி இருக்கும்?

கோபப் பட்டுக் கத்தாமல், ஏதோ கிண்டலாகவேனும் பதில் சொன்னானே! அவன் மட்டும் ஆத்திரப்பட்டுத் திட்டியிருந்தால் மனதுக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்திருக்கும்.

ரைட். இப்போது எல்லாம் சுமுகமாக முடிந்தது. அவளது சந்தேகமும் அடியோடு தீர்ந்தது. இனி நிம்மதியாக இருக்கலாம்!

இப்படித்தான் சுமனசி எண்ணினாள். ஆனால், அவளது நிம்மதியைக் குலைப்பதே குறிக்கோளாக அந்த ரதிமாலா அங்கேயும்

வந்து சேர்ந்தாள்.

சொல்வார்களே, “யானை வரும் பின்னே. மணியோசை வரும் முன்னே” என்று. அதுபோல, உயர் ரகப் பழங்கள், பாதாம் அக்ரூட் போலப் பருப்பு வகைகள், சாக்கலேட்டுகள் எல்லாம் ரகம் வாரியாக அழகான பெரிய தட்டுகளில் அடுக்கப்பட்டு, கோலமிட்ட கண்ணாடிப் பேப்பரால் மூடப்பட்டு, அங்கே வரிசையாக அடுக்கப்பட்டன.

“என்னவோ திருமணத்துக்குச் சீர் கொண்டு வந்து அடுக்குவது போல இல்லை?” என்று மெயில் பார்க்கும் சரளா கூறவும் எல்லோருமே வியப்பினால் விழிகள் விரிய “ஆமாம், ஆமாம்!” என்றனர்.

அப்படியேதானோ என்று படபடத்தது சுமனசியின் உள்ளம்.

ஆனால் மேடம் அதுபோல ஒன்றுமே சொல்லவில்லையே!

ஆனால் குடும்ப விஷயத்தை அலுவலகத்தில் மேடம் பேசுவதும் கிடையாது. யாரிடமுமே! மகனின் தொழில் பற்றியும்.

எல்லோரும் விழித்துக்கொண்டு நின்றபோது, ஏதோ மனதைக் கவரும் வாசனை மணம் பரப்ப இடுப்பை ஒயிலாக அசைத்து நடந்து ரதிமாலா அலுவலகத்துக்குள்ளே வந்து நின்றாள்.

ஹோ ஹோ என்று வெளியே பெரும் சத்தம்.

திகைப்புடன் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவும், “எல்லாம் என் விசிறிகள்தான். இடம் போதாதே என்று எல்லோரையும் வெளியே விட்டுவிட்டு வந்தேன். அவர்களை செக்யூரிடி பார்த்துக் கொள்வார்கள். ஆமாம், என்ன இது? எல்லோரும் பட்டிக்காட்டான் மிட்டாய்க்கடையை என்பார்களே, அது போல என்னைப் பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? இதையெல்லாம் உள்ளே எடுத்து வைப்பதில்லையா? உட்காரச் சொல்லி உபசரிக்கக் காணோம்! “ என்று புகார்க் குரலில் நீளப் பேசியவள், “ஏய், இங்கே வா . .” என்று சுமனசியை அழைத்ததாள்.

“எஎன்னையா கூப்பிட்டீர்கள்?” என்று கம்ப்யூட்ட ரை விட்டு நகராமலே கேட்டாள் அவள்.

“கல்லுப் பிள்ளையாரைப் போல அசையாமல் உட்கார்ந்து கொண்டு கேட்கிறாயே. எழுந்து வந்து என்னை தயாகரி அத்தையிடம் கூட்டிப்போ., அல்லது அத்தையை இங்கே அழைத்து வா!” என்றாள் ரதிமாலா அதிகாரமாக.

தயாகரி அத்தையாமே!

ஆனால் சுமனசிக்கு இன்னும் சில விஷயங்களும் தெரியுமே! அப்படி இருக்க . . . ஆனால், சுமனசிக்கு விவரம் தெரியும் என்பது,

இவளுக்குத் தெரியாதே!

என்ன தைரியமாக மிரட்டிப் பார்க்கிறாள்.

“ஒரு நிமிஷம்!” என்று கம்ப்யூட்டர் திரையைப் பார்த்துவிட்டு, “சாரி மிஸ். இன்று மேடத்தின் நிகழ்ச்சி நிரலில் உங்களோடு சந்திப்பு ஏதும் குறிக்கப் படவில்லை. அதனால் அவர்களிடம் உங்களைக் கூட்டிப் போக இயலாது.” என்றாள் சுமனசி அமைதியாக.

உள்ளூர சற்றுப் படபடப்புதான். ஆனால், இவள் என்ன இங்கு வந்து தன்னை அதிகாரம் செய்வது?

ரதிமாலாவிடம் யாரும் இப்படிப் பேசியது கிடையாது போலும்! சில கணங்கள் “பே . .” என்று விழித்துவிட்டாள்.

சக அலுவலர்களின் கண்களும் விரிந்தன என்றாலும், ரதிமாலாவின் கண்கள் வெளியே தெறித்து விழுந்துவிடும் போல, அவள் அப்படி விழித்தாள்.

ஆனால் வெளியுலக அனுபவம் இருந்ததால் விரைவிலேயே சமாளித்து, “ஏய் முட் . . அஅசட்டுப் பெண்ணே! நீ யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்று, உனக்குக் கொஞ்சமேனும் தெரியுமா? யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்ற அறிவே இல்லையே! உன்னைப் போய் . ..” என்று மேலே என்ன சொல்லியிருப்பாளோ?

இருப்பிடத்தை விட்டு மெல்ல எழுந்த சுமனசி குறுக்கிட்டு, “நீங்கள் யார் என்று எனக்கு நன்றாகத் தெரியும் மிஸ் ரதிமாலா. தமிழ்நாட்டில் பெரிய நடிகை. உதயராஜன் சாரோடு ஜோடி சேர்ந்து நடித்த இரண்டு படங்கள் பெரிய “ஹிட்” படங்கள். இதெல்லாம் எல்லோருக்குமே தெரிந்த விவரங்கள்தானே?” என்றாள் சாதாரணமாகவே.

“ஓ!” என்ற ரதிமாலாவின் கண்கள் இடுங்கின.

சுமனசியை நேராகப் பார்த்துவிட்டு, வருவோருக்காக அங்கே கிடந்த நாற்காலிகளுள் ஒன்றில் எழிலாக அமர்ந்தாள்.

உதட்டால் முறுவலித்து, “இங்கேயும் ஒரு நடிகர் இருப்பதால் நடிகை என்றால் பெரிதாகத் தெரியவில்லை போல! ஆனால் இன்னொரு முக்கியமான விஷயம் உனக்குத் தெரியாது போல! சீக்கிரமே நான் உன் மேடத்துடைய மருமகள் ஆகப் போகிறேன் என்று தெரிந்துகொள். உன் வருங்கால முதலாளியிடம் எப்படிப் பேச வேண்டும் என்று . . .நான்தான் உனக்குக் கற்றுக் கொடுக்க நேரும் போலத் தெரிகிறது! அதாவது, அதுவரை உன்னைத் தொடர்ந்து வேலையில் வைத்திருந்தால்!” என்று கடுமையாக குரலில் கூறி முடித்தாள்.

மருமகளா? இவளா? தாயாருக்குக் கொடுத்த வாக்கு பற்றி உதயன் அன்று கூறியது சுமனசிக்கு நினைவு வந்தது. இவளிடம்தானே சொன்னான்? அதுவும் எவ்வளவு தெளிவாகச் சொல்லி அனுப்பினான்!

ஆனால் இவள் இந்த ஆசையை விடுவதாகவே இல்லை போலத் தெரிகிறதே!

என்ன பைத்தியக்காரத்தனம் என்று எண்ணியவாறே ரதிமாலா கொண்டு வந்திருந்த தட்டுகளைப் பார்த்தவளுக்கு வேறு ஒன்று தோன்றியது.

மகன் முடிவாகத் தாயாருக்குக் கொடுத்த வாக்கு என்று முடித்துவிட்டான்.

எனவே, இப்போது தாயாரை இளக்குவதற்காக இவள் இத்தனை சீர்த் தட்டுகளோடு இங்கே வந்திருக்கிறாள்.

ஆனால், என்னதான் விலை உயர்ந்தவையே என்றாலும், இதுபோலப் பழங்களையும் பருப்புகளையும் பார்த்தா மேடம் மயங்கி விடப் போகிறார்கள்?

தயாகரி மேடம் செய்யும் தருமச் செயல்கள் பற்றி ஓரளவு தெரிந்திருந்தால் கூட, இந்த அசட்டுத்தனம் இவள் செய்திருக்க மாட்டாள் என்று சுமனசி எண்ணினாள்!

ஆனால், பிற்பாடு அதெல்லாம் தெரிந்த பிறகும் ரதிமாலா தன் முயற்சியைக் கைவிட வில்லை என்பது சுமனசிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

அது மட்டுமல்ல , நினைத்ததைச் சாதிப்பதற்காக அவள் எந்த அளவுக்குப் போகக் கூடும் என்பது, சுமனசியால் கற்பனை செய்யக்கூட இயலாததாய் அமைந்தது!

# அத்தியாயம் - 7

சாதாரண மனிதர்கள்தான். பெரிய நடிகையைப் பார்த்து விழி விரித்து நிற்கக் கூடியவர்களும் கூட.

ஆனால் இங்கேயும் ஒரு பெரிய நடிகன் இருந்தான். அவனுடைய தாயாரின் அலுவலகமே என்றாலும் அவசியமற்று அவன் வருவது கிடையாது.

தாயின் பிறந்த நாளுக்கு வந்தபோதும், அலட்டல் ஆரவாரம் ஒன்றும் இல்லாமல் ஒரு மகனாகச் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு, வந்தது போலவே ஓசையற்றுச் சென்றும் விட்டான்.

ஆனால் வந்ததும் வராததுமாக ரதிமாலாவின் உதாசீனம், அதிகாரம் இரண்டும் அங்கிருந்த மற்ற அலுவலர்களை ஒதுங்கி நிற்க வைத்தன.

முதலாளி மேடத்துக்கு மருமகளாகப் போகிறவள் என்கிறாளே என்று பயம் வேறு!

மேடத்துடைய செயலாளர் சுமனசி. அவளே என்ன வேண்டுமோ பேசிக் கொள்ளட்டும் என்று , அவரவர் இடத்தில் அமர்ந்து வேவையைத் தொடங்கினர்.

ஆனால் அதுவும் ரதிமாலாவுக்குப் பிடிக்கவில்லை.

“என்ன? அவரவர் வேலையைப் பார்க்கப் போய்விட்டால் எப்படி? என்னை ஆன்ட்டியிடம் யார் கூட்டிப் போவது?” என்று கோபமும் வருத்தமும் காட்டிக் கேட்டாள்.

மற்றவர்கள் சுமனசியைப் பார்க்க, அவளும் சமாளித்துப் பதில் கூறினாள்.

“இன்னும் மேடம் வரவில்லை. . .”

“அப்படியானால் அத்தையின் அறையைத் திறந்து விடு. நான் அங்கே போய்க் காத்திருக்கிறேன். உங்களுக்கெல்லாம் சமமாக என்னால் இங்கே உட்கார்ந்திருக்க முடியாது.”

திமிரைப் பாரேன் என்பது போன்ற பார்வை ஒருவருக்கொருவர் பாய்வதைக் கவனியாதது போல, “மேடம் வருமுன் அந்த அறைக்குள் யாரும் செல்ல முடியாது, மிஸ் ரதிமாலா. அவர்களுக்குத் தனி லிஃப்ட் இருக்கிறது. அதில் வந்து அறைக்குள் சென்று, சற்றுப் பொறுத்து கூப்பிடுவார்கள். அதற்கு முன் அங்கே செல்ல இயலாது.” என்று சுமனசி உண்மையைக் கூறினால் ரதிமாலாவினால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

“அதெப்படி? என்னைப் போய்க் காத்திருக்க வைப்பாளா? எந்தப் பணக்கார வீடானாலும், கதவைத் தட்டக்கூடத் தேவையில்லாமல் உள்ளே போகிற உரிமை உள்ளவள் நான்! இந்தச் சுண்டைக்காய் அலுவலகத்தில் என்னை உட்கார வைக்க, உனக்கு என்ன தைரியம்?”

கிளம்பு என்று அறையை விட்டு வெளியே போகச் சொன்னவனின் நினைவு சுமனசிக்கு வந்தது.

காத்திருக்கச் சொன்னதற்கே இவ்வளவு ஆத்திரம்? ஆனால், ஒருவன் வெளியேயே போகச் சொன்னது அவளுக்குத் தெரியுமே அப்படி இருக்க என்ன அலட்டல்?

மனம் தானாக எண்ணிவிட, முகம் காட்டிவிடுமோ என்ற பயத்தில் சட்டெனப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள் சுமனசி.

ஆனால் “பொய்!” என்று வீறிட்டாள் ரதிமாலா. “பொய்தானே? அதனால்தானே என்னை நேரே பார்க்க முடியாமல் தரையைப் பார்க்கிறாய்? எல்லோரும் சொல்லுங்கள், இவள் சொன்னது பொய்தானே?” என்று வேகமாகப் பொரிந்தாள்.

“இஇல்லை ரதிமாலா மேடம். சுமனசி சொல்வது நிஜம்தான் . . “ என்று மீனாட்சி இழுக்கும்போதே, தயாகரி அறையிலிருந்து மணியொலி கேட்டது.

வினாடிக்குள் ரதிமாலாவின் முகம் மாறியது. அவசரமாக எழுந்து,தன் உடையைச் சீர் செய்துகொண்டாள். கைப்பையைத் திறந்து சிறு கண்ணாடியை எடுத்து அவள் தன் முகத்தை ஆராய்வதைக் காணவும் சுமனசிக்குச் சற்றுப் பரிதாபமாகக்கூட இருந்தது.

எப்போதும் காமிரா முன் நிற்கிற மாதிரி, தோற்றத்தில்தான் கவனம் இருக்கும் போலும். இவள் இயல்பாக எப்போது இருப்பாள்?

உள்ளறைக்கதவை நோக்கி ரதிமாலா ஒய்யாரமாக நடக்கத் தொடங்கவும் சுமனசிக்குச் சுரணை வந்தது. அவசரமாக முன்னே ஓடிச் சென்று, “சற்றுப் பொறுங்கள் மிஸ். ரதிமாலா. நான் போய் மேடத்திடம் கேட்டு வந்து . . .” என்று அவள் மேலே பேசுமுன், சட்டென அவளது கையைப் பிடித்து இழுத்துத் தள்ளினாள் மற்றவள்.

ரதிமாலாவின் மெல்லிய கரங்களில் இவ்வளவு பலம் இருக்கும் என்று எதிர்பார்த்திராத சுமனசி சமாளித்து நிற்குமுன், தயாகரியின் அறைக் கதவு திறந்தது.

“இங்கே என்ன சத்தம்?” என்று தயாகரி கேட்டு முடிக்குமுன் மறுபடியும் ரதிமாலாவின் முகம் மாறியது.

பரிதாபகரமாக முகத்தை வைத்துக்கொண்டு, ““ஐயோ

பாருங்கள் அத்தை! உங்களைப் பார்க்க எவ்வளவோ ஆசையாக வந்து, இவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறேன். ஆனால் இவள் வழிவிடவே மாட்டேன் என்கிறாள்!" என்று முந்திக்கொண்டு போய் தயாகரியின் காலில் விழ முயன்றாள்.

"ஷ்! " என்று சட்டென விலகி, "அலுவலகத்தில் இதென்ன?" என்று குரலாலேயே அவளைத் தடுத்து நிறுத்திவிட்டு, சுமனசியின் புறம் திரும்பினாள் பெரியவள்.

அவளை ஒரு தரம் ஆழப் பார்த்துவிட்டு, "அவர்களைக் கூட்டிக்கொண்டு நீயும் உள்ளே வா." என்றுவிட்டுத் திரும்பி நடந்தாள்.

"அது . . " என்று ரதிமாலா ஏதோ சொல்ல முனைந்தது காதில் விழுந்த மாதிரியே தயாகரி காட்டிக் கொள்ளவில்லை.

திரும்பிப் பாராமல் தயாகரி சென்றுவிட, பெரியவளுக்குப் பின்னே சாத்திக்கொண்ட அறைக் கதவை வெறித்தாள் ரதிமாலா.

"கூட்டி வரச் சொன்னார்களே, வருகிறீர்களா?" என்று கேட்டு முன்னே ஓர் எட்டு எடுத்து வைத்தாள் சுமனசி.

"ஏய் ஏய், நில்லு நில்லு. நீ எதற்காக என்னோடு வர வேண்டும்? மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையே அன்னியர்கள் மூக்கை நீட்டுவது பெரிய தப்பு. அது எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. ஏதோ மற்ற சாதாரண பிசினஸ்காரர்களோடு பேசுவது போலத் தப்பாகச் சொல்லி விட்டார்கள். ஆனால், என்னோடு யாரும் வரத் தேவையில்லை. நானே போய்க் கொள்கிறேன். " என்று சுமனசியை நிறுத்திவிட்டு, ரதிமாலா முன்னே செல்ல முயன்றாள்.

ஆனால், "இங்கே மேடம் சொல்வது வேதம். அதனால் உங்களைத் தனியே உள்ளே அனுப்ப முடியாது. இப்போது மேடத்தை நீங்கள் பார்க்க வேண்டுமா, இல்லையா?" என்று பிசிரற்ற குரலில் சுமனசி கேட்டாள்.

வெறித்துப் பார்த்துவிட்டு, "சரி. வந்து தொலை!" எரிந்து விழுந்தாள் ரதிமாலா.

"இருக்கட்டும். இதெல்லாம் எத்தனை நாளைக்கு?" என்று அவள் முணுமுணுத்தது எல்லோருக்குமே கேட்டது.

கேளாதது போல நடித்ததில் முதல் பரிசு சுமனசிக்கு!

தயாகரியின் அறைக்குள் சென்றதும், எதிரே கிடந்த இருக்கைகளைக் காட்டவே இரு இளம் பெண்களும் அமர்ந்தனர்.

தனக்குச் சமதையாக ஒரு வேலைக்காரியை உட்கார வைப்பதா என்று ரதிமாலாவுக்கு ஆத்திரம்தான். ஆனால் ஒரு தரம் முறைத்தது

தவிர,  அவள் அதை வெளிக் காட்டவில்லை.

முதலைக்குத் தண்ணீரில்தான் பலம்., தயாகரியின் அலுவலகத்தில் அந்தப் அம்மாளிடம் மோதக் கூடாது!

“சொல்லு ரதிமாலா, என்னிடம் என்ன விஷயமாக வந்தாய்?” என்று நேரடியாகத் தயாகரி கேட்கவும் ரதிமாலா சற்றுத் திகைத்தாள்.

பெரியவளின் ஒப்புதல் யாருக்குத் தெரிந்தாலும் அவளுக்கு சந்தோஷம்தான். ஆனால் முட்டாள்த்தனமாக மகனிடம் கண்டபடி வாக்கு வேறு வாங்கி வைத்திருக்கிறாளே! இப்போதும் விஷயத்தின் முக்கியத்துவம் தெரியாமல் அசட்டுத் தனமாக மறுத்துப் பேசினால்?

அதுவும் இந்த வேலைக்காரப் பெண்ணின் முன்னிலையில்!

“பாருங்கள் அத்தை, உங்களிடம் நான் எத்தனையோ பேசக் கூடும். பேச வேண்டும். அதையெல்லாம் ஒரு வேலைக்காரி முன்னிலையில் எப்படிப் பேசுவேன்? யோசியுங்கள் அத்தை.” என்றாள் ரதிமாலா கொஞ்சலாக.

“இது என் அலுவலகம். இங்கே என் செயலாளர் அறியாமல் பேச எதுவும் இல்லை.” என்ற குரலில் சற்றும் இளக்கம் இல்லை.

ரதிமாலாவின் முகம் சிணுங்கியது. அழகாக. அந்தச் சிணுங்கலுக்கு ஏற்பக் கொஞ்சலாக, “போங்கள் அத்தை. இப்படிச் சொன்னால் எப்படி? வேறே எங்கே வந்து உங்களைச் சந்திப்பது, சொல்லுங்கள்? வீட்டுக்கு வந்தால் வெளி கேட்டிலேயே எலக்ரானிக் பூட்டு. திறப்பதற்கு ஆளே கிடையாது. உள்ளே நாய்கள். உங்கள் பண்ணையிலோ அதை விடக் காவல் அதிகம். என்னவோ உங்கள் பண்ணையின் ஆர்கானிக் முறை விளைச்சலைக் கெடுப்பதற்காகவே எல்லோரும் வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்வது போல மாயையை நம்பி, யாரையும் பக்கத்திலேயே வர விடுவதில்லை. இதெல்லாம் தேவையா அத்தை?”  என்று பொருத்தமான குரல் ஏற்ற இறக்கங்களுடன்  அழகாகத் தலையசைத்துக் கேட்டாள்.

“எங்களுக்குத் தேவை இருப்பதால்தான் செய்கிறோம். இதில் உனக்கென்ன பிரச்சினை? உன் வீட்டுப் பண்ணை லாபம் ஏதும் குறைகிறதா?”

கலீரென்று சரித்தாள் ரதிமாலா. குரலில் சிரிப்புடனேயே, “பிரமாதமாக ஜோக்கடிக்கிறீர்களே அத்தை! எங்கள் வீட்டுக்கும் பண்ணைக்கும் என்ன சம்பந்தம்? நான்தான் நன்றாகச் சம்பாதிக்கிறேனே!” என்றாள் அவள்.

தொடர்ந்து “உங்களுக்கும் அந்தப் பண்ணை, இத்தனை பேருக்கு வீணே சம்பளம் கொடுத்துக்கொண்டு இந்த அலுவலகம் . . . எதுவும் தேவையே இல்லை அத்தை. நம் உதய்தான் நிறையச்

சம்பாதிக்கிறாரே! சும்மா என் பெற்றோர் போல மாதாமாதம் வெளிநாடு சுற்றுப் பயணம் செய்துகொண்டு ஜாலியாக இருப்பதுதானே? “ என்று இலவசமாய் ஆலோசனை சொன்னாள்.

உதட்டோரம் ஏளனமாக வளைய, “இதைச் சொல்ல இவ்வளவு தூரம் வந்தாயா? ஐயோ பாவம் நீ! ஆனால் அவரவர் வாழ்வை என்ன செய்வது என்று அவரவர்தான் முடிவு செய்ய வேண்டும். அதில் ஏதேனும் சந்தேகம் வந்தால் உன்னிடம் ஆலோசனை கேட்கிறேன். இப்போது கிளம்புகிறாயா? எனக்கு வேலை நிறைய இருக்கிறது, வெட்டிப் பேச்சுப் பேச நேரமில்லை. அத்தோடு அங்கே கடை பரப்பி வைத்திருக்கிறாயே, அந்தத் தட்டுகளை எடுத்துப் போய்விடு. இங்கே பயன்படாது.” என்றுவிட்டு சுமனசியின் பக்கம் திரும்பி, “மடத்துச் செக்கை பாங்க்கில் போட்டுவிட்டாயா? “ என்று வேலையைத் தொடங்குவதாகக் குறிப்புக் காட்டினாள் பெரியவள் தயாகரி.

“ஐயோ அத்தை, இப்போதே நீங்கள் வேலை தொடங்க வேண்டுமா? உங்களோடு நான் நிறையப் பேச வேண்டுமே! ப்ளீஸ் அத்தை!” என்று கெஞ்சினாள் ரதிமாலா.

கொஞ்சலாகக் கெஞ்சுவது எப்படி? ரதிமாலா செய்து காட்டியதை சுமனசி ஆச்சரியத்துடன் கவனித்தாள்.

ஆனால் தயாகரி சற்றும் இளகவில்லை. “முன்னேற்பாடு எதுவும் இல்லாமல் வந்ததற்கு உன்னை நான் அழைத்துப் பேசியிருக்கவே கூடாது. ஆனால் வந்துவிட்டாயே என்றுதான் உள்ளே கூப்பிட்டுப் பேசினேன். இதற்கு மேல் எனக்கு அவகாசம் இல்லை. கிளம்பு. இன்னொன்று. அங்கே கடை பரப்பி வைத்திருக்கிறாயே., எல்லாவற்றையும் எடுத்துப் போய்விடு. . . “

குறுக்கிட்டு, “ஐயோ அத்தை, எல்லாம் வெளிநாட்டு உயர்வகைப் பழங்கள். அங்கே படப்பிடிப்புக்குப் போய்விட்டு வரும்போது உங்களுக்கு என்றே வாங்கி வந்தேன்.” என்றாள் ரதிமாலா.

“ஆனால் இங்கே பயன்படாது. பெரும்பாலும் பண்ணைப் பழங்கள் தவிர வேறு உண்பதில்லை. சுமனசி, பையன்களைக் கூப்பிட்டு எடுத்துப் போவதற்கு உதவி பண்ணு. அந்த வேலை முடிந்ததும் சீக்கிரமாக இங்கே வா. இன்று நிறைய வேலை இருக்கிறது.” என்று வரிசையாக உத்திரவுகள் பிறப்பித்தாள்.

வேறு வழியின்றி ரதிமாலா இருக்கையை விட்டு எழுந்தாள்.

அப்போதும் கதவை நோக்கிச் செல்லாமல், மேஜையைச் சுற்றிக்கொண்டு தயாகரியின் அருகே செல்லலானாள்.

ஆனால் பெரியவள் அழுத்தமான குரலில், “இது அலுவலகம்

ரதிமாலா. இந்தக் காலில் விழுவது, கட்டிப் பிடிப்பது எல்லாம் நன்றாயிராது. சீக்கிரமாகக் கிளம்பு.” என்று விட்டு முன்னே இருந்த ஃபைலைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினாள்.

செய்து கொண்டிருந்த ஒப்பனையைத் தாண்டி, ரதிமாலாவின் முகத்தில் சினச் சிவப்புத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால், அவளது கண்கள் சட்டெனச் சிவந்து போயின.

ஆத்திரத்துடன் தயாகரியை உறுத்து விழித்தவள், அருகிலே இன்னொருத்தி நிற்பது நினைவு வர உடனே விழிகளைத் தாழ்த்திச் சட்டெனத் திரும்பிக் கதவை நோக்கி விரைந்தாள்.

அந்தக் காம்ப்ளக்சே  தயாகரியின் உடமை என்பதால், வினாடிக்குள் அங்கங்கிருந்து உதவிக்கு ஆட்கள் வந்துவிட, ரதிமாலா கொணர்ந்த தட்டுகள் அனைத்தும் வெகு விரைவிலேயே அவளது காரில் ஏற்றப்பட்டன.

அவள் இலகுவாகவும் விரைவாகவும் ஏற வசதியாகக் காரும் கட்டடத்தை ஒட்டி நிறுத்தப்பட்டு, அனாவசியத் தாமதம் இன்றி அவளும் சென்று விட்டாள்.

ஆனால் இந்த ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அவள் அருகாமையில் அதிகம் நிற்க நேர்ந்த சுமனசிக்குத் தன் காதுகளை நம்புவது கடினமாகப் பட்டது.

அந்த அளவு கீழ்த்தரமான வார்த்தைகளை ரதிமாலா முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள்.

அதிலும், அவள் காத்திருக்க நேர்ந்த சமயத்தில், சும்மா உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் அங்கே மாட்டி வைத்திருந்த படங்கள் எல்லாமே தயாகரி செய்துவரும் தரும காரியங்கள் பற்றியவை அவைகளைச் சற்று அலட்சியமாகவே பார்வையிட்டவள் எல்லாவற்றையும் பார்த்ததும் ஆளே ஒரு மாதிரி ஆகிவிட்டாள் எனலாம்.

எவ்வளவு பணம்! எல்லாவற்றையும் ஓரளவு கணக்கிட்டவளுக்கு மனம் பொங்கிவிட்டது. இவ்வளவு பணத்தை இப்படியா ஊதி விடுவது?

உதயராஜ் , அவளுக்குக் கணவனாகப் போகிறவன். அவன் நிறையச் சம்பாதிக்கிறான் என்றால், அது வரப் போகிற மனைவியான அவளது பணமதானே? அவளது அந்தப் பணத்தைக் அருமை தெரியாமல் , கணக்கு வழக்கே இல்லாமல் இப்படியா வீணாக்குவது?

அங்கே தகப்பன் ஆர்கானிக் பண்ணை மண்ணிலும் தண்ணீரிலும் கரைக்கிறான் என்றால், இங்கே இந்தம்மா இப்படியா?

சரி, இதில் விளம்பரத்துக்காக உதயராஜனின் பெயரையாவது போட்டு, அவனைப் பிரபலப்படுத்துகிறார்களா என்றால், எல்லாம் “தயா ஃபவுண்டேஷ”னாம். தயாகரி அம்மாள்தான் சகலமும்!

திமிர்! திமிர்! பெற்றுப் போட்டுவிட்டேன் என்கிற திமிர்! சீக்கிரமே இவளை இங்கிருந்து விரட்டியாக வேண்டும்!

வாரக் கடைசிக்கு மட்டும் போகிறாளாமே., அந்தப் பண்ணையிலேயே அவள் எப்போதும் விழுந்து கிடக்கப் பண்ண வேண்டும்.

இருக்கட்டும் இதுகளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கிறேன். இந்த ரதிமாலா லேசுப்பட்டவள் அல்ல என்று காட்டுகிறேன்!

அவள் ஆசையாக வாங்கிக் கடல் கடந்து கொண்டு வந்தால் திருப்பியா அனுப்புகிறாள்! இந்தக் கிழவியைப் பார்க்க வேண்டிய விதத்தில் பார்த்துக் கொள்ளகிறேன்!

ரதிமாலா நினைத்து வந்தது நடக்கவில்லை., உலக மகா அழகியும் பெரிய நடிகையுமான அவளது “அத்தை” அழைப்பில் மதி மயங்கி, அன்பு மருமகளே என்று தயாகரி உருகவில்லை என்பதே அவளுக்குப் பெரும் ஆத்திரம். அத்தோடு இந்தத் தருமச் செலவுக் கணக்கும் சேர்ந்துகொள்ள ரதிமாலா கொதிநிலையில் இருந்தாள்.

என்னதான் கொதிப்பு என்றாலும் அந்த இடத்தில் கத்தி ஆர்ப்பாட்டம் செய்வது தவறு என்று என்று அவள் உணர்ந்தாள் போலும். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல, இன்னும் முயற்சி செய்யும் எண்ணமும் அவளுக்கு இருந்தது. ஆர்ப்பாட்டம் அதையும் கெடுத்துவிடும்.

எனவே, முழுதாகத் தன்னை அடக்க மாட்டாமல் அவள் பொருமிக் கொட்டினாலும் எல்லாம் வெறும் முணுமுணுப்பாகவே இருந்தது.

ஆனால் அக்கா வீட்டினரின் சிறு அரவங்களையும் உன்னிப்பாகக் கேட்டுக் கவனத்துடன் ஒதுங்கி வாழ்ந்து பழகியிருந்த சுமனசிக்கு அந்தப் பொருமல் அவ்வப்போது காதில் விழுந்துகொண்டே இருந்தது. அப்படிக் காதில் விழுந்தது ஓரளவு புரிந்து, அவளை அதிரவும் வைத்தது.

திருச்சி ஹோட்டல் நாடகத்தின் தொடர்ச்சியே இது என்று அவளுக்குப் புரியாமல் இல்லை. ஆனால் பணியில் சேர்ந்து இந்தச் சில காலத்துக்குள்ளாகவே தயாகரியைத் தன் லட்சியப் பெண்மணியாக எண்ணத் தொடங்கியிருந்த சுமனசிக்கு, ரதிமாலாவின் நோக்கமும் போக்கும் கவலையை அளித்தன.

ஏதேனும் சூழ்ச்சி மூலம் ரதிமாலாவின் நோக்கம் நிறைவேறி விடுமோ என்ற எண்ணமே அவளது நெஞ்சை இறுக்கிப் பிடித்து, ஒரு கணம் நின்று பின் துடிக்க வைத்தது.

ஆனால் , இதில் அவள் செய்யக் கூடியது என்ன?

திருச்சி ஹோட்டலில் அவளும் இருந்ததைச் சொல்லாமல் அங்கே நடந்தது பற்றித் தயாகரியிடம் தெரிவிக்க முடியாது. அப்போதைய ரதிமாலாவின் பேச்சையுமே அவள் எப்படிச் சொல்ல முடியும்? ஒட்டுக் கேட்டதாக அல்லவா ஆகும்!

அத்தோடு, வந்த இடத்தில் பிறர் காது கேட்க ரதிமாலா இப்படிச் சொல்வாளா என்பதும் இருக்கிறதே!

ஆனால், இந்த விஷயம் இத்தோடு முடியவில்லை.

மறுநாள் உடனடி வேலைகள் முடிந்த நிலையில் தயாகரி திடுமென, "ரதிமாலாவை உனக்கு முன்பே தெரியுமா?" என்று கேட்டாள்.

"அஅது அவர்கள் பெரிய நடிகை . ." என்றாள் சுமனசி.

முன்னிருந்த லாப்டாப்பில் "சேவ்" போட்டு முடித்துக் கொண்டிருந்தபோதும், பெரியவளின் பார்வையை சுமனசியால் உணர முடிந்தது.

அவள் லாப்டாப்பை மூடி வைக்கும்வரை காத்திருந்து, "நான் அதைக் கேட்கவில்லை. அவளை நேரடியாகப் . பார்த்துப் பேசியிருக்கிறாயா என்று கேட்டேன்." என்று மறபடியும் தயாகரி விசாரித்தாள்.

"இல்லை, மேடம்." என்று சின்னவளால் இந்தக் கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்ல முடிந்தது.

"பின்னே? அவள் ஏன் உன்னிடம் அப்படி உதாசீனமாக நடக்க வேண்டும்? "

"எனக்கும் அதுதான் மேடம் ஆச்சரியம்" எனும்போதே சுமனசிக்கு உள்ளே ஏதோ குறுகுறுத்தது.

ரதிமாலா அவளை ஏவியது, தயாகரி மேடத்துக்குத் தானாகத் தெரிய வாய்ப்பில்லை. அது பற்றி யாரோ மேடத்திடம் சொல்லியிருக்க வேண்டும். சும்மா போய் முதலாளி அம்மாவிடம் யாராலும் ஊர் வம்பு பேச முடியாது. அப்படியானால் இது போன்ற விவரங்களைக் கூறுமாறு யாரையோ மேடம்தான் ஊக்குவித்திருக்க வேண்டும்.

அது . . மீனாட்சி? "கெட்டிக்காரி என்றாலும் அப்பாவி" என்று மேடம் சொன்னதாக அவள்தானே கூறினாள்?

சுமனசியை உளவறிய அவளை நியமித்திருக்கிறார்களா?

அவளுடனேயே தங்க வைத்து, அவர்கள் இருவருமாகவே பணிக்கு வருவதும் போவதும், . .இன்னும் ஷாப்பிங் கூட மீனாட்சியோடுதான்.

அன்று வரை ஒன்றும் தோன்றாதது, இன்று உறுத்தியது. மீனாட்சியோடு தங்கும்படி கூறியது கூட மேடம்தான்.

அவளது வேலை வாய்ப்பு விஷயமாக மகன் மீது கொண்ட ஐயத்தின் விளைவா?

அதனால் இந்தக் கண்காணிப்பா?

ஆனால் செய்யும் பணியின் மூலம் தயாகரியின் பெருந்தன்மை பற்றி அறிந்திருந்த சுமனசி, இதைப் பெரிய முரண்பாடாக உணர்ந்தாள்.

அல்லது இதுவே உலக இயல்புதானோ? ஒரே மகன். எந்தப் பெண்ணும் நெருங்காமல் காவல் காக்கிறார்களா? உரிமைப் போர்?

ஆனால் ரதிமாலா மேடத்தின் மருமகளானால் குடும்பத்தில் தினமும் கடும் போராட்டமாகத்தான் இருக்கும்! பாவம்!

இப்போது யார் மேல் பரிதாபப்படுவது? தாயிடமா, அல்லது மகனிடமா?

இரக்கத்தை மீறி, சுமனசிக்கும் இது பிடிக்கவும் இல்லை.

இந்நிலையில் தயாகரிக்கு ஓர் அழைப்பு வந்தது.

பிரபல நடிகனான உதயராஜனைக் கொண்டு ஒரு பெரிய மால் ஒன்றைத் திறக்க இருக்கிறார்கள். குடும்பத்தினரோடு வருகை தருமாறு அழைப்பு!

அக்கம் பக்கத்து மானிலங்களின் நாயக நடிகர்களுக்கும் இதே போன்ற அழைப்புகள் போலும். ஒவ்வொருவரும் ஓரொரு பகுதியைத் திறப்பதாக அழைப்பு கூறியது.

ஏனோ நாயகி நடிகைகளின் பெயர்களைக் காணோம். அதனால்தானோ என்னவோ, தயாகரி விழாவுக்குச் செல்ல முடிவு செய்ததோடு, சுமனசியையும் உடன் வருமாறு பணித்தாள்.

சுமனசி திகைத்தாள்.

# அத்தியாயம் - 8

போனதில்லையே தவிர, “மால்” என்றால் என்ன என்று சென்னை வந்து இத்தனை நாட்களில் சுமனசி ஓரளவு தெளிவாகவே தெரிந்து கொண்டிருந்தாள். அதன் திறப்பு விழாவை அப்போதைய வசூல் மன்னர்களில் ஒருவனாக இருந்த உதயராஜனைக் கொண்டு நடத்துவது ஏற்புடையதே.

அவனுடைய தாயாராகத் தயாகரி கம்பீரமாகக் கலந்து கொள்வதும் பொருத்தமே.

ஆனால் கொல்லன் பட்டறை ஈ போல, சுமனசி அங்கே என்ன செய்யப் போகிறாள்?

சுமனசி திகைத்து விழிக்கவும், “ஏன்? என்ன திகைப்பு? நீதானே என் செயலாளர்? இது போன்ற இடங்களுக்கு, நான் வேறு யாரை அழைத்துச் செல்வது?” என்று கேள்வி பிறந்தது.

“அஅதில்லை மேடம். அங்கே என்ன மாதிரி உடை அணிவது . . . என்று குகுழப்பமாக இருக்கிறது. நான் பொதுவாக அலுவலகத்துக்கு ஏற்ற மாதிரி மட்டும்தான் வாங்குவது. இது போலச் சென்று எனக்குப் பழக்கமும் இல்லை . ..” என்று உண்மையைச் சொன்னாள் அவள்.

“கேள்விப் பட்டேன். . .”

கேள்விப் பட்டார்களா? எப்படி? ஓ! மீனாட்சி! ஒரு சிநேகிதியாக அவளிடம் சொன்ன எல்லாமே, மேடம் காதுக்கு வந்திருக்குமா?

“பார்ட்டி உடை போல அணியத் தேவையில்லை. நீ அணிவன எல்லாமே இங்கே உனக்குப் பொருத்தமானவைகளே என்றாலும், சற்று உயர் ரகம் அங்கே தேவைப்படக் கூடும். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.” என்றதோடு தயாகரி முடித்துவிட்டாள்.

தன் குழப்பங்களை சுமனசி, மீனாட்சியிடமே கொட்டினாள். போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு அவள்தானே எடுத்துச் செல்லக் கூடியவள்!

தேவைப்பட்ட பதில்களும் அவள் மூலமே கிடைத்தன.

அதன்படிப் பார்த்தால், அங்கே சுமனசிக்குப் பெரிய வேலை ஒன்றும் இல்லை.

தயாகரியோடு கூடப் போக வேண்டும். மேடம் சொல்வதற்கேற்ப, பொருட்களை வாங்கி வைத்துக் கொள்வதோ, வினியோகிப்பதோ செய்ய வேண்டும். பொதுவாக, மேடம்

சொல்வதைச் செய்தால் போதும். “ஒரு கண்ணையும் காதையும் அவ்வப்போது மேடத்திடம் வை. அது போதும். பொதுவாக பிரச்சினை இராது. நீயும் மகிழ்ச்சியோடு சுற்றிப் பார்ப்பதையே மேடம் விரும்புவார்கள். “ என்றாள் மீனாட்சி.

சுமனசி எதிர்பார்த்ததும் அதுவேதான். முழுதாக “மகிழ்ச்சியோடு சுற்றிப் பார்ப்பதை” அல்ல. என்றாலும் ஓரளவு அப்படித்தான்.

தயாகரி சற்றுக் கண்டிப்பானவள் என்றாலும், விரட்டி வேலை வாங்குகிறவள் அல்ல என்பது இத்தனை நாட்களில் அவளும் அறிந்த விஷயமே. அதனால், இந்த ஊர்ப்பக்கத்துப் பெண், நகரம் பற்றி அறிந்து கொள்ளட்டும் என்றே இந்தத் திறப்பு விழாவுக்குத் தன்னை அழைத்துப் போகிறாள் என்றே சுமனசி எண்ணியிருந்தாள்.

மீனாட்சியின் பேச்சும் அதையே வலியுறுத்தியது, அவளுக்கு உற்சாகமூட்டியது.

விடுமுறை நாட்களில் அவளும் மீனாட்சியுமாக விடுதியில் பார்த்த திரைப்படங்களைக் கொண்டு செல்ல இருந்த “மாலி”ன் உட் பகுதிகளை, சுமனசியால் ஓரளவு கற்பனை செய்ய முடிந்தது.

ஊரில் அவள் வேலை செய்த பெரியகடையை விடப் பலப்பல மடங்கு பெரியதாய், வருகிற வாடிக்கையாளர்களைப் பலப்பல விதத்திலும் கவரக் கூடிய வகையில்  விதவிமான அணிமணிகள், உணவு வகைகள், கூடவே அசைந்தாட வைக்கும் இசை , ஒளி வெள்ளம் ..........................................................................................

இத்தனைக்கும் மேல் உதயராஜன்!

மகனின் பெயர் உதயரூபன்., உதயமூர்த்தி என்ற அவனுடைய தாத்தாவின் பெயரை அப்படியே கூப்பிட முடியாதே என்று லேசாக மாற்றி அப்படி வைத்திருந்ததாக தயாகரி ஒரு தரம் சுமனசியிடம் சொல்லியிருந்தாள்.

ஆனால் முதல் படத்துக்காக ஒப்பந்தம் போடும்போது, அதன் டைரக்டர் இந்தப் பெயரை வைத்துக் கொள்ள அனுமதி கேட்டாராம்.

“சும்மாப் பெயரை மாற்றிவிட்டேன் என்று அலட்டல் பண்ணியிருந்தால் “போய்யா” என்றிருப்பேன். ஆனால், பதவிசாக “மாற்றிக் கொள்ளலாமா” என்று பணிவுடன் கேட்கவும் இவன் அப்பா சரியென்றுவிட்டார். என் மாமனார் மிகப் பெரிய மா மனிதர். அந்தக் காலத்திலேயே சுவாமிநாதன் சாரின் பேச்சைக் கேட்டு விவசாயத்தில் ஈடுபட்டவர் அவர். அவரது பெயரை மாற்றுவதா என்று எனக்குக் கொஞ்சம் தயக்கம்தான். காலத்துக்கு ஏற்றாற்போல மாறு தயா என்று அவன் அப்பா சொன்னதால், சரிதான் என்று விட்டுவிட்டேன். “ என்றாள்.

கண்கள் பளிச்சிட, “உங்கள் சொந்த ஊர் சிதம்பரமா, மேடம்?” என்று கேட்டுவிட்டு உடனே இமைகளைத் தாழ்த்திக் கொண்டாள் சுமனசி.

லேசாகச் சிரித்து,”மதுரையில் பிறந்து பணிந்து போகிற பெண்களும் உண்டு. சிதம்பரத்தில் பிறந்து அடங்கிப் போகிற ஆண்களும் உண்டு.” என்றாள் பெரியவள்.

நல்லவேளை தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை என்ற ஆறுதலுடன், “சாரி மேடம், சட்டென வாயில் வந்துவிட்டது.” என்று மன்னிப்புக் கேட்டாள் சின்னவள்.

“எதற்கு வருத்தம்? இயல்பாக இரு. தேவையற்று உன்னை நீயே குறுக்கிக் கொள்ளாதே.” என்றாள் எஜமானி.

இயல்பாக உட்காரக் கூட முடியாமல் கூனிக் குறுகிக் கிடந்த பழைய வாழ்வு சுமனசிக்கு நினைவு வந்தது. அக்கா எப்படி இருக்கிறாளோ?

ஹாலும் கிச்சனுமாக இரண்டே அறைகள் கொண்ட வீடு என்றாலும் பரவாயில்லை. அதற்கு முன் பணம் கொடுக்கும் அளவு சேமித்ததும் அக்காவை இங்கே கூட்டி வந்து விடவேண்டும். அதன்பின் இந்தக் கூனல் குறுகல் மாறி, இருவருமே எல்லோரையும் போல சந்தோஷமாக இருக்கலாம்!

சந்தோஷம் என்றதும் உதயரூபனின் நினைவு சுமனசிக்கு வந்தது. இப்படி ஒரு வாழ்வை எண்ணிப் பார்க்க முடிவதே அவனால் அல்லவா?

இப்போது இந்தத் திறப்பு விழாவில் அவன் தாயின் அருகேயே இருப்பானா?

அப்படி இருக்க வேண்டுமே என்று அவளது மனது ஆசைப்பட்டது.

ஏனெனில் . .. அப்போதுதானே, ஏதேனும் வாய்ப்புக் கிடைக்கும்போது அவளால் அவனிடம் நன்றி உரைக்க முடியும்?

சுமனசி ஆவலுடன் எதிர்பார்த்த திறப்பு விழாவும் வந்து சேர்ந்தது.

அவளிடம் அளவு கேட்டு தயாகரி ஆர்டர் செய்து வந்த உடை சுமனசிக்கு மிகவும் பிடித்தது. ஆனால் சிறு கலக்கமும் ஏற்பட்டது.

உடை மிகவும் அழகாக இருந்தது. பளபளா என்று கண்ணைப் பறிக்கிற மாதிரி அதிகப்படியாக ஜொலிக்கவில்லை. ஆனாலும் இது விலை அதிகமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது.

எப்படியும் அந்த ஆடைக்கான பணத்தை அவள் கொடுத்துவிடுவதாக இருந்தாள்.

ஆனால், தயாகரிக்குச் சற்று உயர் ரகமானத் தோன்றியது, சுமனசிக்கு எட்ட முடியாத விலையாக இருக்கலாமே!

தன் கவலையை அவள் மீனாட்சியோடு பகிர்ந்துகொண்டபோது, "என்னப்பா பெரிய காரியம்? தேவை ஏற்படும்போது, மேடம் இப்படி எல்லோருக்குமே வாங்கிக் கொடுப்பதுதான். பணம் கேட்க மாட்டார்கள். அப்படிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று நீ எண்ணினால், ஓவர்டைம் செய்து கழித்துவிடு!" என்றாள் அவள் இலகுவாக.

சுமனசி துள்ளிக் குதித்தாள். சேமிப்பு கரையாமலே பணத்தைத் திருப்பியும் கொடுத்து விடலாம்! "ஆஹா! அருமையான வழி! இது எனக்குத் தோன்றாமல் போயிற்றே!" என்று அவள் மகிழ, அதிசயப் பிராணி போல அவளைப் பார்த்துவிட்டுப் போனாள் மற்றவள்.

திறப்புவிழா, சுமனசி எதிர்பார்த்ததை விடவும் ஆனந்தமான அனுபவமாக இருந்தது.

உதயரூபன் பெரும்பாலும் தாயாருடனேயே இருந்தான்.

அதனால் சுமனசியாலும் அவனை அடிக்கடி நன்றாகப் பார்க்க முடிந்தது.

சங்க காலப் பாட்டில் வருமே, "நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழிந்தோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்று. அது போல, அந்தக் குடும்பத்துடனேயே இருந்ததால், பல்வேறு சலுகைகளோடு மரியாதையும் கிடைத்தது.

இசை உரக்க ஒலித்ததால், தயாகரி கூறும் எதையும் சரியாகக் கேளாமல் விட்டு விடுவோமோ என்று அவளுக்கு ஏற்பட்ட பயம், உடனேயே மறைந்தது. ஏனெனில் ஓங்கி ஒலித்த இசைக்கு மேலாகக் கத்தப் பிடிக்காமல், தயாகரி பெரும்பாலும் சைகையையே பயன்படுத்தப் பிரச்சினை ஏற்படவே இல்லை!

அங்கங்கே கடைகளுக்குள் அழைத்து, பொருட்களை எடுத்துக் காட்டினார்கள்.

மிகவும் மென்மையாகக் குழைந்த ஒரு துணியை சுமனசி தொட்டுப் பார்த்தபோது, "பிடித்திருந்தால் வாங்கிக் கொள். புதுக் கணக்குக்காகக் கொடுத்த செக்கில் எல்லாம் அடங்கிவிடும். தனித் தனியாக பில்லும் வராது." என்று அவளது காதோரத்தில் தணிந்து ஒலித்தது உதயராஜனின் குரல்!

சுமனசி துள்ளிக் குதிக்காத குறைதான்!

அவசரமாகக் கண்களைச் சுழற்றியவளுக்கு "அப்பாடா" என்று ஆறுதலாய் மூச்சு வந்தது.

“என்ன, அவ்வளவு பயம்? என் குரல் அப்படி மகா மோசமாகவா இருக்கிறது?”

“இஇல்லை. யாரேனும் ஏதேனும் . . .” என்று சொல்லும்போதே, அவனும் தாயோடு சேர்ந்து துணிகளைப் பார்ப்பது போலவே நின்று கொண்டிருப்பது புரிந்தது.

என்ன ஒன்று, அவனுடைய அன்னைக்கும் சுமனசிக்கும் இடையில் நின்றான். தாயாரும் மறுபுறம் திரும்பி, அந்தக் கடையின் உரிமையாளர் கூறிய விற்பனைப் பேச்சைக் கவனம் காட்டிக் கேட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ரூபன் அவளோடு பேசினான்.

என்னவோ, அவளுக்காகவே கெட்டிக்காரத்தனமாக உதயன் இந்தச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது போல அவளுள் உவகை ஊற்றெடுத்தது.

அவனது குரலில் கூடச் சிரிப்பு சிந்தியதே!

தன்னை மறந்து நின்றவளுக்குச் சட்டென நினைவு வந்தது. “வவந்து சார், நானே உங்களிடம் பேச வேண்டும் என்று . .அதாவது, இப்படி ஒரு நல்ல நிலைமையை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்ததற்கு நன்றி சொல்ல ஒரு வாய்ப்பைத் தேடிக் கொண்டே இருந்தேன். ரொம்ப தாதாங்க்ஸ் சார்.” என்று ஒருவாறு கூறி முடித்தாள்.

“ம்ஹூம்? என் அம்மா கூட எனக்கு நன்றிதான் சொன்னார்கள். அருமையான செயலாளரைத் தேடித் தந்திருக்கிறேனாம்! காதல் கல்யாணம் என்று கிளம்பி விடக் கூடாதே என்று கொஞ்சம் கவலையாக இருக்கிறதாம்! அப்படியெல்லாம் போய்விட மாட்டாயல்லவா? உறுதி கூறலாம் அல்லவா?”

மறுபடியும் சிரிக்கிறானா? அல்லது அவனது குரலே அப்படித்தானோ?

ஊஹூம், இல்லை. வேறு மாதிரியும் அவள் கேட்டிருக்கிறாள். இன்றைக்கு அவனும் சந்தோஷமாக இருக்கிறான்! அதனால்தான் குரலில் இந்தத் துள்ளல்!

தொற்றாய் அவனது மகிழ்ச்சி அவளையும் பற்றிக்கொள்ள, புன்னகையோடு அவனுக்கு ஒப்புதலாகத் தலையசைத்தாள் அவள்.

தயாகரி திரும்பி, “உதிம்மா, இந்தத் துணியில் பிரிண்ட் போட முடியுமாம். “தயா”வில் பணி புரியும் ஐந்து பெண்களுக்கும் ஐந்து நிறங்களில் வாங்கிக் கொள்கிறேன். பில் போடச் சொல்லிவிடு.” என்று கூறவும், தாயின் புறம் தலை சரித்துக் கவனத்துடன் கேட்டு , அதன்படியே ஏற்பாடு செய்தான் மகன்.

அங்கிருந்த அவ்வளவு நேரமும் மகன் தாயை விட்டு நகரவே

இல்லை.

பெற்றோருக்கு, மற்றவர்களுக்கு என்று ஏதேதோ வாங்கினான். எல்லாவற்றையும் தாயின் ஆலோசனை கேட்டே தேர்வு செய்ததால், அவன் தயாகரியை விட்டு விலகிச் செல்லவே இல்லை எனலாம்.

அந்த வகையில் சுமனசிக்கும் அவனைப் பக்கத்தில் நின்று சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டே இருக்க முடிந்தது.

சந்தோஷமாகத்தான்! அதை மறுப்பதற்கில்லை!

உதயரூபன் நடிகன் என்பதற்காகவோ அவனது புகழுக்காகவோ அல்ல. ஆனால் விவரித்துச் சொல்ல முடியாத விதமாக அவளது மனம் மகிழ்ந்து பூரித்தது நிஜம்!

அன்று வரை அவள் அனுபவித்தறியாத ஆனந்தம்!

இந்த ஆனந்தத்தினால் விளைந்த பூரிப்பு வெகு காலம் சுமனசியின் உள்ளத்தில் வாடாதிருந்தது!

பல நாட்கள் அவளுக்கு அதே நினைவாகவும் இருந்தது.

முதலில் எண்ணி எண்ணி மகிழ்ந்தவள் பின்னர் அன்றையத் தினம் பற்றி  யோசிக்கவும் செய்தாள்.

நினைத்ததைச் சாதித்துவிட்ட மாதிரி, உதயரூபனின் குரலில் ஏன் அந்தத் துள்ளல்? அப்படி அவன் என்ன சாதித்தான்?

அவனது தொழிலாலும் அதில் அவன் பெற்ற புகழாலும், நினைத்த நேரம், நினைத்த இடத்துக்குப் போய்வருவது அவனால் இயலாது. உண்மையே.

பெற்ற தாயின் அலுவலகத்துக்குக் கூட அவனால் இயல்பாக வரப் போக முடியாது. எங்கேயோ காரை நிறுத்தி, தொப்பி போட்டு முகம் மறைத்து . . . இதனாலேயே அவனது வருகையே நின்று போயிற்று என்று மீனாட்சி சொல்லியிருக்கிறாள்.

ஆனால் “மால்” திறப்புவிழா வேறு மாதிரி. அங்கிருந்த அவ்வளவு நேரமும் ஒரு பாதுகாப்பு வளையம் அவனுக்கு இருந்தது. அவனோடு சேர்த்து அவன் கூட வந்தவர்களுக்கும்! அதைத் தாண்டி வந்து யாரும் அவனைத் தொல்லைப்படுத்தவில்லை.

இன்னும் பல முன்னணி நடிகர்கள் வந்ததும் அதற்குக் காரணமாக இருக்கலாம். இவன் பலரில் ஒருவன் எனும்போது ஒரே இடத்தில் கவனக் குவிப்பு இராதல்லவா?

இயல்பாகச் சுற்ற முடிந்ததையே உதயன் சாதனையாக எண்ணியிருக்கலாம்.

அல்லது . . . அதற்கு மேல் யோசிக்க சுமனசிக்குத் தைரியம்

வரவில்லை.

கண்ட கனவுகளுக்கும் மனதில் இடம் கொடுப்பானேன்? பிறகு அது நடக்கவில்லையே என்று வருத்தப்படுவானேன்? அதைவிட, இன்றைய வாழ்வை நல்லபடியாக வாழ்ந்தால் வருங்காலத்தைக் கடவுள் பார்த்துக் கொள்வார்!

குரங்கு மனம் எங்கெங்கோ ஓட முயன்றாலும், அதை வேலையின் மூலம் சுமனசியால் கட்டுப்படுத்த முடிந்தது. அவளது வேலையும் அப்படிப் பட்டதுதானே?

துன்புற்றோர் துயர் துடைப்பதில் தயாகரிக்கு உதவி செய்வது! அந்தப் பணியில் ஈடுபடும்போது சொந்தக் கலக்கங்கள் பின்னே தள்ளப்பட்டன.

திறப்பு விழாவில் வாங்கப்பட்ட சேலைகள் கண்ணைக் கவரும் கலங்காரி பிரின்டோடு எல்லோருக்கும் வழங்கப்பட்டன. ஆண்களுக்கும் உரிய துணிகள்.

ஒவ்வொருவக்கும் கொடுக்கப்பட்ட துணிமணிகள் அவரவருக்கு மிகவும் பிடித்துப் போயின. ஏதாவது காரணத்தால் மாற்றிக் கொள்ளும் உரிமை தந்திருந்தபோதும், யாரும் அது பற்றி யோசிப்பதாகவே தெரியவில்லை.

அது குறித்து சுமனசி ஆச்சரியமாகக் கூறியபோது, “அதுதான் நம் மேடத்தின் சிறப்பு!” என்றான் மணி.

“ஆமாம் சுமனசி. அதிலும் “நொண நொண”வென்று மேடம் நோன்ட மாட்டார்கள். ஆனால் எப்படியோ ஒரு பார்வை, ஒரு பேச்சில் நம்மைப் புரிந்து கொள்வார்கள். நல்லதைப் பாராட்டுவார்கள். அல்லாததைத் தனியே கூப்பிட்டுச் சொல்வார்கள். இப்போது இங்கே பணிபுரியும் அனைவரும் மேடத்தின் உண்மை விசுவாசிகள். அதனால்தான் . . “ என்ற மீனாட்சி சட்டென மௌனமானாள்.

அவள் சொல்ல வந்தது எல்லோருக்குமே புரிந்தது போல அங்கே ஓர் அசாதாரண அமைதி நிலவியது. ஓரிரு கணங்களின்பின், அதைக் கலைக்க விரும்பியது போல, பலரும் சேர்ந்து பேசத் தொடங்கி, உடனேயே ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நிறுத்த எல்லோருக்குமே சிரிப்பு வந்துவிட்டது.

அவர்களுள் வயதில் மூத்த திருஞானம் கை உயர்த்தி, “நம் மேடத்தின் குணத்துக்குக் கடவுள் நல்லதே செய்வார். இனி வேலையைப் பார்ப்போம் வாருங்கள்.” என்று அழைக்கத் துணிப் பாக்கெட்டுகளை எடுத்துக்கொண்டு, அனைவரும் கலைந்து சென்றனர்.

தன் இடத்திற்குப் போய் அமர்ந்த சுமனசி யோசித்தாள்.

எல்லோரும் நினைத்தது ரதிமாலாவைத்தான்.

அத்தை அத்தை என்று அவள் தயாகரியை வளைக்க முயற்சிப்பதை அறியாதவர் இல்லை. என்னதான் ரதிமாலா அழகாக இருந்தாலும், உதயனோடு ஜோடி சேர்ந்து நடித்தாலும், வசதியும் படைத்திருந்தாலும், தயாகரியுடைய இந்த உண்மை விசுவாசிகளுக்கு, அவளைப் பிடிக்கவில்லை என்பது தெளிவு.

நடை உடை பாவனை, பேச்சு எதிலுமே அமைதியோ அடக்கமோ இல்லாத அவளை யாருக்கு எப்படிப் பிடிக்கும்?

எல்லா வகையிலும் உயர்ந்த தயாகரி மேடத்துக்கு, அந்த ரதிமாலா மருமகளாவதா? கொஞ்சமும் ஒத்தே வராது! அப்படி நடக்கவே கூடாது!

எதையோ நினைத்தால் உடனே வந்து நிற்குமாமே!

அதே போல, அவசியமற்று சுமனசி ரதிமாலாவை நினைக்க, அவளும் சுமனசியின் முன்னே வந்ததோடு, உதாசீனமாக அவளைச் சொடக்குப் போட்டுக் கூப்பிட்டாள்.

வேறு மாதிரி யோசித்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, ரதிமாலாவின் வரவை சுமனசி உடனடியாகக் கண்டுகொள்ளவில்லை. அதாவது, ஹாலுக்குள் வரும்போதே கவனித்து வரவேற்கவில்லை.

ஆனால், மற்றவள் அருகில் வரும்போதே சுமனசி உணர்ந்துவிட்டபோதும், அவள் வரவேற்பாய் நோக்கி எழுமுன் பொறுமையற்று “ஏய். .” என்று சொடக்குப் போட்டுக் கூப்பிட்டாள் வந்தவள்.

“என்ன? இங்கே வேலை பார்க்க வந்தாயா? அல்லது, ராத்திரி எவனோடாவது “டேட்டிங்” போய்விட்டுத் தூங்க வந்தாயா?”

திக்கென்றது சுமனசிக்கு. அவளைப் பார்த்து ஒருத்தி என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்!

இரவெல்லாம் டேட்டிங் போய் . . . சீச்சீ! இது போல எப்படி நினைக்க முடியும் என்று உள்ளம் பதறும்போதே அவளுக்கு ஒன்று நினைவு வந்தது.

. . .இவளுக்கு வேறு என்ன தோன்றும்? நள்ளிரவில் அயலான் அறைக்குள் அழையா விருந்தாளியாகச் சென்று அங்கேயே தங்கிவிடப் போவதாக வெட்கமின்றிக் கூறியவள்தானே!

கண்கள் மனதைக் காட்டினவோ?

“என்னடி பார்வை?” என்றபடிக் கையை ஓங்கிவிட்டாள் வந்தவள்.

மற்றவர்களைக் காட்டிலும் சற்று உயர்ந்த பதவி என்றாலும் அதற்காக எந்த விதப் பந்தாவும் காட்டாமல் இயல்பாகப் பழகிவந்த சுமனசியைப் பொதுவாக எல்லோருக்குமே பிடித்திருந்தது. எனவே தரம்கெட்ட வார்த்தைகளைப் பயன் படுத்தியதோடு ரதிமாலா கையையும் ஓங்கவே அனைவருமே திகைத்துபோயினர். ஓரிருவர் “மேடம்!” என்று எழுந்தும் விட்டனர்.

அளவு மீறிவிட்டோமோ என்று ரதிமாலாவுக்குமே எண்ணம்தான். ஆனால் ஓங்கிய கையை எப்படிக் கீழே போடுவது?

ஆனால் அவள் திகைத்தது ஒரு கணமே.

அந்த வினாடிக்குள் சுமனசியின் கை உயர்ந்து, ரதிமாலாவின் ஓங்கிய கை இறங்காமல் தடுத்து நிறுத்திவிட்டது.

அலுவலகம் ஆறுதல் பெருமூச்சு விட, வேகம் இழந்து தொய்ந்த தன் கரத்தைப் பார்த்து ரதிமாலா இன்னமும் திகைத்துப் போனாள்.

இந்த இடத்தில் அவளுக்கு இரண்டாவது தோல்வி!

அப்படி ஒன்றும் அவள் தோல்வியை ஏற்று ஓடிவிடப் போவதில்லை., எப்படியும் ஒரு நாள் இந்த இடத்துக்கே எஜமானியாக வந்து இங்கிருக்கம் அனைவர் கண்ணிலும் விரலை விட்டு ஆட்டப் போவது நிச்சயம் என்றாலும், இந்தப் பெண்ணை மட்டும் பார்த்தாலே அடித்து நொறுக்க வேண்டும் போல ஏன் தோன்றுகிறது என்று அவளுக்கே குழப்பம்தான்.

தயாகரியுடைய செயலாளர் என்ற போர்வையில் இங்கே உட்கார்ந்து கனவு காணும் இந்தப் பெண்ணிடம் தனக்கு ஆத்திரம் இருக்கிறது என்பது, ரதிமாலா அறிந்ததே!

முதல் நாளில் தயாகரியிடம் தனிமையில் அவள் நடத்த இருந்த நாடகத்தைக் கூடவே இருந்து கெடுத்தது இவள்தான். ஓர் ஏமாளித் தயாரிப்பாளர் செலவில் வெளிநாடு சென்று சுற்றிவிட்டு அவள் முன்தினம்தான் திரும்பி வந்திருந்தாள்.

வந்ததுமே, அவளது மீடியா விஷயங்களைக் கவனிக்கும் முராரி சிலபல பத்திரிகைகளைக் கொணர்ந்து அவள் முன் வைத்தான்.

திறப்புவிழாவில் தாயோடு சேர்ந்து உதயராஜ் கலந்து கொண்டதே அவளுக்கு எரிச்சலாக இருந்தது. கூடக் கூட, அவன் தாயோடு, கூடவே அந்தச் செயலாளர் பெண் சென்றதும், அவ்வப்போது தாய்க்கும் மகனுக்கும் நடுவிலேயே நின்றதும் . . . எக்காரணத்தைக் கொண்டும் ஏற்புடையது அல்ல.

அந்தப் படங்களைப் பார்க்கும்போதே, இதற்கான தண்டனையை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தே ஆக வேண்டும் என்று ரதிமாலா முடிவு செய்திருந்தாள்.

உதாசீனமான பேச்சு அந்த முடிவின் தொடக்கமே.

அத்தோடு இந்தப் பெண்ணும் தன்னை வெறுக்கிறாள் என்பதில் ரதிமாலாவுக்கு ஐயம் கிடையாது.

ஆனால் அதொன்றும் பெரிய அதிசயம் இல்லை. தன்னைப் போன்ற பேரழகியை எந்தப் பெண்ணுக்கும் பிடிக்காதுதானே? இவளைப் போல நாமும் இல்லையே என்ற ஏக்கம், பொறாமை வரத்தானே செய்யும்? அது வெறுப்பாக மாறுவதும் இயல்பே!

எத்தனையோ கண்களில் இந்த உணர்ச்சிகளைப் பார்க்கையில் ரதிமாலா எவ்வளவோ சந்தோஷப்பட்டிருக்கிறாள்!

ஆனால், இவள்  . . .இவளிடம் அந்த வெறுப்பு இல்லை! அவளது பேரழகில் பிரமிப்பும் இல்லை. அவளது பார்வையில் ஏதோ . . . ஏதோ அழுக்கைப் பார்ப்பது போலத் தோற்றம்! சீ என்பது போல!

அப்படிப் பார்ப்பதற்கு அவளுக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்?

சும்மாவே ஒரு முடிவோடு வந்தவள், சட்டெனக் கையை ஓங்கிவிட்டாள்.

ஆனால் கேவலமாகப் பார்ப்பது மட்டுமில்லாமல், அவள் கையைப் பிடித்து அந்தப் பெண் நிறுத்தியும் விட்டாளே!

.ஆத்திரத்துடன் கத்தத் தொடங்கிவிட்டாள் ரதிமாலா .

என்ன தைரியம் அந்த வேலைக்காரிக்கு? மகாராணி நிலைமையில் உள்ள ஒருத்தியிடம் பணிவோடு நடந்துகொள்ளாததோடு, கையை வேறு முரட்டுத்தனமாக வலிக்கப் பிடித்து இறக்கி விட்டிருக்கிறாள்! எவ்வளவு பெரிய அவமரியாதை!

ரதிமாலாவின் அந்தக் கையைத் தொட்டுப் பார்க்க எத்தனை பேர் தவம் கிடக்கிறார்கள் தெரியுமா?

மட்டு மரியாதை தெரியாத ஒரு முட்டாளைக் கட்டிக்கொண்டு தயாகரி மாரடித்துக் கொண்டிருக்கிறாள்.

“இதற்கெல்லாம் சீக்கிரமே முடிவு கட்டுகிறேன் பார்!” என்று ரதிமாலா முடிக்கும்வரை சுமனசி எதுவும் சொன்னாளில்லை.

முகத்தில் மாறுதலையும் காட்டினாளில்லை.

ஆனால் மற்றவள் பேசி முடித்து மூச்சு வாங்கும்வரை பேசாமல் பொறுத்திருந்தாள் அதன் பின்னரே, “மிஸ் ரதிமாலா. நீங்கள் எதைச்

சொல்வதானாலும், மேடம் வந்து அழைத்த பிறகு, அவர்களிடம் நேரில் சொல்லுங்கள். அதுவரை பார்வையாளர் அறையில் போய்க் காத்திருங்கள். அவர்கள் வந்த பிறகு . . . ஓ, இன்றைக்கும் நீங்கள் முன் அனுமதி பெறவில்லை அல்லவா? அவர்களிடம் அனுமதி கேட்டுத் தெரிவிக்கிறேன். மேடம் அனுமதித்தால், அப்புறமாய் அவர்களிடம் உங்கள் புகாரைத் தெரிவியுங்கள். மணி, இவர்களைப் பார்வையாளர் அறைக்குக் கூட்டிப் போய் உட்கார வை.” என்றதோடு திரும்பிச் சென்று, தன் இடத்தில் அமர்ந்தாள்.

உட்காரும்போதே உள்ளூர ஒரு பெருமிதம்!

இதை தயாகரி மேடம் பார்க்கவில்லையே!

கிட்டத்தட்ட மேடத்தைப் போன்ற கம்பீரத்துடன் நிலைமையைக் கையாண்டிருக்கிறாள்! இன்னமும் பேச மாட்டாமல் ரதிமாலா திகைத்து நிற்பதே அதற்கு சாட்சி!

“சூப்பர்” என்பது போல மீனாட்சி கை விரல்களால் சைகை செய்ய சுமனசிக்கு மேலும் மகிழ்ச்சி பெருகியது.

எதற்கும் சற்றுத் தள்ளியே நின்று “வாங்கம்மா.” என்று மணி அழைக்க அவனை எரித்து விடுகிறவள் போல ரதிமாலா பார்த்தாள்.

அவனையும் அடித்துப் பார்க்க அவளுக்கு ஆசைதான். ஆனால், இங்கே ஒரு ராட்சசி வழி காட்டி வைத்திருக்கிறாளே!

இந்தத் தாழ் நிலைப் பணியாளும், அந்த ராட்சசி செய்தது போல ரதிமாலாவின் அழகான கையைப் பிடித்து நிறுத்திவிட்டால், பெரும் கேவலமாகிப் போகுமே!

“இதற்கெல்லாம் நீ நிறையப் படப்போகிறாய் தெரியுமா? வேலை போய், வருமானமின்றி நடுத்தெருவில் . . .” என்று அவள் மிரட்டும்போதே சுமனசிக்கு அழைப்பு வந்தது.

“அந்த நடிகையோடு நீயும் உள்ளே வா!”

# அத்தியாயம் - 9

தயாகரி அழைக்கும் விஷயம் தெரிந்ததும் ரதிமாலா முன் போலவே, சுமனசியைக் கழற்றிவிடப் பெரிதும் முயற்சித்தாள்.

முயற்சிக்குப் பலனில்லை என்று ஆனதும், “இதோ பார், நாங்கள் பேசப் போவது சற்று அந்தரங்கமான விஷயம். கூட வந்தால் உனக்கே ஒரு மாதிரியாகிவிடும்.” என்று சொல்லிப் பார்த்தாள்.

மொட்டையாக, “மேடம் என்னையும் வரச் சொல்லியிருக்கிறார்கள்.” என்றதோடு முன்னே போய்க் கதவுக் குமிழில் கையை வைத்தாள் சுமனசி.

அவளிடம் தன் கோபம் செல்லுபடியாகாது என்று உணர்ந்த ரதிமாலா, தன் ஆத்திரத்தை வேறு விதமாகக் காட்டினாள். “சே, குறிப்பாகச் சொன்னால் புரிந்துகொள்ளாத மர மண்டை! “ என்று மிகத் தெளிவாகவே முணுமுணுத்தாள்.

அவள் கூறியது காதிலேயே விழாததுபோல சுமனசி அவளைத் தயாகரியின் அறையினுள் அழைத்துச் சென்றாள்.

உள்ளே சென்றதுமே ரதிமாலா தொடங்கிவிட்டாள். “அத்தை, நீங்கள் என்ன மாதிரி வேலைக்காரிகளோடு மாரடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள். உங்களுக்கு ஏற்ற அருமையான செகரட்டரி ஒருத்தியை நான் அனுப்புகிறேன். கஷ்டப்பட்ட குடும்பம். வெறுமனே சாப்பாட்டுக்குக் கொடுத்தால் போதும்! சலாம் போட்டுக்கொண்டு வேலை செய்வாள். இந்தத் திமிர்ப் பிடித்தவளை முதலில் வெளியே விரட்டுங்கள்! “

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுவிட்டு, “ஓ, இதைச் சொல்வதற்காகத்தான் வந்தாயா? சொல்லிவிட்டாய் அல்லவா? எனக்கு வேறு ஆள் தேவை ஏற்படும்போது உனக்குத் தெரிவிக்கிறேன். இப்போது நேரத்தை வீணாக்காமல் கிளம்பு.” என்ற பெரியவள் சுமனசியின் பக்கம் திரும்பி, “அந்தப் பாலவாக்கம் விடுதிக்கு . . “ என்று வேலையைத் தொடங்கினாள்.

பாவனைதான். ஏனெனில் பாலவாக்கம் விடுதி பற்றிய பணி முன்தினமே முடிந்துவிட்டது. ரதிமாலாவுக்குத் தெரியாமல் தயாகரி தன்னோடு ரகசியம் பரிமாறிக் கொள்வது சுமனசிக்கு உள்ளூரக் குதூகலமாக இருந்தது.

வேறு மாதிரி மனிதர் என்றால் தயாகரியின் குறிப்பை ஏற்று, விடை பெற்றுக் கிளம்பி இருப்பார்கள். ஆனால், ரதிமாலா சற்றுக் கடினமான பொருளால் செய்யப் பட்டவள் ஆயிற்றே!

எனவே, "ஐயையோ! நான் இன்னும் தொடங்கவே இல்லையே! அத்தை, இது ரொம்ப ரகசியமான . . .நமக்குள், நம் இருவருக்குள் மட்டுமாக இருக்க வேண்டிய விஷயம். இவளைப் போலச் சம்பளத்துக்கு வந்து, வேலை செய்வது போல நடிப்பவர்கள் காதில் விழவே கூடாது. முதலில் இவளை வெளியே அனுப்பிவிட்டால் . . .நாம் வெளிப்படையாகப் பேச வசதியாக இருக்கும்." என்று சுமனசியை வெளியே அனுப்புவதிலேயே அவள் குறியாக இருந்தாள்.

ஆனால், வந்தவளுக்கு நூலளவு இடமும் கொடுக்கக் கூடாது என்பதில் அனுபவத்திலும் வயதிலும் பெரியவளான தயாகரியும் உறுதியுடனேயே இருந்தாள்.

இடமும் தயாகரியுடையது.

எனவே, "இதோ பார் ரதிமாலா, திரைப்படங்களில் நடித்து, நடித்து, அதற்கான கதை கேட்டுக் கேட்டு, உனக்கு உலகமே படம் எடுக்கும் ஸ்டூடியோவாகவே தெரிகிறது என்று நினைக்கிறேன். செய்யும் தொழில் தெய்வம்தான். ஆனால் இயல்பு வாழ்க்கையை மறந்துவிடக் கூடாது. உன்னைப் போலவே எனக்கும் நிறைய்ய வேலைகள் இருக்கின்றன. தனியே மேடை தயார் பண்ணி யாருடனும் பேச எனக்கு அவகாசம் கிடையாது. ஏதேனும் சொல்ல வேண்டுமானால், சும்மா நேரடியாகப் பேசு. அல்லது கிளம்பும்மா. இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் . . .ம், இன்னுமொன்று. இப்படி நினைத்த நேரத்தில் வந்தால் என் திட்டமிட்ட வேலைகள் கெட்டுப் போய் விடுகின்றன. அதனால், இனிமேல் என்னைச் சந்திக்க வருவதானால் முன்னராகப் பதிவு பண்ணிவிட்டு வா. இப்போது வந்த விஷயத்தைச் சொல்லுகிறாயா? இயலாது என்றால் போய்விட்டு இன்னொரு தரம் வந்து சொல்லு. சுமனசி, நீ எதற்கும் ஃபைலைத் தயாராக வைத்துக்கொள். ரதிமாலா கிளம்பியதுமே வேலையைத் தொடங்க வேண்டும்!" என்று பெரியவள் ஓர் அமர்த்தலோடு கூறவும், மற்றவள் சற்றுக் குழம்பிப் போனாள்.

மொத்தத்தில், இந்த வேலைக்காரி இல்லாமல் தன்னோடு பேச மாட்டேன் என்கிறாள், கிழவி!

ஏன்? அவளையும் அடித்து விடுவேனோ என்று பயப்படுகிறாளா?

கட்டுப்பாடற்றுக் கை நீட்டிவிட்ட சில சந்தர்ப்பங்களை நினைத்து ரதிமாலா முதல் முறையாக அப்போது வருந்தினாள்.

கூடவே வந்துவிட்டதால், இந்தப் பெண் தயாகரியிடம் சொல்ல வாய்ப்பில்லை.

ஆனால் அவளது ஓங்கிய கையைத் தடுத்து நிறுத்தி

இருக்கிறாள். அந்தக் கணக்கு பாக்கி இருக்கிறது. என்றாலும் அதை அபப்புறம்தான் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் கிழவி தன்னை வைத்துக்கொண்டே வேலையைத் தொடங்கி விடுவாள்!

அவளது எண்ணம் சரியே போல தயாகரி பணிப்பெண்ணைப் பார்த்து ஏதோ சொல்ல வாயைத் திறக்கவும், அவசரமாக ரதிமாலா பேசலானாள்.

“ஆனாலும் உங்கள் வயதுக்கு நீங்கள் ரொம்ப அவசரப்படுகிறீர்கள் அத்தை. நான் . .இதைச் சொல்வதற்கு எனக்கு எவ்வளவு கூ . .ச்சமாக இருக்கும் என்று நீங்கள் யோசிக்கவே காணோம். ” என்றாள் வெட்கப் படுவது போன்ற பாவனையுடன்.

“ஆனால் உன் வயதுக்கு நீ ரொம்பவும் மந்தம் ரதிமாலா. பார், இன்னமும் நீ விஷயத்தைத் தொடங்கவே காணோம்!” என்று அவளைப் போலவே பேசி முடித்தாள் பெரியவள்.

முகம் கடுத்ததை உடனே மாற்றிக்கொண்டு, “என்ன செய்வது, அத்தை? சொல்ல வேண்டிய விஷயம் அப்படிப்பட்டதாக இருக்கிறதே! அத்தோடு உங்கள் வயதும் அப்படி. நான் சொன்னால் கூட எங்கள் நிலைமை உங்களுக்குப் புரியுமோ, என்னவோ?” என்று வருந்திச் சொன்னாள் ரதிமாலா.

“விஷயம் உனக்குத்தான் புரியவில்லை, ரதிமாலா. உன் வயதைக் கடந்துதானே நான் இந்த வயதுக்கு வந்திருப்பேன்? இந்த வயது வரை உள்ள எந்த வயதுப் பிரச்சினை என்றாலும் எனக்கு எப்படிப் புரியாமல் போகும்?”

ஆணித்தரமான கேள்வி! இதை எப்படி மழுப்பிப் பேச முடியும்?

அழகாக உடலோடு உதட்டையும் நெளித்து, “கிண்டலா? ஆனால் நீங்கள் சொல்வதும் சரிதான். “பழைய நெனைப்புடா பேராண்டி” என்று பாட்டே இருக்கிறதே! அது போல நீங்களும் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன் அத்தை. அஅத்தை, வந்து . . உள்ளூரில் நீங்கள் இருக்கிறீர்கள். வெளியூரில், வெளி நாட்டில் எத்தனை படப்படிப்புகள். அழகான இயற்கைக் காட்சிகள். அங்கெல்லாம் தத்துவப் பாடல்களுக்கா படமேடுப்பார்கள்? “உள்ளத்தைக் கிளுகிளுக்க வைக்கும் காதல் பாட்டுகள். எத்தனை டேக்குகள்! ஓடிப் பிடித்து, உருண்டு புரண்டு . . .சொல்லவே வெட்கமாக இருக்கிறது. காய்ச்சல் வந்த மாதிரி, உடம்பே சூடேறிப் போகும். அப்புறம் ஒரே ஹோட்டலில் ரூம் வேறு! எங்களுக்கு எப்படி இருக்கும், சொல்லுங்கள்?” என்று கொஞ்சலாகக் கிளி மொழியில் பேசினாள் ரதிமாலா.

ஆனால் தயாகரி பற்றி அவள் அறிந்திருக்கவில்லை. “எந்தத்

தொழில் ஆனாலும் அலுவல் இடத்திலேயே அதை விட்டுவிடுவது நல்லது ரதிமாலா. இப்போது கூட ஏதோ வெளிநாட்டுப் படப்பிடிப்புக்குப் போய் வந்ததாகச் சொன்னாயில்லை? அதில் யார் கதாநாயகன்?" என்று இயல்பான குரலில் சாதாரணமாகக் கேட்டாள்.

ரதிமாலாவின் முகம் அவளது ஒப்பனைக்கு அடியிலும் கன்றிக் கறுத்துவிட்டது.

இதற்கு அவளால் என்ன பதில் சொல்ல முடியும்? பெரிதாக அஸ்திவாரம் போட்டு, அசைக்க முடியாத கட்டிடத்தை எழுப்ப அவள் முயன்றால், ஒரே கேள்வியில் எல்லாவற்றையும் தரை மட்டம் ஆக்கி விட்டாளே!

கிராதகி! தலை முடியைப் பிடித்து ஆட்ட வேண்டும்! என்று என்னென்னவோ நினைத்தபோதும், அந்த வினாடியில் ரதிமாலாவினால் ஒன்றுமே பேச முடியவில்லை!

அவள் தொடங்கிய விதம்தான் உண்மை என்றால், அந்த இன்னொரு ஹீரோவோடும் அவள் அப்படிப் பழகியதாக ஒத்துக் கொண்டாக வேண்டும். அப்புறம் உதயராஜனின் மேல் தனியாக எப்படி உரிமை கொண்டாட முடியும்?

உரிமை காட்டுவது ஒரு புறம் இருக்கட்டும். இப்போது ரதிமாலாவின் நடத்தையே கேவலம் போல ஆகிவிட்டதே!

பாவி! பாதகி! எப்படி மடக்கிவிட்டாள்!

மேடம் எப்படி மடக்கிவிட்டார்கள் என்று உள்ளூர பேரலையாய் எழுந்த பெருமிதத்தை வெளிக் காட்டாமல் அடக்குவது சுமனசிக்குச் சிரமமாக இருக்கவே, மேடம் சொன்ன ஃபைலை எடுப்பது போல அலமாரியைத் திறந்து அந்தப் புறமாகத் திரும்பிக் கொண்டாள்.

இதுவும் ரதிமாலாவின் கொதிப்பை இன்னமும் கூட்டியது.

என்னவோ பேச்சு வார்த்தை முடிந்தது , நிற்க மாட்டாமல் ரதிமாலா ஓடிவிடுவாள் என்பது போல இந்தக் கூலிக்கு மாரடிக்கிற சிறுக்கி அலமாரியில் ஃபைலை எடுக்கவே போய்விட்டாளே! இவர்களை என்ன செய்தால் தகும்?

எரிகிற தீயில் மேலும் எண்ணையை ஊற்றுகிறவளாகி தயாகரி தொடர்ந்து பேசினாள். "நீ சொன்னாயே, ரீடேக் பற்றி! அது போல நிறையத் தரம் படம் எடுக்க நேர்ந்தால் உடம்பு ரொம்பக் களைத்து சோர்ந்து போகுமாமே! பல் துலக்கக் கூட இயலாதது போல அசதியாக இருக்கும் என்று உதயன் சொல்லுவான். ஆனால் அப்படியே படுத்தால் சரியாகத் தூக்கம் வராது. சூடான வென்னீரில் நன்றாகக் குளித்துவிட்டுப் படுத்தால் அடித்துப் போட்ட மாதிரித்

தூக்கம் வருமாம். மறுநாள் வேலை செய்ய உற்சாகமாகவும் இருக்குமாம். நீயும் அது போலச் செய்துபார் ரதிமாலா. அலுப்பு, களைப்பு, இன்னும் மற்ற எதுவும் கிட்டே கூட வராது. ரைட். இனிமேல் கிளம்புகிறாயா? இன்னொரு தரம் பேசுவோம். இப்போதே என் வேலை நேரம் நிறைய வீணாகிவிட்டது.

“சுமனசி, மணியை அழைத்துக்கொண்டு கூடப் போய் ரதிமாலாவைக் காரில் ஏற்றி அனுப்பிவிட்டு வா. ஏதேனும் கூட்டம் சேர்ந்தாலும் பாதுகாப்பு விஷயத்தில் மணி உதவியாக இருப்பான். ரதிமாலா, நேரத்தை வீணாக்காமல் நீ கிளம்பும்மா!” என்றவள் முன்னே இருந்த லாப்டாப்பில் கவனத்தைச் செலுத்தலானாள்.

அவள் மனதில் என்ன யோசனை ஓடியதோ, வெட்டுவது போல ஒரு பார்வை பார்த்ததோடு, ரதிமாலாவும் அதற்குமேல் அங்கே தாமதிக்கவில்லை.

போய்வருவதாக விடை பெறக்கூட இல்லாமல் சட்டெனத் திரும்பி அறை வாயிலை நோக்கி நடந்தாள்.

கதவைத் திறந்து வைத்துக் காத்திருப்பது மாறி, ரதிமாலாவின் பின்னே சுமனசி ஓட வேண்டியதாகிவிட்டது.

வழக்கமான முணுமுணுப்புடனேதான்சென்றாள்.

இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காதில் விழுந்த வார்த்தைகளே சுமனசிக்கு ஓரளவு கலக்கம் அளிப்பனவாக இருந்தன.

கடைசியாகக் காரில் ஏறுமுன், “தயா டவர்”சை வெறித்துப் பார்த்து, “அறிவு கெட்ட முண்டம்! இவளிடம் நான் பேச எண்ணியதே மடத்தனம்! இதுங்களுக்கெல்லாம் நல்ல வார்த்தையில் சொன்னால் எதுவும் புரியாது. பத்து சென்டிமீட்டர் ஆணியை உச்சந் தலையில் ஓங்கி அறைந்தால்தான் கொஞ்சமாவது அந்த மண்டையில் உறைக்கும்! அறைகிறேன்!” என்று ரதிமாலா சொன்ன வார்த்தைகளும், சொன்ன விதமும் மற்றவளின் உள்ளே ஏனோ பீதியைக் கிளப்பின.

காரோட்டி திறந்து வைத்த காரில் ஏறிய பிறகும் ரதிமாலா கத்திக்கொண்டே இருந்தாள்.

சுமனசியையும் அவள் சும்மா விட்டு விடவில்லை.

“உன் மேடத்திடம் உனக்கு ரொம்பவும் பக்தி, பரவசம் இல்லையா? எல்லாப் பெண்களையும் போல, அவள் மகனிடம் மயக்கம் கூட இருக்கும். “மாலி”ல் சேர்ந்து சுற்றிய படங்களில்தான் பார்த்தேனே! அத்தனை பேர் பார்க்க உன்னைக் கூட்டிப் போனார்கள் என்று உச்சி குளிர்ந்து போனாய் போல! ஆனால், இரண்டு பேரும் எப்படி நாறப் போகிறார்கள் என்று சீக்கிரமே

காட்டுகிறேன்! ரதிமாலா மரியாதையோடு குறிப்புக் காட்டிப் பேசியபோதே ஒத்துக் கொண்டோம் இல்லையே என்று அந்தம்மாளைக் கதறி அழ வைக்கிறேன். அம்மா மகன் இரண்டு பேரையும் என் காலில் விழ வைக்கிறேன். என்னை யார் என்று எண்ணினார்கள் . . .”

அவ்வப்போது இது போன்ற சம்பவங்கள் பழக்கம்தானோ, என்னவோ?

கார்க் கதவைத் திறந்து வைத்திருந்தபடி சற்று நேரம் காத்திருந்த காரோட்டி, கார்க்கதவை மெல்ல மூடிவிட்டுப் போய்க் காரை எடுத்து ஓட்டிச் சென்றுவிட்டார்.

நல்லவேளையாக இந்த ரசாபாசத்தைக் காண, ரதிமாலாவின் விசிறிகள் யாரும் அங்கே வந்து நின்றிருக்கவில்லை.

கார் கண்ணுக்கு மறைந்ததும், மணியும் அவளும் ஒரு பெருமூச்சுடன் அலுவலகத்துக்குத் திரும்பிச் சென்றனர்.

இது போன்ற மிரட்டல்களைத் தயாகரி பொருட்படுத்துவது இல்லை என்று சுமனசிக்கு நன்றாகவே தெரியும். என்றாலும், ரதிமாலா சொன்ன வார்த்தைகளும், அவற்றைச் அவள் சொன்ன விதமும் சின்னவளை ரொம்பவே மருட்டிவிட்டன.

எனவே, அவை பற்றிக் கவலையோடு தயாகரியிடம் எடுத்துச் சொன்னாள்.

இவள் எதிர்பார்த்தது போலவே, ஓர் “உச்!”க்கு மேல் தயாகரி ரதிமாலாவின் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை.

“இல்லை மேடம், அவர்கள் ஏதோ உறுதி போல . . . நிச்சயம் நடக்கும் என்பது போலப் பேசினார்கள்!” என்றாள் அவள் மறுபடியும்.

“விடு சுமனசி!” என்றாள் பெரியவள்.

சுமனசியின் கலங்கியிருந்த முகத்தைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்து பேசினாள்.

“அவள் என்னென்ன உளறிக் கொட்டினாலும் அது பற்றி எனக்கு அக்கறை இல்லை, சுமனசி. ஆனாலும் நீ பயப்படுகிறாயே என்பதால் சொல்லுகிறேன்.

“ரதிமாலாவுக்கு இப்போது ஒரு மாதிரியான நிலைமை. முன் போல அவளைத் தேடிப் படம் எடுப்பவர்கள் இல்லை. சும்மாச் சும்மா காட்டுக் கூச்சல் போட்டுப் பலரை அவளே விரட்டிவிட்டாள். பெற்றவர்களையும் அப்படித்தான்! இப்போது, அவளே பணம் போட்டுப் படம் எடுப்பதாகக் கேள்வி. சமீபத்தில் பாலித் தீவுகளுக்குப் படப்பிடிப்பு என்று போனாளே, அதுவும் அப்படித்தானாம். ஹீரோ

கூடப் பெரிய ஆள் அல்ல. சென்ற ஆண்டு உதியோடு நடித்ததற்குப் பிறகு, அவளுக்கு வெற்றிப் படமே கிடையாது.

“இந்த நிலையில் உதி இன்னும் பிரபலமாகவே இருப்பதால் அவனை எப்படியாவது பிடித்துப் போட்டுவிட்டால் பணப் பிரச்சினையை விரட்டி விடலாம் என்று இந்தத் திட்டமிடுகிறாள் என்பது என் ஊகம். அதற்காக முழு மூச்சுடன் வேலை செய்கிறாள்.

“ஆனால் நீ யோசித்துப் பார். உதயன் பச்சைக் குழந்தை இல்லை. வளர்ந்த ஆண்மகன். அவனைக் கையைக் காலைக்கட்டித் தாலி கட்ட வைக்க முடியாது.

“இந்தப் பெண்ணைப் பற்றியும் அவனுக்கும் நன்றாகத் தெரியும். அதனால் இவள் வலையில் அவன் ஒருபோதும் சிக்க மாட்டான்.

“எல்லாவற்றுக்கும் மேலாக, உதி எனக்குச் சத்தியம் செய்து தந்திருக்கிறான், சுமனசி! அந்தச் சத்தியத்தை அவன் ஒரு போதும் மீறமாட்டான் என்பது எனக்கு

நிச்சயம் .

“அதனால் இந்த வீண் கவலையை விட்டுவிட்டு வேலையைப் பார். சும்மாவே அந்த ரதிமாலாவினால் ஏகப்பட்ட பணி நேரம் பாழாகிவிட்டது. இதற்கு மேல் ஒரு நிமிஷ நேரம் வீணானால் கூட எனக்குப் பொல்லாத கோபம் வரும். சொல்லிவிட்டேன்!” என்று தயாகரி மிரட்டுவது போலக் கூற, சுமனசி ஆறுதலோடு புன்னகை செய்தாள்.

ஏனெனில் தயாகரி சொன்ன சத்திய விஷயம் அவளுக்கே நன்கு தெரியும்.

எப்படித் தெரியும் என்று அந்தத் தாயிடம் வெளிப்படையாகக் கூற முடியாதுதான். என்றாலும், தயாகரி அது பற்றிக் கூறியதுமே சுமனசியின் மனம் பளிச்சென்று மலர்ந்துவிட்டது.

அவளது மலர்ச்சிக்கு இன்னொரு காரணமும் இருந்தது.

தயாகரியிடம் பணி புரியும் சாதாரணப் பெண் அவள். ஆனாலும் அவளது மனம் கலங்குகிறது என்று அறிந்ததும் அதைப் போக்க மகனுக்கும் தனக்கும் உள்ள சொந்த விஷயத்தையே மேடம் தெரிவித்திருக்கிறார்களே! என்ன மாதிரி நல்ல உள்ளம்!

இங்கே பணிபுரிய அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

சந்தோஷமாகத் தன் குறிக்கோளைப் பற்றி மேலே திட்டமிடலானாள் சுமனசி.

இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களே! அப்புறம் அக்காவைக் கூட்டி வந்துவிட வேண்டியதுதான். சுந்தரி அக்காவுக்கும்

ஏதாவது பயிற்சிக்கு ஏற்பாடு செய்து, அவளுக்கும் வேலை கிடைத்துவிட்டால், அதன்பின் இருவருக்குமே ராஜபோகம்தான்!

அவள் வந்தது போல ஒளிவு மறைவாக இல்லாமல், அக்காவை நேரிலேயே போய்க் கூட்டி வர வேண்டியதுதான்.

மேடத்திடம் சொன்னால், சுந்தரியைக் கூட்டிவர, அவர்களே ஏற்பாடு செய்வார்கள்.

வேலை கூடத் தரலாம். அப்புறம் . . .

எண்ணற்ற கனவுகளில் சந்தோஷமாக முக்குளித்தாள் சுமனசி!

மகிழ்ச்சியைக் கூட்டுவது போல, தயாகரியும் அங்கங்கே செல்லும்போது, இப்போது சுமனசியைக் கூடக் கூட்டிச் செல்லலானாள்.

அவர்களது ஆர்கானிக் பண்ணைக்குக் கூட ஒரு விடுமுறை நாளில் கூட்டிப் போய்க் காட்டினாள்.

மிகப் பெரிய பண்ணை. ஒரு சிறு கிராமம் போலப் பரந்து விரிந்திருந்தது.

சட்டப்படி ஒருவர் ஓர் அளவுக்கு மேல் நிலம் வைத்திருக்கக் கூடாது என்பார்களே என்ற கேள்வி சுமனசியின் மனதில் தோன்ற மறைக்கத் தோன்றாமல் கேட்டும்விட்டாள்.

கேட்டுவிட்டு அவள் நாக்கைக் கடித்துக் கொள்வதைப் பார்த்துப் பெரியவர்கள் இருவரும் முறுவலித்தனர்.

“பரவாயில்லை. உன் உதவியாளுக்கு இந்த விஷயமும் தெரிந்திருக்கிறது.” என்றார் உதயனுடைய தந்தை.

அது பற்றிய தயாகரியின் விளக்கம் தொடர்ந்தது. “நிறைய இடம் குத்தகைக் எடுத்தது, சுமனசி. இது போன்ற விவசாயத்துக்கு அரசு நிலமே பல ஆண்டு ஒப்பந்தம் மூலமாகக் கிடைக்கும். இப்போது ஆர்கானிக் பொருட்களுக்கு இருக்கும் வரவேற்பைப் பார்த்துவிட்டுப் புதிதாகக் கூட்டுப் பண்ணை முறையில் இதில் சேர்ந்து கொண்டவர்களும் உண்டு. அதனால்தான் இந்தப் பண்ணை பெரிதாகிக்கொண்டே போகிறது . . .. “ என்று உற்சாகமாகசட சொல்லிக் கொண்டே போனவள் யோசனையோடு மேலும் தொடர்ந்தாள்.

“உரம் பூச்சி மருந்து போன்றவற்றில் சார் ரொம்பக் கவனமாகவும் கண்டிப்பாகவும் இருப்பார். . .ரூபனுக்கும் விவசாயம்தான் மிகவும் பிடிக்கும். அவனுடைய தாத்தாவின் விருப்பப்படி அவன் படித்தது விவசாயக் கல்விதான். பிறகு நடிகன் ஆனது எப்படி என்று வியப்பாக இருக்கிறதா?

“அவனோடு கூடப் படித்த ஒரு பையன். இருவருக்கும் ரொம்ப சினேகம். அவன் ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் போய்ச் சேர்ந்தான். படித்துவிட்டு வந்தவனுக்கு உதயனை ஹீரோவாக நடிக்க வைக்க ஆசை. எங்களிடமும் வந்து காலில் விழுந்து கேட்டான்.

“சரி என்று வேண்டிய சில பயிற்சிகள் எடுத்துக்கொண்டு, அவனுக்காக நடிக்கத் தொடங்கியதுதான். முதல் படமே பெரிய வெற்றியாகிவிட்டது. இப்போது தொழில் இவனை விட மாட்டேன் என்கிறது. ஆனாலும் எப்போதேனும் ஓய்வு கிடைத்தால் வண்டியை எடுத்துக்கொண்டு இங்கேதான் வருவான். . . . .

“இதோ இந்தத் தென்னை மரம் பார். உதி நடக்கப் படித்தபோது, இந்த மரத்தின் அருகே வந்து, தரையோடு கிடக்கும் குலையிலிருந்து காய் பறித்து வருவான்!” என்று பழைய நினைவுகளில் மூழ்கினாள் பெற்றவள்.

கற்பனை பண்ணிப் பார்த்தால் தளர் நடை நடந்து வந்த உதயனுக்கு மீசை இருந்தது. தன்னை மீறிச் சிரித்துவிட்டு, “என்ன”வென்று கேட்டவர்களுக்கு விவரம் சொல்ல அவர்களும் சேர்ந்து நகைத்தார்கள்.

அருமையான மனிதர்கள். இவர்களுக்கு மகனாகப் பிறந்தவன் மட்டும் வேறு எப்படி இருப்பான்?

ஆனால் இந்த அபிப்பிராயத்தை விரைவிலேயே அவள் மாற்றிக் கொள்ளப் போகிறாள் என்று அவளுக்கு அப்போது தெரியாது.

இப்படிப்பட்ட இனிமையாக சூழ்நிலையில்தான், மின்னாமல் முழங்காமல் என்பார்களே! அதுபோல அவர்கள் அனைவரின் தலையிலும் இடி விழுந்தது!

திருமணம் செய்து கொள்வதாகப் பொய் வாக்குறுதி கொடுத்துத் தன்னை ஏமாற்றி விட்டதாக, உதயராஜனின் மேல் ரதிமாலா வழக்குத் தொடரப் போவதாக அறிவித்தாள்.

டீவி சேனல்கள், பத்திரிகைகளில் முக்கியச் செய்தியாக இதுவே காட்டப்பட்டது. உறுதியான ஆதாரத்தோடு வழக்குத் தொடரப்போவதாகவும் கூறப்பட்டது!

“தயா ஃபவுண்டேஷன்” இருளில் மூழ்கித் தவித்தது!

சுமனசியும் அப்படியே!

# அத்தியாயம் - 10

உதயராஜன் அப்போதைய முன்னணி நடிகர்களுள் ஒருவன். அவனைப் பற்றிக் கிசுகிசு வந்தாலே விழுந்து விழுந்து படிப்பார்கள்.

அவனோடு ஜோடியாக இரண்டு வெற்றிப் படங்களில் நடித்தவள் வழக்கே தொடர்ந்தால் விடுவார்களா?

மக்கள் தேடிப் பிடித்துப் படிக்க, அவர்களுக்காகப் பத்திரிகைகள் வரிந்து கட்டிக்கொண்டு எழுதின. டீவி சேனல்கள், திரைப்படக் காட்சிகளையும் பொது நிகழ்ச்சிகளிலும் எடுத்த வீடியோக்களையும் மாற்றி மாற்றி ஒளி பரப்பின.

மக்களை அபிப்பிராயம் கேட்டார்கள் , முடிவு பற்றிய ஊகங்கள் கேட்டார்கள். இதைப் பற்றியே பேசியும் எழுதியும் அவரவர் விற்பனையைப் பெருக்கிக் கொண்டார்கள்.

பெருமைக்குரிய விஷயம், உதயனைப் பெற்ற இருவருமே இதில் ஒரு வார்த்தையைக் கூட நம்புவதாக இல்லை.

அவர்களது ஆர்கானிக் கோட்டைக்குள் யாரும் புக இயலாது.

மகன் வாக்குக் கொடுத்திருக்கிறான். , அதை ஒருபோதும் மீற மாட்டான் என்று தயாகரிக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது.

ஆனால் மீடியாவிடம் அதை வெளிப்படையாகக் கூறவும் தயங்கினாள். ஏற்கனவே மகன் மீது சந்தேகப்பட்டுத்தான் சத்தியம் வாங்கினீர்களா என்று கேட்டால்? கட்டாயம் கேட்பார்கள். அவளுடைய அன்பு மகன் மேல் அனாவசியமாகக் கறை படியும்.

ஆனால் பேராசை பிடித்த ஒரு வெட்கம் கெட்ட பெண்ணின் செயலால் சாதாரணமாக வெளியே போய்வரக் கூட முடியாமல், தயாகரிக்கு மிகவும் எரிச்சலும் வெறுப்புமாகிப் போயிற்று.

மகன் என்ன செய்கிறான் என்று பார்த்தால், அவன் தோளைக் குலுக்கிவிட்டு, எதுவும் நடவாதது போலத் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இது தொடர்பான குறுக்கீடுகளால் சில படப்பிடிப்புகளே ரத்தான போதும், அந்தச் சமயங்களை அவன் வழக்கம்போலப் பண்ணையிலும் மற்ற விளையாட்டுப் பயிற்சிகளிலும் செலவிட்டானே தவிரப் பரபரப்பு போலக் காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு தரம் தாயாகவே இந்தப்பேச்சை எடுத்தபோது, "இருக்கட்டும் அம்மா. ஏதோ காரணமாகத்தானே அந்த ரதிமாலா இது போல ஒன்றைக் கிளப்பி விட்டிருக்கிறாள்!

எதற்கும் தயங்காத பெண் அவள். மானத்துக்கு அஞ்சி, அவள் இழுக்கிற இழுப்புக்குப் போய்விடுவோம் என்று எதிர்பார்க்கிறாளோ என்று எனக்கு சந்தேகம். இந்த ஒரு மிரட்டலுக்குப் பயந்து காலமெல்லாம்  பாதிக்கக் கூடிய முடிவை எடுக்க முடியுமா? “நண்டு கொழுத்தால் வளைக்குள் தங்காது” என்று ஒரு பழமொழி படித்தேன். வரட்டும். அந்த ரதிமாலாதானே தொடங்கியிருக்கிறாள்? அவளிடம் என்ன மாதிரிச் சான்று இருந்தாலும் அவளே வெளிக் கொண்டு வரட்டும். ஒன்றுமில்லாத வரட்டு மிரட்டல் என்றால், தானாகவே அடங்கிப் போகும். எதுவானாலும் தானாக வரட்டும். நாம் அக்கறை அவசரம் எதுவும் காட்ட வேண்டாம்.” என்றுவிட்டான் உதயரூபன்.

அவனது அமைதி எல்லோருக்குமே மெல்லப் பரவியது.

ஊரெங்கும் பரவியிருந்த இந்த பேச்சு மறைந்து விடாமல் இருப்பதற்காக, ஊதி விடுவது போலச் சில பெண்ணீய அமைப்புகளை ரதிமாலா தூண்டிவிட்டாள்.

அவர்கள் கூட்டம் சேர்த்து வந்து கத்திக் குரல் எழுப்பியது முக்கியச் செய்தியாக மீடியாவில் காட்டப்பட்டது.

உதயனிடமும் பதில் கேட்டார்கள்.

“எனக்கும் இதற்கும் தொடர்பே கிடையாது.

போலீஸ் தரப்பில் உள்ள, பெயர் சொல்ல விரும்பாத ஒரு நலம் விரும்பியிடம் இருந்து தனிப்பட்ட முறையில் உதயரூபனுக்கு ஒரு தகவல் வந்தது.

திருமணம் செய்து கொள்வதாக நம்ப வைத்து உறவு கொண்டபின் மணக்க மறுப்பது பெரிய குற்றம். கைது நடவடிக்கை கூட எடுக்க நேரிடலாம். அதனால் முன் ஜாமீன் வாங்கிக் கொள்வது நல்லது என்றது தகவல்.

இது என்னவோ அவ்வளவு  சரியாக உதயனுக்குத் தோன்றவில்லை.

முன் ஜாமீன் கேட்டால், இவன் தப்பு செய்ததால்தானே கைதுக்குப் பயந்து முன் ஜாமீன் வாங்குகிறான் என்று சொல்ல மாட்டார்களா?

தவறாக எதுவும் நடந்ததாக ஒத்துக்கொள்ளாத நிலையை இது நீர்த்துவிடச் செய்யாதா?

முன்னே போனால் கடித்தது. பின்னே சென்றால் உதைத்தது.

நண்பன் வினீதனோடு இதைப் பேசினான்.

“இப்படியெல்லாம் கேவலப்படுத்தினால் பிற்காலத்தில் மணமே புரிந்தால் கூட அந்த வாழ்வு இனிக்குமா? அவன் கொடுமைப் படுத்த

மாட்டானா என்று, அந்த மாதிரி மனதைப் பாதிக்கிற ரீதியில் ரதிமாலாவோடு பேசிப் பார்க்கட்டுமா?” என்று கேட்டான் அவன்.

“பயன்படாது.” என்று தலையசைத்தான் உதயன். “அந்தப் பயம் இருந்தால் இந்தக் கதையை மீடியாவுக்குக் கொண்டு போயிருக்கவே மாட்டாளே! அதை விட . .அவள் மனதைப் பாதிக்கும் விதமாகப் பேச வேண்டும். கைது அது இதென்று போனால் உதயனுக்குக் கறுப்புப் புள்ளி வைத்த மாதிரி ஆகிவிடும்., அப்புறம் படப்பிடிப்பு, சுற்றுப் பயணம் என்று வெளிநாட்டுக்குச் சேர்ந்து செல்ல முடியாது. . .என்று அந்த மாதிரி ரீல் விட்டுப் பார். இது அந்தப் பெண்ணைக் கொஞ்சம் யோசிக்க வைக்கும். “ என்றான்.

கண் மூடி யோசித்துவிட்டு, “சூப்பர் ஐடியா, உதி. ரதிமாலா உச்சத்தில் இருக்கிறபோது, வெளிநாட்டில் படப்பிடிப்பு இருக்கிறதா என்று கேட்டுத்தானே ஒப்பந்தத்தில் கையெழுத்தே போடுவாள்! அப்படி ஒரு வெளிநாட்டுப் பைத்தியம்! இப்போது கூடக் கைக்காசு செலவு செய்து வெளிநாட்டில் படப்பிடிப்பு நடத்தியதாகக் கேள்வி. ரதிமாலாவுக்கு வயது கொஞ்சம் குறைவாக . .குணமும் நன்றாக இருந்தால் அவளையே . . .” என்ற நண்பன் தோழனின் முகத்தைப் பார்த்துவிட்டு நிறுத்தினான்.

உறுத்து விழித்து “உன்னை நண்பன் என்று நினைத்தேன்!” என்றான் உதயன்.

“சரி . .சரீ, விடு! இந்தக் கண் . .இந்தப் பார்வைக்காகத்தானே . .வார்த்தைகளின் தேவையே இல்லாமல் கண்களாலேயே புரிய வைப்பதைப் பார்த்துதானே உன்னை நடிக்க வைக்க அவ்வளவு பாடு பட்டேன். ஆனால் இப்போது தப்புப் பண்ணிவிட்டதாக வருத்தமாக இருக்கிறது.”

“தேவையற்று வருத்தப்படாதே. இந்தத் தொழிலில் சம்பாதித்த பணம் எத்தனை நல்ல காரியங்களுக்குப் பயன்பட்டிருக்கிறது, தெரியுமா? அத்தோடு ஒன்றில்லாவிட்டால் ஒன்று! ஏதாவது பிரச்சினை இல்லாத தொழில் ஏது? போ. நான் சொன்ன முயற்சி செய்து பார். “ என்றான் உதயன்.

சுவரில் அடித்த பந்தாகத் திரும்பி வந்து, “அந்தக் கவலை இருந்தால், உதயனைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கச் சொல்லு. அது மட்டுமல்ல. தனியாகப் போனாலும் வெளிநாடு நன்றாகத்தான் இருக்கும். அதற்கு இவன் துணை தேவையில்லை என்று திமிராகச் சொன்னாள்.” என்றான் அந்த சினேகிதன்.

ஆனால், போலீஸ் புகார், கைது நடவடிக்கை என்று தினம் ஒரு மிரட்டல் விட்டுக் கொண்டிருந்த ரதிமாலா சற்று அமைதியாவது போலத் தோன்றியது.

வினீதன் ஃபோன் செய்து, “வாழ்த்துக்கள் நண்பா. தினம் தந்து கொண்டிருந்த தலைவலியை ரதிமாலா நிறுத்தி வைத்திருக்கிறாள் போலத் தெரிகிறது? உன் யோசனை பக்கா யோசனைமா! இனி நிம்மதியாக இரு.” என்றான் மகிழ்ச்சியோடு.

“அவசரப்படாதே. இரண்டு படங்களின் படப்பிடிப்பின்போதும் பார்த்திருக்கிறேன். ஒன்றை நினைத்துவிட்டால், ரதிமாலா அதை லேசில் விடுகிறவள் அல்ல. கொஞ்ச காலம் பொறுத்திருந்து பார்ப்போம்.” என்றான் நாயக நடிகன்.

அவனுக்குமே சந்தோஷம்தான். ஆனால், ரதிமாலாவின் நடவடிக்கையில் அவனுக்குக் குழப்பம் இருந்தது. அவள் திடுமெனப் பத்திரிகைகளுக்கு அவள் பேட்டி கொடுத்ததில் இருந்தே உதயனுக்கு உள்ளூரக் குழப்பம்தான்.. எந்தத் தைரியததில் அவள் இப்படி  நடந்து கொண்டாள்?

அவனே அறியாத ஏதோ இருக்கிறதா? அது என்ன?

“புலி பதுங்குவது பாய்வதற்கே” என்று சொல்வார்கள். அது உண்மையே என்று ரதிமாலா நிரூபித்தாள்.

ஒரு பத்து நாட்கள் டீவிக்குப் பேட்டி, பத்திரிகைக்குச் செய்தி என்று எதுவுமே இல்லாதிருந்தது.

அதன்பின்,  குடும்பக் கோர்ட் ஒன்றில், உதயராஜன்  தன்னை ஏமாற்ற முயற்சிப்பதாக அவன் மேல் வழக்குத் தொடர்ந்திருப்பதாக ரதிமாலா அறிவித்தாள். .

வலுவான முகாந்திரம் காட்டப்பட்டு இருப்பதால் அந்த வழக்கை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தாள். சும்மா அல்ல. ஒரு மிகப் பெரிய “பிரஸ்மீட்”டை ஏற்பாடு செய்து அதில் அறிவித்தாள்.

சின்ன, பெரிய பிராந்தியச் சேனல்கள், பத்திரிகைகள் எதையும் விடவில்லை.

உதயராஜன் செய்யும் தொழிலைக் கருத்தில் கொண்டு கைது செய்வதைக்  கோரவில்லை என்றும் அவளது பெருந்தன்மை உணர்ந்து, நல்ல முடிவெடுக்கும்படி உதயனுக்கு ஆலோசனையும் கூறினாள்.

அப்படி என்ன அடிப்படை ஆதாரம் இருக்கக் கூடும் என்று அறிவதற்காக தன் தொழில் தொடர்பான அனைத்தையும் கவனிக்கும் வக்கீலுடன் உதயராஜன் நேரிலேயே சென்றான்.

ரதிமாலா கோர்ட்டில் கொடுத்திருந்த ஆதாரம் என்னவென்று அறிந்ததும் உதயன் நடந்துகொண்ட முறை, வக்கீலுக்குக்

குழப்பத்தைத் தந்தது.

“ஹே, இது என்ன பெரிய . . .” என்று அலட்சியமாகத் தொடங்கியவனின் பேச்சு சட்டென நின்றது.

அவன் மனதில் என்ன யோசனை ஓடியதோ?

வியப்பு, ஏளனம், கோபம், திகைப்பு எல்லாம் வடிந்து, அவனது முகம் பாராங்கல்லாக இறுகிப் போயிற்று.

அவனாக எதுவும் சொல்வானோ என்று எதிர்பார்த்தால், உதயராஜன் ஒன்றுமே பேசவில்லை.

சிறு அமைதியின் பின், “உதயன் சார், இந்த விவரம் அறிந்துகொண்டு நேரே வீட்டுக்கு வருமாறு அம்மா சொன்னார்களே!” என்று அவனுக்கு நினைவுறுத்தினார்.

சின்னதாக ஒரு மூச்சை வெளியிட்டுவிட்டு, “நீங்கள் போங்கள் சார். நா . .ன் . .எனக்குச் சற்று நேரம் தனிமையில் இருக்க வேண்டும். அதனால் . . .” என்றவன் வெளியே சிறு ஆரவாரத்தைக் கவனித்து, “குருநாதன், வெளியே விஷயம் கசிந்து மீடியா நிருபர்கள் வந்து சேரத் தொடங்கிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். நல்லவேளையாக உங்கள் காரில் வந்தோம். என்னை . . . வழியில் வினீதனின் அலுவல் இடத்தில் இறக்கி விட்டுவிட்டுப் போய்விடுங்கள்.” என்று எழுந்தான்.

அவன் காரிலிருந்து இறங்குமுன், “அம்மாவிடம் என்ன சொல்வது?” என்று குருநாதன் சின்னக் குரலில் வினவினார்.

மீண்டும் முகம் கல்லாகிவிட, “நீங்கள் பார்த்து அறிந்ததைச் சொல்லுங்கள். எப்படியும் டீவியில், மாலைப் பத்திரிகைகளில் எல்லாம் வரத்தானே போகிறது? முன்னதாகக் தெரிந்துவிட்டால், அதைப் பார்க்கும்போது இன்னமும் தயாராக இருப்பார்கள்.” என்றான் அவன்.

“ஆனால் சார் இதற்கு இப்போதைக்கு . . “ என்று இழுத்தார் அவர்.

கண் மூடித் திறந்து, “ஒன்றும் செய்வதற்கில்லை. நீங்கள் கிளம்புங்கள்.” என்றான் அவன் உணர்ச்சி காட்டாத குரலில்.

கதவைத் திறக்கும் விசையை அழுத்தாமலே, “அம்மா வருத்தப்படுவார்கள், உதயன்.” என்று மேலும் எடுத்துச் சொல்ல முயன்றார் அவர்.

“படுவார்கள்தான் குருநாதன். ஆனால் அதற்காக இன்னொருத் . .இன்னொருவர் வாழ்வை நாசப்படுத்த முடியாது. நீங்கள் போங்கள். நீங்கள் பார்த்ததை அம்மாவுக்குத் தெரிவியுங்கள். நான் வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. . .கிளம்புங்கள்.” என்று சற்று அழுத்தத்துடன்

அவன் கூறவே, அவனை இறக்கி விட்டுவிட்டு அவர் மட்டும் கிளம்பிச் சென்றார்.

இவன் வந்திருப்பதை அறிந்ததும் ஓடோடி வந்து, கேள்வியாக நோக்கிய நண்பன் வினீதனிடமும் உதயரூபன் எதையும் விவரித்துச் சொல்லவில்லை.

“என்னைப் பற்றி உனக்குத் தெரியும். ஆனால் ஒற்றை விரலைக் கூட அசைக்க முடியாமல் வசமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறேன். பாதகி! அன்று வெளியே போகிறபோது ஒரு மாதிரி மையல் சிரிப்புடன் பார்த்தாள். மறுபடியும் மயக்க முயற்சிக்கிறாள் என்று எண்ணினேன். ஆனால் சிசிகாமிரா பற்றி அவளுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் போல! எப்படி, என்ன ஆனாலும் அவள் கேட்கிற திருமணம் நடக்காது. பெரும் பணம் கொடுத்துதான் மீள முடியும் என்று தோன்றுகிறது. அப்படியேனும் மீண்டாக வேண்டும். ஆனால் பணத்தைக் கொடுத்துத் தப்பி வந்தாலும் அம்மாவை எப்படி, என்ன சொல்லிச் சமாதானப்படுத்துவது? ஒன்றும் புரியவில்லையடா!” என்று கலங்கினான்.

வக்கீல் வந்து விவரம் தெரிவித்த பிறகு, தயாகரி சற்று நேரம் எதுவுமே பேசவில்லை.

அடிபட்டு விழுந்த பறவை போல அந்தத் தாயின் முகத்தைப் பார்த்த சுமனசியால் அதைத் தாங்க முடியவில்லை.

அதை மட்டுமல்ல. வக்கீல் சொன்ன விவரங்களையுமே.

வலியை அடக்கிக்கொண்டு, ஒரு டம்ளரில் குளிர் நீர் எடுத்துப் போய் தயாகரியின் முன் வைத்தாள்.

வக்கீலுக்கும் பழச்சாறு கொண்டு போய் வைத்தாள்.

அங்குமிங்கும் நடந்து இதைச் செய்தபோதெல்லாம் உள்ளூரத் தீ மாதிரி அவளுக்குள் எரிந்துகொண்டே இருந்தது.

ஒன்றும் செய்ய முடியாது என்றால் என்ன அர்த்தம்?

அவனை நம்பினாளே! அன்றைக்கு அந்த ரதிமாலாவிடம் எவ்வளவு உறுதியாகப் பேசினான். பிறகும் சொன்னானே!

எல்லாமே நடிப்பா? தொழிலில் கற்றதை வீட்டிலேயே காட்டிவிட்டானே!

அவனை முழுதாக நம்பியிருந்தால் என்ன மாதிரிப் பண்ணிவிட்டான் என்று கொதித்தாள்!

இதையே எதிரொலிப்பது போலத் தயாகரியும் அரற்றினாள்.

“எனக்கு சத்தியம் செய்திருந்தான். அந்த ரதிமாலா கண்டபடி

கேவலமாகப் பேட்டிகள் கொடுத்தபோது கூட, நான் அதை நம்பவில்லையே, குருநாதன்! அவனும் எப்படிப் பேசினான்? என் மகன் இப்படி நடந்திருப்பான் என்று இன்னமும் என்னால் நம்பவே முடியவில்லை. சும்மா சொன்னால் . .அவள் சத்தியமே செய்தால் கூட நம்பியிருக்க மாட்டேன். அவள் ஒரு ஹோட்டல் சிசி கேமராவில் எடுத்த வீடியே கிளிப்பையே சாட்சியாக வைக்கிறாள் என்கிறீர்களே, குருநாதன்! அறைக்குள் போனவள் பாதி ராத்திரி தாண்டும் வரை . . .அங்கேயேதானே இருந்தாள் என்றால் . . . என்ன கேவலம்!"

சட்டென சுமனசிக்கு, அவள் அறிந்த அந்த முதல்நாள் நினைவு வந்தது.

அன்றைக்கு இந்த ரதிமாலாவைப் பிடிவாதமாக எப்படி வெளியே அனுப்பி வைத்தான்!

இப்போதானால் . . . அப்போது வெளியே அனுப்பியவன் பிறகு அவளிடம் சாய்ந்துவிட்டான் போலத் தெரிகிறதே என்று வேதனையுடன் எண்ணினாள் அவள்.

அன்று கூட அவள் அங்கே இல்லாமல் போயிருந்தால் வேறு மாதிரி கூட நடந்திருக்கக் கூடுமோ? சிறு சந்தேகம் காட்டிக் கேட்டதற்குக் கூட, எப்படிக் கிண்டலாகப் பதில் சொல்லி அதை நீக்கினான்!

நினைக்கும்போதே நெஞ்சுக்குள் வலித்தது அவளுக்கு. வலியை விட தீ எரிவது போலக் காந்தல்!

வக்கீல் ஏதோ பேசுவது காதில் விழுந்தது.

"ஒரே ஒரு வீடியோ கிளிப்தான், மேடம். கூடவே எனக்கு ஒரு சின்ன சந்தேகம். உதயன் சார் பக்கம், இதை மறுப்பதற்கு வேறே சாட்சி இருப்பது போலத்தான் தெரிகிறது. ஆனால் அந்தப் பெண்ணின் பெயர் கெட்டுவிடும் என்று பேர் சொல்ல மறுக்கிறார் என்று தோன்றுகிறது . . . " என்று அவர் முடிக்குமுன் தயாகரி வெகுண்டாள்.

"என்னது? இன்னொரு பெண்ணா? அப்போதும், அந்த இரவிலும் உதி ஒரு பெண்ணோடுதான் இருந்தானாமா? மகாக் கேவலம்! அவள் ரதிமாலா இல்லை என்றால் எல்லாம் சரியாகிவிடுமா? அவள் எந்தப் பெண்ணாக இருந்தால் என்ன, குருநாதன்? என் மனமே உடைந்துவிட்டது." என்றாள் உதயனைப் பெற்றவள் மிகுந்த வருத்தமும் கோபமுமாக.

சுமனசியின் மனது முரண்டியது. அவளும்தான் ஒரு நாள் அவனது அறையில் இருந்தாள். என்ன தப்பு நிகழ்ந்தது? அது போலவே இதுவும், இந்தப் பெண் விஷயமும் இருந்திருக்கலாமே

என்று அவளது மனம் உதயரூபனுக்காக வாதாட முயன்றது! வாதாடியது.

ஆனால் ஒரே விஷயம் திரும்பத் திரும்ப எப்படி நடக்கும்? கற்பனையில் தவிர?

அத்தோடு, ரதிமாலாவின் பத்திரிகைப் பேட்டி, அவளது உயிர்நிலையிலேயே ஓங்கி அறைந்தது.

அவர்கள் இருவருக்கும் நல்ல கெமிஸ்ட்ரி உண்டு என்றாள் ரதிமாலா.

“எங்கள் படங்கள் எப்படிப்பட்ட பிரம்மாண்டமான வெற்றிப் படங்கள்! சற்று யோசித்துப் பாருங்கள். எங்களுக்குள் ஒன்றுமே இல்லாமல் அப்படி நடப்பு போல நடிக்க முடியுமா?” என்று கேட்டாள் அவள்.

“ஆனால் யாரோடு நடித்தாலுமே, நீங்கள் எப்போதுமே காதல் காட்சிகளில் பிரமாதமாக நடிக்கிறவர்கள்தானே?” என்று கேள்வி கேட்ட நிருபர் ஒரு பெண்ணாக இருந்தது ரதிமாலாவுக்கு வசதியாகிப் போயிற்று.

“அதில் வேறுபாடு இருக்கிறது. ஆனால் அதை ஒத்துக்கொள்ள உங்களுக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. ஒரு வேளை, உனக்கும் உதயனிடம் மயக்கமா? வாய்ப்புக் கிடைத்தால் உதயனோடு ரொம்பவே நெருங்கி, அதாவது என்னை விடவும் ஒட்டி நடிப்பீர்கள் என்று தோன்றுகிறதே, அப்படித்தான் ஆசையா?” என்று ரதிமாலா தரம் இறங்கிக் கேட்டுவிட, அந்தப் பெண் முகம் சிவந்து ஒதுங்கி, விலகிப் போயேவிட்டாள்.

சந்தோஷமாக ரதிமாலா பேட்டியைத் தொடர்ந்தாள்.

“பல காலமாகவே, வெளியூர்ப் படப்பிடிப்புக்குப் போனாலே இதுதான் பழக்கம். இரவில் வெகு நேரம் இரண்டில் ஓர் அறை காலியாகவே கிடக்கும்!” என்றாள் பரவசமாக.

என்ன தைரியம்! என்ன கேவலம்! யார் யார் என்னென்ன நினைத்தார்களோ?

சில வினாடி அமைதியின் பின், ஒரு நிருபர் கேட்டார். “ஏன் மேடம், இதை நீங்கள் தப்பாக உணரவே இல்லையா? நம் கலாசாரம் பற்றி எண்ணிப் பார்க்கவே இல்லையா?”

சட்டெனத் திரும்பி அவரைக் கொத்துவது போலப் பார்த்தாள் ரதிமாலா. “என்ன சார் கலாசாரம்?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

“நாங்கள் இருவரும் மணம் செய்து கொள்வதாக இருந்தோம். மனதளவில் இணைந்தவர்கள் மற்றபடியும் இணைவதில் தப்பு என்ன?

அகநானூறு பாடல்களைப் படித்துப் பாருங்கள். நம் கலாசாரம் பற்றி உங்களுக்கும் புரியும். என்னுடைய ஒரு பயங்கர விசிறி. அதைச் சொல்லி என்னிடம் கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சினார். நடிக்கிற காலம் முடிகிற வரை மறைவாக வைத்துக் கொள்ளலாம் என்று என் காலிலேயே விழுந்தார். அரபு நாட்டுப் பணம்! பல நூறு கோடிகளில் புரண்டிருக்கலாம்! ஆனால் நான்தான் உதயராஜுக்காக அவனை மறுத்தேன். ராஜீன் இஷ்டம் போலெல்லாம் ஆடினேன். " என்றாள் மறுபடியும் ஒரு பரவசத் தோற்றத்துடன்.

"ஆனால் மேடம், இப்போது உங்களை உதறிவிட்டார் என்கிறீர்களே! " என்று சற்றுக் கிண்டலாக ஒரு குரல் கேட்டது.

ரதிமாலா தயங்காமல் பதில் சொன்னாள். "வண்டு போலக் காரியம் முடிந்ததும் பறந்துவிடலாம் என்று நினைத்திருப்பார்! ஆனால், என்னிடம் ஒருபோதும் அது நடக்காது. இந்த சாட்சியத்தை நான் கொண்டு வந்ததில் இருந்தே அது உங்களுக்குப் தெரிந்திருக்கும்! ஏன், உதயனுக்குமே இப்போது தெளிவாகப் புரிந்திருக்கும்!"

"எப்போதுமே இப்படிக் கூத் . . இப்படி இணைந்திருப்பது வழக்கம் என்கிறீர்கள். ஆனால் சாட்சியாக ஒன்றே ஒன்றை மட்டுமே கொண்டு வந்திருக்கிறீர்களே!"

"ஒரு பானைச் சோற்றுக்குப் பதமாகப் பார்ப்பது ஒரே ஒரு சோறைத்தானே? இது ஒன்றே போதும் என்று எண்ணினேன். இதன் உண்மைத்தன்மை பற்றி அந்த ஹோட்டலிலேயே கேட்டுக் கொள்ளலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை!" என்று முடித்தாள் அவள்!

டீவி பத்திரிகை எதைத் திருப்பினாலும் இதே செய்தி!

சிசி காமிராப்பதிவில் இருந்து ஒரு படம் என்று ஒரு பத்திரிகையில் எடுத்துப் போட்டிருந்தார்கள்.

அறைக்கு வெளியே ரதிமாலா நின்று கொண்டிருப்பது போலப் படம். சொக்கும் முறுவலோடு. அறை எண் என்று அம்புக் குறியிட்டு, நடிகர் உதயராஜன் அன்று தங்கியிருந்த அறை என்று குறித்திருந்தார்கள்.

கசப்புடன் பார்க்கும்போதே, "பத்திரிகையைத் தூர எறி!" என்று தயாகரியின் அதட்டல் உரத்து ஒலித்தது.

அப்படியே பத்திரிகையை மடக்கி எடுத்துத் தூக்கிப் போடப் போனவளுக்கு அதன் தலைப்புச் செய்தி கண்ணில் பட்டு உறுத்தியது.

பாராட்டுவிழாக் கொண்டாட்டம் இரவிலும் தொடர்ந்ததா

என்று எதுகை நலத்தோடு எடுத்துப் போட்டிருந்தார்கள். “விவரத்துக்கு மூன்றாம் பக்கம் பார்க்க” என்றிருந்தது.

பாராட்டு விழா? அந்த வார்த்தை ஏனோ சுமனசியின் மனதில் அழுத்தமாக ஒட்டிக் கொண்டது.

# அத்தியாயம் - 11

பாராட்டு விழா!

தயாகரி மிகுந்த வெறுப்பில் இருப்பது சுமனசி அறிந்ததே. எனவே அப்போது பத்திரிகையைப் புரட்டிப் பார்க்க இயலாது. அவசரமாகப் பத்திரிகையை மடக்கி, சோஃபா குஷனுக்கடியில் வைத்து விட்டு மற்ற வேலைகளைப் பார்க்கப் போனாள் அவள்.

எதற்காக இந்த ஒரு வார்த்தையில் சுமனசி பரபரப்படைய வேண்டும்?

அவள் உதயனைச் சந்தித்தது அவனது ஒரு பாராட்டு விழாவில் போது என்பதாலா? ஆனால் அதனால் என்ன பயன்?

அதற்கும், இதற்கும் தொடர்பு இருக்கவே வழியில்லையே!

தன் கூற்றுக்கு ஆதாரமாக சிசிகாமிரா பதிவையே ரதிமாலா கொடுத்திருக்கிறாளே! மேலே யோசித்துப் பார்க்கக் கூட என்ன இருக்கிறது?

பைத்தியக்காரத்தனம்தான். ஆனாலும் ஆசையை அடக்க மாட்டாமல், சிறு தனிமை கிடைத்ததுமே சுமனசி அந்தப் பத்திரிகையைத்துப் பார்த்தாள்.

நடுங்கும் விரல்களால் மூன்றாம் பக்கத்தைத் திருப்பினால் சில வினாடிகள் தலைப்பில் இருந்து அவளால் பார்வையை எடுக்கவே முடியவில்லை!

“திருச்சி பாராட்டுவிழாக் கொண்டாட்டம். தனியறையிலும் தொடர்ந்தது . .” என்று அதன் கீழ் ரதிமாலாவின் கவர்ச்சிகரமான போஸ் ஒன்று.

அதன் பக்கத்தில் . . . மறக்க முடியாத திருச்சிப் பாராட்டு விழா! என்று தொடங்கி, எப்படி அந்த விழாவுக்கு அவளும் ஆசையாகச் சென்றிருந்தாள். தனியறையில் இன்னும் . . இன்னும் நடந்தது பற்றி ரதிமாலா என்னென்னவோ சொல்லியிருந்தாள்.

அதைப் படித்துப் பார்க்கக் கூட சுமனசியால் முடியவில்லை!

ஆனால் இந்தப் பாராட்டுவிழா எப்போது நடந்தது? குறிப்பாக என்றைக்கு என்று அறிந்தே தீர வேண்டும் என்ற உந்துதல் சுனாமி அலை போலத் தீவிரமாக அவளுள் எழ, முதலில் படிக்க மாட்டாமல் ஒதுக்கியதை ஒவ்வோர் எழுத்தையும் கவனமாக வாசித்துப் பார்த்தாள்.

கடவுளே! அன்றுதான்! அதே பாராட்டு விழாதான்!

சுமனசி அங்கே இருந்த நாள்!

அன்றைக்கு . . .ரதிமாலா சொல்வது போல அன்று எதுவும் நடக்கவில்லையே!

அப்படியானால் ரதிமாலா காட்டும் அந்த வீடியோ கிளிப் அவளால் தப்பாகத் தயாரிக்கப்பட்ட பொய்யானதா?

இருக்காது. அப்படி இருந்தால் அதை ஹோட்டல் நிர்வாகம் எப்படி ஒத்துக் கொள்ளும்? அங்கே சரிபார்க்கச் சொல்லியிருக்கிறாளே!

அதுவும் உதயராஜனும் பெரிய நடிகனாக இருக்கும்போது, அவர்கள் எப்படிப் பொய் சொல்வார்கள்?

அவனது அறை எண் வேறு தெளிவாகத் தெரிகிறதே!

ஆனால் அவளும் அவனது அறைக்குள் வந்தாள்தானே? வெகு நேரம் இருக்கவும் செய்தாள். கடைசியாக வேலைக்காரியை ரூபன் வரவழைத்துவிட்ட பிறகுதானே வேறு வழியில்லாமல் போனாள்!

ஆனால் அறையினுள்ளே நடந்ததாக அவள் சொல்வது முழுப் பொய்!

திடுமென சுமனசியின் இதயம் ஒரேயடியாகக் குதிக்கத் தொடங்கியது!

தனக்குச் சாதகமான ருசுவென்று ரதிமாலா காட்டியிருப்பது, இந்த ஒரே ஒரு வீடியோ! “ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்று கதை விட்டவளிடம் இந்த அளவு காட்டக்கூட, வேறு எதுவும் இல்லை!

ஓஹோ! அப்படியானால் . . .என்று உள்ளம் கூத்தாடத் தொடங்கும்போதே சுமனசி அதற்குக் கடிவாளமிட்டுக் கட்டுப்படுத்தினாள்.

அதெல்லாம் பற்றி யோசிக்கிற நேரம் இதுவல்ல. இந்தச் சிக்கலில் இருந்து உதயரூபனை விடுவிப்பது எப்படி என்று, முதலில் அதைப் பார்க்க வேண்டும்!

இப்போதைக்குத் தெளிவாக விஷயம், அங்கே, அந்த ஹோட்டலில் ஒரு சிசிகேமிரா இருந்திருக்கிறது. யாருக்கும் தெரியாமல் எப்போதும் அது படமெடுத்துக் கொண்டும் இருந்திருக்கிறது.

அதை எப்படியோ அறிந்த ரதிமாலா தனக்கு வேண்டிய அளவு மட்டுமாக எப்படியோ வாங்கியும் இருக்கிறாள்! இரவில் வெகுநேரம் ரூபனின் அறையில் இருந்துவிட்டு, அதற்குப் பொய் வண்ணம் பூசி, அவனை மணக்க முயற்சிக்கிறாள்!

சட்டென சுமனசியின் கண்கள் கசிந்தன.

ஒரே வார்த்தையில் . . . சுமனசி அவன் அறையில் இரவு முழுதுமே இருந்தாள் என்கிற உண்மையைச் சொல்லியிருந்தால், இன்னொரு பெண் முன்னிலையில் இதெல்லாம் நடக்குமா என்ற ஒரே கேள்வியில் ரதிமாலாவின் வலையில் இருந்து உதயரூபன் எப்போதோ விடுபட்டிருக்கலாம்!

ஆனால் சுமனசியின் பெயர் கெட்டுவிடுமோ என்று அவன் அதைத் தவிர்த்திருக்கிறான்.

இதனால் அவன் பெயர் நாறிப் போயிற்று. பெற்ற தாய் தந்தையின் வெறுப்பு வேறு! இருவரும் அவனைத் துறந்தேவிட்டார்களே!

அவளுக்காக எல்லாம் சகிக்கும் இவனைப் போய் என்ன எண்ணிவிட்டாள்!

இப்போது உணர்ச்சி வசப்படக் கூடாது என்று மீண்டும் தனக்குத்தானே வலியுறுத்திக்கொண்டு சுமனசி யோசித்தாள்.

அந்த ஹோட்டலில் சிசிகேமிரா பயன்படுத்துகிறார்கள். சரி.

ஆனால், அதெப்படி அத்தனைநாள் அந்த வீடியோவை வைத்திருந்தார்கள்?

அவசரமாக அந்த ஹோட்டலுக்கு ஃபோன் செய்து பேசினாள்.

அலுத்த குரலில் யாரோ பதில் சொன்னார்கள்.

“மேடம், மீடியா என்றால் எல்லாம் சொல்லிவிட்டோமே. வைத்துவிடட் . . . “ என்று தொடர்பைத் துண்டிக்கப் போனார்கள்.

அவசரமாகக் குறுக்கிட்டு, “பொறுங்கள். இது மீடியா நிருபர் அல்ல. நான் உதயராஜனுடைய வக்கீலின் உதவியாள். எனக்குத் தேவை வேறு மாதிரி விவரம். சொல்லுங்கள். அதெப்படி அந்த வீடியோ இத்தனை நாள் வைத்திருந்தீர்கள்? வாராவாரம் அழிப்பது இல்லையா? ஒரு மாதம் வைத்திருந்ததாகச் சொன்னாலும் நம்பலாம். இது மூன்று மாதங்களுக்கு மேல் முடிந்துவிட்டதே! “ என்று கேட்டாள்.

“பொதுவான வழக்கம், அவ்வப்போது அழப்பதுதான் மேடம். ஆனால், பெரிய ஆட்கள் வந்து தங்கினால், அவர்கள் பற்றியதை அழிப்பது இல்லை. ஹோட்டலுக்கு ஒரு பெருமை இல்லையா? “ என்ற குரலில் மெய்யாகவே பெருமை தொனித்தது.

“முழுதுமா?”

“முழுதுமேதான், மேடம்! அவர்கள் சம்பந்தப்பட்ட

முழுவதுமேதான்.”

“நல்ல விஷயம்தான். இதே எப்போதும் தொடருங்கள்.” என்று மெச்சுதலாகக் கூறிவிட்டு உட்கார்ந்து தீவிரமாக யோசித்தாள்.

அரை நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு போய், வக்கீல் குருநாதனைச் சந்தித்தாள்.

சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வந்தாள். “சார், இந்தக் கேசை என்னால் உடைக்க முடியும். உடனே திருச்சிக்குப் போய் வர எனக்கு உதவி வேண்டும். நீங்களும் என்னோடு கூட வரவேண்டும்.” என்றாள்.

அவளை வியந்து பார்த்துவிட்டு, “நீ கெட்டிக்காரி என்பதோடு நல்ல பெண் என்றும் மேடம் சொல்லியிருக்கிறார்கள். என்ன விஷயம்? இந்த வேலையில் என் பங்கு என்ன என்று அறிந்து கொள்ளலாமா?” என்று வினவினார் அவர்.

மேடத்திடம் பணி புரிகிறவர்கள் எல்லோருமே கவனத்துடன் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான். வீண் பேச்சுக் கிடையாது. கூர்மை, தெளிவு . . என்று யோசனை ஓடும்போதே, “ஓஹோ, நானும் அப்படித்தானோ” என்ற எண்ணம் தோன்றி மனதில் இதம் பரப்பியது.

ஆனால் இந்த முயற்சியின் முடிவில் . . . இல்லை. அது பற்றி இப்போது நினைத்துப் பார்ப்பது தவறு. கூடாது.

வக்கீலை நேராகப் பார்த்து, “அது பற்றி இப்போது முழுமையாகச் சொல்ல முடியாது, சார். இந்தப் பணி, நான் மட்டுமே செய்யக் கூடியதுதான். ஆனால் ஏதேனும் தடை நேர்ந்தால் மட்டுமே, உங்கள் உதவி தேவைப்படலாம். அப்படித் தேவை ஏற்படும் பட்சத்தில் சென்னையிலிருந்து உங்களை வரவழைப்பதை விட, நீங்கள் அங்கேயே இருப்பது வசதியாக இருக்கும். கால தாமதம் ஆகாது. அதற்காகத்தான் உங்களையும் கூடக் கூப்பிடுகிறேன்.” என்றாள் அவள்.

பேச்சுத் தெளிவாக இருந்தபோதும், அவரது கேள்விகளுக்கு அதில் எந்தப் பதிலும் இல்லை. புரிந்துகொண்டு புன்னகை செய்த அவரும் அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை.

சொல்லப் போனால், சுமனசி யார் என்று அந்த ஹோட்டலில் தெளிவுபடுத்தக் குருநாதனின் உதவி அவளுக்குத் தேவையாகவே இருந்தது.

“தயா ஃபவுண்டேஷனி”ன் பெயர் அங்கே தெரிந்துதான் இருந்தது. அந்தப் பக்கம் மருத்துவ உதவி ஒன்று பெரிதாகச் செய்திருந்தார்கள். அவளுக்கு ஓர் அடையாள அட்டை இருந்தபோதும், அதன் நம்பகத் தன்மை குறித்து எடுத்துச் சொல்ல,

வக்கீல் தேவைப்பட்டார்.

தயாகரியின் பெயரைச் சொல்லி முழு வீடியோ காப்பியையும் சுமனசி வாங்கிக் கொண்டாள்.

வக்கீல் குருநாதனுக்கு ஏற்கனவே சிறு ஐயம் இருந்தது. இப்போது விஷயம் முழுதும் புரிந்துவிட, அவளை எச்சரித்தார். ஓரளவு தடுக்க முயற்சித்தார் என்றே கூறலாம்.

“பாரம்மா, நிலவரம் பற்றி முழுதாகத் தெரியாமல் இதில் இறங்குகிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது.

“உன்னைப் பற்றி மிகவும் மோசமாகப் பேச்சு வரும். கண்டபடியான கேவலமான கேள்விகள் வரும். பத்திரிகைகளில் . . நாசூக்காக எழுதுகிறவர்கள் உண்டு. பரபரப்புக்காக வேறு மாதிரிச் செய்கிறவர்களும் உண்டு. அதனால் இந்த முயற்சியை நீ விட்டுவிடுவது மேல் என்று எனக்குத் தோன்றுகிறது.” என்றார் அவர்.

சுமனசிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவருடைய கட்சிக்காரனைப் பெரும் பிரச்சினையில் இருந்து விடுவிக்கும் வாய்ப்பு. மோசமான திருமணம் அல்லது பெரும் பண இழப்பு! அதைத் தவிர்க்கும் இந்த வாய்ப்பை ஏன் விட்டுவிடச் சொல்லுகிறார்?

அவரது காரணம் புரியாமலே, அவள் தன் முடிவைச் சொன்னாள்.”என்ன சொன்னாலும் சொல்லட்டும் சார். எதையும் கேட்க நான் இங்கே இருக்க மாட்டேன். வழக்கு விவரம் கேட்டுவிட்டு இந்த ஊரை விட்டே கிளம்பி விடுவேன்.” என்றாள் சிறு குரலில்.

“ஆனால் . . உன்னையே அழித்துக்கொண்டு இதை நீ எதற்காகச் செய்ய வேண்டும்?”

வக்கீலுக்குத் தன் காரணம் எதுவும் தெரியாது என்பது சுமனசிக்கு நினைவு வந்தது. முழுதும் கூற முடியாது என்றாலும் ஓரளவு சொல்வது அவசியமாகப் பட்டது.

தொண்டையைச் செறுமிக்கொண்டு அவள் சொன்னாள். “சார், அன்று உதயன் அறையில் இருந்த பெண் நான்தான் என்று ஊகித்திருப்பீர்கள். ஆனால் அதன் காரணம் தப்பானது அல்ல. என்னை ஒரு பெரும் இக்கட்டில் இருந்து காப்பாற்றித் தன் கூட அழைத்துப் போனார். அன்று திருச்சியில் எனக்குத் தங்குமிடம் இல்லாத காரணத்தால், அவரது ஸ்வீட்டிலேயே ஓர் அறையில் தங்க வைத்து, உணவும் அளித்து எனக்குப் பேருதவி செய்தார். நடுத்தெருவில் நாறிப் போகாமல் என்னைக் காப்பாற்றினார். அன்றையத் தினம் அந்த உதவிக்கு ஈடு இணையே கிடையாது. மனிதப் பிறவியாக இருந்துகொண்டு அவர் செய்ததற்குச்

சிறிதளவேனும் திருப்பிச் செய்ய வேண்டாமா? அதற்காகவே இந்தப் பணி செய்கிறேன்." என்றாள்.

இப்போதும் குருநாதன் அவளது உதவியைத் தடையற்று ஏற்கவில்லை.

"பாரம்மா, இது பற்றி நான் உதயனிடம் அனுமதி கேட்க வேண்டும். ஒருவேளை நீ வேறு விதமாக . . ." என்று அவர் இழுக்கும்போதே சுமனசிக்கு அவர் தடுக்க முயற்சிப்பதன் காரணம் விளங்கிவிட்டது.

அவரது பேச்சில் குறுக்கிட்டு, "நானும் வலை விரிப்பேனோ என்று பயமா, சார்? வாணலிக்குத் தப்பி அடுப்பு நெருப்பில் விழுவது என்பார்களே, அது போல ரூபனின் நிலை ஆகிவிடுமோ என்று அஞ்சுகிறீர்கள் அதுதானே? சத்தியம் சார். அது போல அஞ்சத் தேவையில்லை! அவரை விடுவித்துவிட்டு, நான் ஊரை விட்டே, கண்காணாத தூரத்துக்கே போய்விடுவேன். . .இதுவும் சத்தியமே." என்றாள் அவள் உறுதியான குரலில்.

காரை நிறுத்திவிட்டுத் திரும்பி அவளை நேராகப் பார்த்தார் அவர்.

என்ன புரிந்ததோ?

"ஆனால் வேறு வாழ்வு அமைவதைக் கெடுக்கக் கூடும் என்று உதயன் சார் . . . அதற்காகத்தானே உன் பெயரையே அவர் கூறவில்லை? அதை யோசித்தாயாம்மா?" என்று தணிந்த குரலில் வினவினார்.

பார்வையைச் சாலையில் பதித்து, "சார், அவருடைய உன்னதமான தாயின் மனம் அமைதியுறச் செய்வது மிக முக்கியம். அதைவிடவும், எந்தக் கேவலத்துக்கும் அஞ்சாத அந்த ரதிமாலாவிடமிருந்து தாயையும் மகனையும் காப்பாற்றுவது மிக மிக முக்கியம்! இது மட்டுமே அதற்கான ஒரே வழி. இதைச் சிறப்பாக எப்படிச் செயல்படுத்துவது என்று, அதை மட்டும் யோசியுங்கள் சார்." என்றாள் அவள் உணர்ச்சி எதையும் காட்டாத குரலில்.

குரலிலோ முகத்திலோ எந்த உணர்ச்சியும் காட்டாதிருக்க முயன்றதில் அவள் வெற்றியும் பெற்றாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் மரத்த குரலும் கற்சிலை போன்ற முகமும் கூட நிறைய உண்மைகளைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று, அவள் அப்போது உணரவில்லை.

மீண்டும் மறுப்பாகவே தலையசைத்தார் அவர். "உதயனின் நோக்கத்துக்கும் மதிப்புத் தர வேண்டும், சுமனசி. இதை மறைத்தால்தான் உனக்கு வேறு நல்ல வாழ்க்கை அமையும்

என்றுதானே . . .” என்றவரின் பேச்சில் தவிப்புடன் குறுக்கிட்டாள் அவள்.

“வேறு வாழ்வா? ஒருநாளுமில்லை.” என்றாள் நிராசை நிரம்பிய குரலில்.

அவள் முகத்தைப் பார்த்துவிட்டுக் குருநாதன் காரை எடுத்தார். மெல்ல ஓட்டியபடியே, “அம்மா, நீ ஏன் இதைச் செய்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. ஆனால் ஒன்றைத் தெரிந்துகொள். உதயனிடம் மனதைப் பறிகொடுத்தவர்கள் ஏராளம். ஏன், இந்த வழக்கே அதற்காகத்தானே? யோசி.” என்றார்.

உறுதியாக மறுத்தாள் அவள்.

“அப்படியில்லை சார். இல்லவே இல்லை. உண்மையிலேயே மனதுக்காகத்தான் இந்த வழக்கு என்றால் நான் இதில் தலையிட்டிருக்கவே மாட்டேன். அந்தப் பெண் ரதிமாலா நல்லவள் அல்ல. மேடத்துக்கு அவளை அடியோடு பிடிக்காது. அவளும் மேடத்தை வெறுப்புடன் பேசக் கேட்டிருக்கிறேன். கிராமத்தில் விழுந்து கிடக்காமல் இங்கே இருந்து மேடம் தொல்லை செய்வதாகப் பேசினாள். மேடம் பல்வேறு உதவிகள் செய்வதைக் கூட, பின்னாலே அவளுடையதாக ஆகப் போகிற பணத்தைப் பாழடிப்பதாகச் சொன்னாள். அவர்கள் வீணடித்த பணத்துக்கு ஒரு ஹெலிகாப்டரே வாங்கியிருக்கலாமாம். அவளுக்கு எவ்வளவோ உதவியாக இருந்திருக்குமாம்.

“இன்னும் பேசியிருக்கிறாள். தன்னால் யாரையும் மயக்க முடியும் என்று . .  ஆனால் அந்தப் பேச்சு. நமக்கு எதற்கு சார்? தேவையில்லை.

“தராதரம் தெரியாமல் இப்படிப்பட்டவளிடம் மகன் மாட்டிக் கொண்டு விட்டார்  என்று மேடத்துக்கு ரொம்பக் கோபம். பெரும் கவலையும். மேடம் எப்படிப்பட்டவர்கள் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

“உதயன் சாரின் தருமச் செயல்கள் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், அவரது சம்மதம் இல்லாமல் தாயார் மட்டுமாய் எவ்வளவு செய்ய முடியும் . . “ என்று கூறி வரும்போதே ஏதா உணர்ந்து குருநாதனைத் திரும்பிப் பார்த்தாள்.

வக்கீல் விசித்திரமாக நோக்குவதை உணர்ந்து என்ன என்று யோசித்தவளுக்குச் அந்தப் பார்வையின் பொருள் சட்டெனப் புரிந்தது.

அவளுக்கு அவன் செய்தது என்ன?

அனாதரவாய் நின்ற அவளை எப்படியோ போ என்று

அனுப்பாமல் தங்குமிடம் தந்து பசிக்கு உணவு கொடுத்து தாயிடம் வேலைக்கும் அமர்த்தினானே!

அவ்வப்போது கைக் காசு கொடுத்து, பெரிய தாதா மாதிரிக் காட்டி நன்றிக்கடன் பட வைக்காமல், அவளே உழைத்து உண்ண வகை செய்தான்!

இதை விடக் கௌரவமான தருமச் செயல் வேறு ஏது? இவ்வளவு காலம் இது புரியவே இல்லையே! மாறாக அவனைப் பற்றி ஆயிரம் தவறு நினைத்தது எவ்வளவு பெரிய பிழை!

எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறான்!

எல்லாம் திருப்பிக் கொடுக்கிற கொடுத்தாக வேண்டிய கடன் அல்லவா?

முதலில் அந்த ரதிமாலாவிடம் இருந்து அவனைக் காப்பாற்றியே தீர வேண்டும். இந்த முயற்சியில் அவளுக்கு என்ன நேர்ந்தாலும் அது பற்றி எண்ணிப் பார்ப்பது கூடத் தவறு!

தனது கட்சிக்காரருக்கு ஆதரவாகக் குருநாதன் சமர்ப்பித்த புதிய ஆதாரம் ரதிமாலாவின் கூற்றை முழுப் பொய்யாக்கிவிடவே, கோர்ட் அவள் தொடர்ந்த வழக்கைத் தள்ளுபடி செய்து, தவறான கருத்தை உருவாக்க முயன்றதற்காகக் கண்டனமும் தெரிவித்தது.

அடுத்து, இந்த விவரம் மக்களிடம் போய்ச் சேர வேண்டுமே!

ரதிமாலாவைப் போலவே, மீடியா நிருபர்கள் கூட்டம் ஒன்றுக்குக் குருநாதன் ஏற்பாடு செய்தார்.

உதயராஜன் பக்க ஆதாரமாக அன்றைய வீடியோவையே முழுமையாக வக்கீல் காட்டினார்.

ரதிமாலா வரும் முன்பாக உதயனும் அவளும் அறைக்குள் சென்றதும், மறுநாள் விடிகாலையில் இருவருமாக வெளியேறியதும்.

கலந்து ஆலோசித்தால் உதயரூபன் தடுத்து விடுவான் என்று உணர்ந்திருந்ததால், குருநாதனோ, சுமனசியோ அவனிடம் இது பற்றி மூச்சுக் கூட விடவில்லை.

சில தினங்களாக நண்பனின் இடத்திலேயே தங்கிவிட்ட உதயரூபன், அங்கிருந்துதான் இதைப் பார்த்தான்.

இடையிட்டுத் தடுக்க முயன்றால், வக்கீல், சுமனசி இருவருமே மொபைலை எடுக்கவே இல்லை.

ஏற்கனவே குருநாதன் தயார்ப்படுத்தி இருந்ததால், "நீ போனால் விஷயம் இன்னும் விபரீதமாகிவிடும்." என்று கூறி, வினீதன் நண்பனைத் தடுத்து நிறுத்தினான். இத்தனை நாட்கள்

அமைதியாக இருந்ததற்கு, பெரிய நடிகனான உதயராஜனின் பதில் அல்லவா?

பத்திரிகைக்காரர்கள் கூட்டம் பயங்கரமானதாக இருந்தது.

சுமனசியால் சமாளிக்க முடியுமா என்று குருநாதனே அஞ்சும் அளவுக்கு!

# அத்தியாயம் - 12

முதலிலேயே குருநாதனுக்குச் சற்றுப் பயம்தான்.

பத்திரிகை நிருபர்களுக்குக் கூர்மை அதிகம். கொக்கி போட்டுக் கேள்விகள் கேட்டு உண்மையை வெளிக் கொணர முயற்சிப்பார்கள். அவரவர் சார்ந்த மீடியாவுக்கு ஏற்றவாறு சிறப்பான முறையில் பரபரப்புச் செய்திகளை அனுப்புவதே அவர்களது குறிக்கோள். கடமையும் கூட.

காடுகளுக்குப் போய் மிருகங்களின் வாழ்வு பற்றிப் படமெடுப்பவர்கள், “அய்யோ இந்தப் புலி மானைக் கொல்லப் போகிறதே” என்று இரையாகப் போகும் மானைக் காப்பாற்றுவது கூடாது. அப்படிக் காப்பாற்றினால், அது இயற்கை நிலையை எடுத்துக் காட்டுவதாக இருக்காது.

அது போலவே, உண்மை அறிந்து வெளியிடும்போது, அதில் யார் மனம் எப்படி உணரும் என்று நிருபர்கள் யோசித்துக்கொண்டு இருக்க முடியாது.

சுமனசி அதிர்ந்து பேசிக் குருநாதன் அறிந்ததில்லை. இந்தச் சிறு பெண் எப்படி சமாளிப்பாளோ என்று அவர் கவலைப்பட்டார். நிருபர் சந்திப்பை நடத்த வேண்டாமோ என்று கூட யோசித்தார்.

ஆனால், ரதிமாலாவின் கேவலமான குற்றச்சாட்டுகள் போய்ச் சேர்ந்த அத்தனை இடங்களுக்கும், அவற்றின் பொய்மை பற்றிய புரிதலும் போய்ச் சேர வேண்டும் என்பதில் சுமனசி உறுதியாக இருந்தாள்.

வக்கீலே பாராட்டும் அளவுக்கு அதை நடத்தியும் காட்டினாள்.

பலப்பல கேள்விகள்! நாக் கூசாமல் கேட்டார்கள்தான்.

எத்தனை ஆண்டுகளாக இந்தப் பழக்கம்?

ஹோட்டலில் ஹீரோ தங்கும் சமயம் கூட இருக்க, எப்போதுமே போய் விடுவீர்களா?

நடிகருடைய தாயிடம் வேலை பார்க்கிறீர்களாமே., அம்மாவும் இதற்கு உடந்தையா? இதற்கும் சேர்த்துதான் ஊதியமா?

ரதிமாலா மாதிரி யாரிடமாவது மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காகவோ? கண்ட பேரோடு பழகி ஏதேனும் நோயை இழுத்துக் கொள்ளக் கூடாது என்று உங்களையே அனுப்புவார்களா?

இது போன்ற கேள்விகளில் உள்ளம் கூசி நடுங்குகையில், உதயனைப் பற்றி சுமனசிக்கு இன்னொரு தெளிவு வந்தது. அந்த

முதல்நாளில் இதிலிருந்து, இப்படிப்பட்ட பல மாதிரியான கேள்விகளில் இருந்து காப்பாற்றவே, அவன் அவளை இழுத்துப் போயிருக்கிறான்!

கேரக்டர் அஸாசினேஷன்! நற்பெயரைக் கொலை செய்கிறார்கள். நெஞ்சு காலியாவது போன்ற உணர்வு! மூச்சு முட்டியது. உட்கார்ந்து ஓ என்று அழுதால் அடைப்பு திறக்கக் கூடும்.

ஆனால் இப்போது அவளுக்கு நிமிர்வு தேவை. அழக் கூடாது. எதற்கும் பயந்து, கொடுக்க வேண்டிய விளக்கத்தை விட்டுவிடக் கூடாது. அதற்கான வாய்ப்பையும் சொதப்பி விடக் கூடாது!

பெரிய மூச்செடுத்து, இல்லாத அமைதியைக் காட்டி சுமனசி பேசலானாள்.

“வீடியோ பார்த்தீர்களே, அன்று என்ன நடந்தது என்று முதலில் நான் சொல்லி விடட்டுமா? அதன் பிறகு உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன். அந்தச் சமயத்தில், என் வாழ்வில் பெரும் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. ஊரை விட்டு வெளியேறி வந்து கூட்டத்தில் இருந்து சற்று ஒதுங்கி நின்றேன். ஸ்லாம் புக்கில் கையெழுத்து வாங்குவதற்க்காகக் காத்து நிற்பதாகக் கருதி, உதயராஜன் காரில் இருந்து இறங்கிக் கேட்டார். நான் பதில் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே ஒரு வெளிச்சம் . .அது ஃப்ளாஷ் வெளிச்சம் என்று கண்களைத் திறக்க முடியாமல் கூசும் இப்போது எனக்கும் தெரிகிறது. இந்த கிராமத்துப் பெண் பத்திரிகைக்காரர்களிடம் மாட்டிக்கொண்டு முழிக்கும்படி விடக் கூடாது என்ற நநல்ல எண்ணம் உதயன் சாருக்கு இருந்திருக்க வேண்டும். பாருங்கள், நீங்கள்தான் என்னென்னவோ கற்பனை செய்யக் கூடக் கூசும் படியாகக் கேட்கிறீர்களே.

“ஆனால் உங்கள் மேலும் தப்பில்லை. “ராட் ரேஸ்” என்பார்களே அதுபோல, உங்கள் தொழிலிலும் பலத்த போட்டி. பரபரப்பாக எதையேனும் கொடுத்தாக வேண்டிய கட்டாயம்! ஆனால், அப்போது கிராமத்துப் பெண்ணாக இருந்த என்னால் அதைப் போன்ற கேள்விகளைச் சமாளிக்க இயலாது என்று கருதி, சார் என்னைக் கூட்டிச் சென்றார். . .”

“இப்போது உங்களால் சமாளிக்க முடியும் என்று சாட்சி சொல்ல அனுப்பினாரா?” என்று ஒரு குரல் தெளிவாகக் கேட்டது.

“இல்லை சார்.” என்றாள் அவள் அமைதியாகவே. “என்னை உதயன் சார் அனுப்பவில்லை. சரியாகச் சொல்வதானால் வக்கீல் சார் தவிர யாருக்குமே, இநதப் பேட்டி பற்றித் தெரிவிக்கவே இல்லை. ஆனால் எனக்கே உள்ளூர ஒரு தைரியம். மூன்று மாதங்களாகத் மகளிர் விடுதியில் தங்கி வேலை பார்த்து நல்லபடியாக வாழ்வதால்

ஏற்பட்ட திடமாக இருக்கலாம்.”

சற்றே வேறுபாடான ஒரு குரல் கேட்டது. “பாரம்மா, இப்படித் தனியே வீட்டை விட்டு வருகிற பெண்களுக்கு என்னென்ன நேர்ந்திருக்கிறது என்று தெரியுமா?”

“கேள்விப் பட்டிருக்கிறேன், சார். ஆனால் அப்படி எதுவும் எனக்கு நேரவில்லை என்பதுதான், இப்போது என் சாட்சியமே! அப்புறமும், அவருடைய தாயாரிடமேதான் என்னை அழைத்துப் போனார். அங்கேயும், அவர் கூடவே வந்து எங்களிடையே அறிமுகம் செய்து வைக்கவில்லை. “இங்கே ஒரு வேலைக்கு ஆள் எடுப்பதாகக் கேள்வி. வேலையைப் பெறுவது உன் சாமர்த்தியம்” என்று தனியாகத்தான் அனுப்பினார். மேற்கொண்டு பிழைப்பது உன் திறமை என்று அனுப்பியது போலவே, இந்த உதவி செய்தேனே என்று ஒரு நாளும் வந்து நிற்கவும் இல்லை. தாய் மகனின் உறவு பற்றி நான் அறிந்ததே ஒரு மாதம் கழித்து மேடத்துடைய பிறந்த நாளின் போதுதான். “

“அன்றைய விஷயம் பற்றி இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவை. அவர் உடனே உங்களைக் கூட்டிப் போனதும், நீங்களும் அவரை நம்பி அவரோடு கூடப் போனதும் . . . கொஞ்சம் விசித்திரமாக இல்லை?”

“தெரியவில்லை சார். அன்றைக்கு நான் இருந்த நிலை வேறு. அது பற்றி சாருக்குத் தெரியாது. எனவே, கொஞ்ச தூரம் போன பிறகு, வேறு பிரச்சினை இராது , இனி நீ போய்க்கொள் என்று, காரிலிருந்து இறங்கிக் கொள்ளத்தான் சொன்னார் ஆனால் இந்த ஊருக்கு நான் புதிது, எனக்குப் போக்கிடம் இல்லை என்று தெரிந்ததும், அவர் தங்கியிருந்த ஸ்வீட்டிலேயே தனியறையில் உள்ளே பூட்டிக்கொண்டு தூங்குமாறு சொன்னார். . . .”

“நம்பும்படியாக இல்லையே மேடம் . . அவரும் இளைஞர் நீங்களும் அழகிய பெண் . . . “ என்று ஒரு பெண் கேட்க, சுமனசி அவளை நேராகப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள்.

“என்னை அழகி என்று சொன்னதற்கு ரொம்பத் தாங்க்ஸ்மா. ஏனென்றால் அவ்வப்போது எனக்கு அதில் ரொம்பச் சந்தேகம் வந்துவிடும். . . இப்போது அன்றைய நிகழ்வுகளுக்கு வருவோமா? அவரது ஹோட்டல் அறைக்குக் கூட்டிப் போனார். நான் மிகுந்த பசியில் இருப்பது புரிந்து உணவு வரவழைத்துக் கொடுத்தார்

“காலையில் யார் கண்ணிலும் படாமல் போய்விடுவதாகவே ஏற்பாடு. ஆனால் சிசி காமிரா பற்றி அப்போது நினைக்கக் கூட இல்லை! அது பற்றி எனக்குத் தெரியாது . ..

“உங்களுக்கு என்ன ஊர் என்று சொன்னீர்கள்?”

மறுபடியும் முறுவலித்து, “அதை நான் சொல்லவே இல்லை சார். அந்த விவரம் இந்த வழக்குக்கோ உதயராஜன் சாருக்கோ சம்பந்தமே இல்லாதது. மேலும், அங்கே விசாரிக்கப் போனீர்கள் என்றால் எனக்கு வேண்டிய நல்லவர்களுக்கு வீண் தொல்லையாகி விடக் கூடும். விட்டுவிடுங்களேன், ப்ளீஸ்!” என்று கை கூப்பிக் கேட்டுக் கொண்டாள் அவள்.

மீண்டும் அன்றைய நிகழ்ச்சியைச் சொல்லத் தொடங்கினாள்.

“நான் உணவை உண்டு முடிக்கும்போதுதான் கதவைத் தட்டி, ரதிமாலா  அழைத்தார்கள். “யார் கண்ணிலும் படாமலேயே நீ போய்விடுவது உனக்கு நல்லது” என்று அந்த ஸ்வீட்டில் இருந்த அடுத்த அறைக்குள் உதயன்சார் என்னைப் போய்விடச் சொன்னார். நானும் அப்படியே செய்தேன். பிரச்சினை என்னவென்றால், முன் அறையில் நடந்த அனைத்தையுமே விருப்பம் இல்லாவிட்டாலும் ஒரு வார்த்தை விடாமல் கேட்கும் கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.”

“அவர்கள் என்ன பேசினார்கள்? “ என்று பல குரல்கள் கேட்டன.

மறுப்பாகத் தலையசைத்தாள் சுமனசி. “மன்னியுங்கள். அதை நான் சொல்வது நியாயம் அல்ல. நான் அங்கே இருப்பது தெரியாமல் அவர்களால் பேசப்பட்டது. அதை நான் கேட்க நேர்ந்ததே சற்று . .அசுசியான ஒன்று. அதை வெளியே சொல்வது ரொம்பவும் தப்பு. ஆனால் ஒன்று. ரதிமாலா கூறியது போல எதுவும் நடக்கவில்லை. அதுதான் இந்த வழக்குக்கு சம்பந்தப்பட்ட மிகவும் முக்கியமான விவரம். “

“ஒரு கேள்வி. வில்லியும் ஹீரோவும் பெரிதாகப் பேசப்படும் ஜோடி. வெற்றி ஜோடியும் கூட. நடிகை சொல்வது போலவும் நடந்திருக்கலாம்தானே? அன்றில்லாவிட்டாலும் இன்னொரு தினத்தில்?”

மற்ற அனைத்தையும் விட இந்தக் கேள்வி அவளுக்கு அதிகமாக வலிக்கத்தான் செய்தது.

எனினும் வலியைக் காட்டிக் கொள்ளாமல், “நானும் அப்படித்தான், அதாவது நீங்கள் சொல்வது போலவேதான் நினைத்திருந்தேன் அதனாலேயே இது பற்றி முதலில் எதுவுமே யாரிடமுமே நான் கூறவில்லை. ஆனால் குறிப்பாக அந்தத் தேதியை அவர்கள் சொல்லி அன்றைய சிசி காமிராப் பதிவையும் குறிப்பிட்டுக் கூறவும்தான் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. அன்று அவர்கள் சொன்ன மாதிரி எதுவும் நடக்கவே இல்லை என்பது எனக்கு உறுதியாகத்

தெரியும். இது . . . அதாவது, மறுக்க முடியாதது என்று அவர்கள் பெரிய சாட்சியமாகக் காட்டும் இதுவே பொய் என்றால், அவர்கள் சொன்ன எல்லாமே பொய்யாக ஏன் இருக்கக் கூடாது என்று தோன்றியது. அன்றையப் பதிவை எப்படி அடைந்தார்கள் என்று தெரிய வந்ததும் . .நான் அறையினுள் சென்றதும், பிறகு வெளியே வந்ததும்கூடப் பதிவாகி இருக்குமே என்று எண்ணி விசாரித்தேன். எல்லாமே பதிவாகி இருந்தது. நடிகர் சாரே அது பற்றித் தெரிவித்திருக்கலாம். ஆனால் ஒரு பெண்ணின் பெயர் கெட வேண்டாம் என்று எண்ணியது அவரது பெருந்தன்மை. கண்ணியம்." என்றாள் அவள்.

"பெருந்தன்மையோ . வேறெதுவுமோ? உங்களுக்கு ஆசை கொஞ்சமும் இல்லை என்றா சொல்லுகிறீர்கள்? இதற்கு நன்றிக் கடனாகவேனும் அவர் உங்களை ஏற்கலாமே என்ற ஆசை உங்களுக்கு உண்டுதானே?"

சுமனசி இரு கை கூப்பி மறுபடியும் வணங்கினாள்.

"இந்தப் பிரச்சினை பற்றி நான் அறிந்த அனைத்தையும் உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். பொறுமையாகக் கேட்டதற்கு மனமார்ந்த நன்றி. வணக்கம்." என்று விடைபெற முயன்றாள்.

விடாமல், "இன்னும் இந்த ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். மெய்யாகவே உங்களுக்கு உதயராஜன் மேல் ஆசை இல்லை என்றா சொலுகிறீர்கள்?"

எப்படிச் சொல்லுவாள்?

சுமனசி திணறும்போதே, வக்கீல் குறுக்கே வந்து தடுத்து விட்டார். "பாருங்கள், இந்த வழக்கு பற்றிய உண்மை தெரிவிக்கும் பத்திரிகை நிருபர் கூட்டம் மட்டும்தான் இது. உண்மை என்னவென்று தெரிவித்துவிட்டோம். அதை நீங்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் அலசி ஆராயலாம். ஆராய்ந்து உண்மை எதுவோ அதை எழுதலாம், ஒளி பரப்பலாம். ஆனால், உண்மை உரைத்ததற்காக ஒரு பெண்ணைத் தயவு பண்ணி வருத்த வேண்டாம். ப்ளீஸ்!" என்றார்.

சுமனசி தன் பொருட்கள் அடங்கிய பெட்டியோடு தயாராக இருப்பதைப் பார்த்த குருநாதனுக்குச் சற்று அதிர்ச்சியாகவே இருந்தது.

கண் காணாத இடத்துக்குப் போய்விடுவதாக அவள் சும்மாச் சொல்லவில்லை!

"எங்கே போகப் போகிறாய்?" என்று விசாரித்தார்.

"தெரியாமல் இருப்பது உங்களுக்குமே நல்லது வக்கீல் சார்.

ஆனால் நான் கோழை அல்ல. கண் காணாமல் போய் செத்துவிட மாட்டேன். “ என்று கிளம்பிவிட்டாள் அவள்.

சென்னை, திருச்சி இன்னும் அறிந்தவர்கள் இருக்கக் கூடிய இடங்களை விட்டு விலகி, மேற்கு நோக்கி மேட்டுப்பாளையம் வரை சுமனசி சென்றாள் . அங்கே ஓரளவு நல்லதாகத் தோன்றிய விடுதி ஒன்றில் அறை எடுத்துத் தங்கினாள்.

அந்த ஊரில் ஒரு வேலை தேடிக் கொண்டு, அங்கேயே வசிப்பது என்று திட்டமிட்டிருந்தாள். ஆனால் அறையில் போய் விழுந்தவளுக்குக் கை கால்களை அசைப்பது கூடக் கடினமாகத் தோன்றியது.

என்ன அவசரம் என்று படுத்துவிட்டவளுக்கு ஒரு நாள் முழுதுமே எழப் பிடிக்கவில்லை.

சோர்வு உடம்பில் இல்லை., மனதில்தான்., இப்படியே படுத்துக் கிடந்தால் சீக்காளியாகி விடுவோம் என்று புரியப் பிடிவாதமாக எழுந்து தயாராகித் தன் வேலை வேட்டையைத் தொடங்கினாள்.

முதல் நாளே வேலை கிடைத்துவிடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அடுத்த நாள் பணித் தேவைக்கான விளம்பரங்களைப் பார்ப்பதற்காகப் பத்திரிகை வாங்கப் போனால் “ஆட்டோகிராஃப்” என்று தலைப்பிட்ட பெரிய முதல் பக்க விளம்பரங்களோடு முக்கியப் பத்திரிகைகள் எல்லாமே தொங்கின.

அடுத்த வரி “வந்துவிடு கண்மணி.”

“ஹூம் என்ன விளம்பரம்” என்று வேலை காலி பக்கத்தைத் திருப்பப் போனவள், ஏதோ தோன்ற விளம்பரத்தை ஊன்றிப் படித்தாள்.

“கோராத ஆட்டோகிராஃப் போட்டு வாழ்க்கையைத் திசை மாற்றியவன் கேட்கிறேன். தயவு செய்து திரும்பி வந்துவிடு!”

படபடக்கும் நெஞ்சோடு முழுதும் பார்த்தால் விளம்பரத்தைக் கொடுத்தவன் உதயராஜனே!

கூடவே, “ஒருவேளை இப்போது நீ வராதுபோனால், உன் படத்தோடு அடுத்த விளம்பரம் வரும்!” என்று ஒரு மிரட்டலும் பொடி எழுத்துக்களில் போடப்பட்டிருந்தது!

எதற்கு இப்படி? செத்துக் கித்துப் போய்விடுவாள் என்று பயந்துவிட்டானா? அல்லது கஷ்டப் படுவாளே என்று கவலையா?

“ஒரு விளம்பரத்துக்கு எத்தனை லட்சம் தெரியுமா?” எனும் பேச்சுக் காதில் விழ, தன்னையறியாமல் அவளது கவனம் அங்கே சென்றது.

அதே விளம்வரத்தைக் காட்டித்தான் யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள். சில இளைஞர்கள் சேர்ந்து வந்திருப்பார்கள் போலும்.

“ஹீரோவில்லை? கொட்டிக்கிடக்கிற பணத்துக்குச் செலவு வேண்டாம்?” என்றான் இன்னொருவன்.

கணக்கிட்டுப் பார்த்தவளுக்கு மலைப்பாக இருந்தது.

தொடர்ந்து பேச்சு காதில் விழுந்தது.

“அவள் திரும்பிப் போகாதிருந்தால் நன்றாக இருக்கும்ப்பா.”

“என்ன மச்சீ சொல்லுகிறாய்? வக்கிரமாகப் பேசாதே! அந்த ஆள் கஷ்டப்படுவதில் நமக்கு என்ன நல்லது வரக் கூடும்?”

“பார் பச்சா, விளம்பரம் கொடுத்திருப்பவன் பசையுள்ள பார்ட்டி. அவள் திரும்பி வராவிட்டால் படத்தைப் போட்டுத் தேடுவான். நாமும் தேடி, அவளைக் கண்டுபிடித்தோம் என்று வை . . .”

“ஓ! தகவல் கொடுத்தால் ஏதேனும் பரிசு கிடைக்கும் என்கிறாயா?”

“அட யாருடா இவன்? அந்தப் பெண் நம் கண்ணில் முதலில் பட்டால், மறைத்து வைத்துக்கொண்டு, இவனிடம் பல லட்சம் கறக்கலாமே! லட்சமென்ன? கோடிகளையே கொட்டிக் கொடுப்பான்!”

ஓ1 இப்படிக் கூட நடக்கக் கூடுமே!

திகைத்துப் போன சுமனசி விழுந்தடித்துக்கொண்டுச் சென்னைக்குத் திரும்பிச் சென்றாள்.

அவள் முதலில் சந்தித்தது தயாகரியையே.

“என்ன? இப்படித்தான் பண்ணுவதா?” என்றாள் பெரியவள் அதட்டலாக.

“அது . . வந்து மேடம் . . “

“பிரமாதமான வேலை செய்திருக்கிறாய், பாராட்டலாம் என்று தேடினால் ஆளையே காணோம்.  போகட்டும் உதி வீட்டில்தான் இருக்கிறான் போய்ப்பார்.  . .பொறு. காரை எடுத்துப் போ. அதற்குமுன் உனக்கு இன்னொரு செய்தி. உன்னைப் பார்க்கவென்று இன்னும் கொஞ்சம் பேர் வந்து காத்திருக்கிறார்கள்.”

“யார்?” என்று திகைத்தாள் சுமனசி. “எனக்கு யாரும் . . ஓ சுந்தரி அக்கா! அன்றையப் பேட்டியைப் பார்த்துவிட்டு வந்திருக்க வேண்டும்! ஆனால் பாவம், அக்காவால் எப்படி வர முடிந்தது?” என்று கவலைப்பட்டாள்.

“கொஞ்சம் சிரமம்தான். ஆனால் துணைக்கு உன் அக்கா மாமியார், மாமனார், கணவர் எல்லோரும் . . .”

“ஐயோ! “ என்றாள் அவள் அச்சத்துடன்.

“எதற்கு ஐயோ?” என்று புன்னகை செய்தாள் தயாகரி. “உன் அக்காவுக்கு இது நாலாம் மாதமாம். வாரிசு வரப் போகிறது என்று சுந்தரியுடைய புகுந்த வீட்டார் அவளைத் தாங்கு தாங்கென்று தாங்குகிறார்கள். அவளுடைய கணவன் வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிறானாம். உன் அக்கா சந்தோஷமாக இருக்கிறாள். உன் கவலை மட்டும் இருந்ததாம். இப்போது அதுவும் நீங்கி நிம்மதியாக இருக்கிறதாம். ஆனால் அவர்களை அப்புறமாகச் சந்திக்கலாம். முதலில் என் மகனைப் போய்ப் பார்!” என்று சுமனசியை அனுப்பி வைத்தாள்.

உதயரூபனைப் பார்த்தபோது, சற்று நேரம் அவளுக்குப் பேச்சே வரவில்லை.

அவனுக்கும் அப்படித்தான் இருந்ததோ?

சில வினாடிகள் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, “ஹூம், இப்படியெல்லாம் விளம்பரங்கள் போட்டு அழைத்தால்தான் மேடம் திரும்பி வருவீர்களாக்கும்?” என்று கோபமும் சலுகையுமாகக் கேட்டான் அவன்.

விளம்பரங்களைக் குறிப்பிட்டதும், அவளுக்கும் வாய்ப் பூட்டு அகன்றது.

“ஏன் இப்படிச் செய்தீர்கள்? ஒரு நாள் மேடம் அலுவலகத்துக்கு வந்து பாருங்கள். உருப்படியாகச் செய்வதற்கு எத்தனையோ இருக்க, எதற்காக இந்த வீண் செலவு? கணக்குப் போட்டுப் பார்த்தபோது எனக்குத் தலை சுற்றி விட்டது! “ என்று குறைப்பட்டாள்.

“கணக்குப் போட்டவளுக்குக் காரணம் தெரியவில்லையாக்கும்? கடவுளே, இந்த மர மண்டைக்குள் விஷயத்தை ஏற்ற இன்னும் நான் எவ்வளவு பாடு பட வேண்டுமோ, தெரியவில்லையே!”

ஓரப் பார்வையாய் நோக்கி, “ஏன் பாடு படவேண்டும்?” என்று அப்பாவியாகக் கேட்டாள் சுமனசி.

பொறுமை இழந்து, சட்டென அவளை இழுத்து அணைத்தான் அவளுடைய ரூபன். “ஏன் என்றால், இதற்காகத்தான்!” என்று அழுந்த முத்தமிட்டான்.

சில வினாடிகளின் பின் நிமிர்ந்து, “என்னம்மா, இப்போதாவது புரிகிறதா?” என்று கண்ணில் சிரிப்புடன் அவன் கேட்க, “ரொம்ப ரொம்ப நன்றாகப் புரிகிறது.!” என்றவளின் கண்களும் முத்துப்

பற்களும் போட்டி போட்டுக்கொண்டு பிரகாசித்தன!